2013, March 16 - 30


எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் வெளியீடு

# சமகாலம்

Registered in the Department of Posts of Sri Lanka under No: QD/News/72/2013



## தமிழக மாணவர்களின் போராட்டம்





- புதிய பாப்பரசர் எதிர்நோக்கும் சவால்கள்
- நவதாராளவாதத்திற்கு சவால் விடுத்த ஷாவேஸ்
- மீண்டும் சூடுபிடிக்கும் மீனவர் பிரச்சினை
- நிழலுக்குள் இருந்து வெளியேவரும் உலகத்தமிழர் பேரவை

# தோட்டத் தொழிலாளர்களும் கூட்டு ஒப்பந்தமும்

| | | |
|---|---|---|
| INDIA..............IN₹ 50.00 | CANADA.......CAN$ 10.00 | USA..........US$ 10.00 |
| SRI LANKA....SLR 100.00 | AUSTRALIA...AUS$ 10.00 | UK............GB£ 5.00 |
| SINGAPORE...SG$ 14.00 | SWISS.............CHF 10.00 | EUROPE..EU€ 5.00 |

# New City Motors


## Link Lanka Technolagies




**லிங்க்**

இலவசம்

டெக்சி மீற்றர் உடன்
FM ரேடியோ
மீட்டர் டெக்சி Board, Sticker
USB பென் இனைக்கும் வசதி
MP3 பாடல் கேட்கும் வசதி
Remote Control
மூலம் இயக்கக் கூடிய விசேட வசதி







தவணைக் கொடுப்பனவு முறையிலும் Link Meterயை கொள்னவு செய்யலாம். (வரையறுக்கப்பட்ட காலத்திற்கு மாத்திரம்)

# New City Motors

## LINK LANKA Technologies

Office : 0112 690 744
Hotline : 0724 990 990
0723 333 933
Galle : 0114 345 960 - 4
Hatton : 0114 345 962

**Branches**
# 181, Araamiya Place, Dematagoda, Colombo - 09
#121/7c, Ragama Road, Kadawatha
#420/2, Matara Road, Magalla, Galle
Ambalangoda.



பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

# உள்ளடக்கம்


தமிழக மாணவர்களின் போராட்டம் - சென்னை மெயில் 10
எம்.காசிநாதன்

நிழலுக்குள் இருந்து வெளியே வரும் உலகத் தமிழர் பேரவை 22
குமார் டேவிட்

ஹியூகோ ஷாவேஸ் 26
பேராசிரியர் சுமணசிறி லியனகே

கூட்டு ஒப்பந்தமும் தோட்ட தொழிலாளரின் வேதனமும் 32
இரா. ரமேஷ்

மீண்டும் சூடுபிடிக்கும் மீனவர் பிரச்சினை 41
என்.சத்தியமூர்த்தி

புதிய பாப்பரசர் 46

மன்மோகன் சிங்கிற்கு தலையிடி தரும் இலங்கையும் இத்தாலியும் 50
எம்.பி.வித்தியாதரன்

மூன்றாவது வருடத்திற்குள் பிரவேசிக்கும் சிரியப்புரட்சி 54
வடா கான்ஃபார்

அறிவியல் களரி 57
டாக்டர் எம்.கே.முருகானந்தன்

ராஜ சுலோச்சனா 60

நகைச்சுவை சக்கரவர்த்தி ஜே.பி.சந்திரபாபு 62

கடைசிப் பக்கம் 64
பேராசிரியர் மா.கருணாநிதி






46



50




57

*Samakalam focuses on issues that affect the lives of people of*

எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் வெளியீடு

# சமகாலம்

2013, மார்ச் 16-30


10



22


26


41


54


60


64

*Sri Lanka, the neighbourhood and the world*

## ஆசிரியரிடமிருந்து...

# தமிழகமும் புதுடில்லியும்

ஜெனீவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் கடந்த வருடம் இதேகால கட்டத்தில் அமெரிக்காவினால் தீர்மானம் கொண்டு வரப்பட்ட போது நிலவியதைக் காட்டிலும் மிகவும் கொந்தளிப்பான நிலை தமிழகத்தில் இத்தடவை காணப்பட்டது. மாநிலத்தின் அரசியல் சக்திகளிடமிருந்து விடுபட்டவர்களாக மாணவ சமுதாயத்தினர் போராட்டத்தில் குதித்திருந்தமை ஒரு புதிய பரிமாணமாக அமைந்தது.

இலங்கை தொடர்பில் இந்தியா மிகவும் கடுமையான நிலைப்பாட்டை எடுக்கவேண்டுமென்று கோரிக்கை விடுத்த தமிழக சக்திகள் அத்தகைய நிலைப்பாடு ஜெனீவாவில் அமெரிக்காவினால் இத்தடவையும் கொண்டு வரப்பட்ட தீர்மானத்திற்கு கடுமையான திருத்தங்களைச் சேர்ப்பதன் மூலம் வெளிக்காட்டப்பட வேண்டுமென்று புதுடில்லியை வலியுறுத்தி நின்றன. ஆனால், அமெரிக்காவின் ஆரம்பத் தீர்மான வரைவையும் விட நன்கு மென்மையாக்கப்பட்ட ஒரு தீர்மானமே மீண்டும் ஜெனீவாவில் பெரும்பான்மை வாக்குகளினால் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இந்தியாவும் கடந்த தடவையைப் போன்றே இத்தடவையும் தீர்மானத்தை ஆதரித்து வாக்களித்திருக்கிறது.

இலங்கைத் தமிழர்களின் பிரச்சினை தொடர்பான தமிழக அரசியல் சக்திகளின் அக்கறைகளுக்கும் புதுடில்லியின் நிலைப்பாடுகளுக்கும் இடையில் இருக்கக்கூடிய முரண்பாடுகளை ஜெனீவா வாக்கெடுப்பு மீண்டுமொரு முறை வெளிக்காட்டியிருக்கிறது. இந்தியாவின் அணுகுமுறைகள் தொடர்பில் முறையான விளக்கத்தைப் பெறுவதற்கு சில அடிப்படை உண்மைகளைப் புரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும்.

இலங்கை இனநெருக்கடியுடன் தொடர்புடைய விவகாரங்களில் இந்தியாவின் அணுகுமுறைகள் தொடர்பில் கடந்த பல தசாப்தங்களில் பெறக்கூடியதாக இருந்த அனுபவங்களை இலங்கைத் தமிழர்கள் மாத்திரமல்ல, தமிழ்நாட்டுத் தமிழர்களும் இனிமேலும் கவனத்தில் எடுக்காமல் இருப்பது முறையானதல்ல. இது மிகமிக முக்கியமானதொரு விடயமாகும். இந்தியாவின் இலங்கைக்கொள்கையை வகுக்கும் செயன்முறைகளில் தமிழக அரசியல் சக்திகள் ஒரு போதுமே எதிர்பார்த்த செல்வாக்கைச் செலுத்த இயலுமாக இருந்ததில்லை. இலங்கையில் தமிழ் மக்கள் அனுபவிக்க வேண்டியேற்படுகின்ற அவலங்கள் தொடர்பில் தமிழக மக்கள்

(9ஆம் பக்கம் பார்க்க...)

# கடிதங்கள்













## உண்மை, புரிகிறது

அரசுக்கும் தமிழ்த் தலைமைகளுக்கும் கைகொடுக்கும் தெய்வங்களாக மேற்குலகும் ஐ.நா.வும் என்ற தலைப்பிலான பேராசிரியர் சி.சிவசேகரத்தின் கட்டுரை இலங்கைத் தமிழர் பிரச்சினையில் அக்கறைகாட்டும் மேற்குலகின் உண்மை நோக்கங்களைப் புரிய வைத்தது . இரண்டு தரப்பினருக்கிடையிலான பிரச்சினையில் மூன்றாமவர் தலையிட்டால் ஏற்படும் விளைவுகளைச் சுட்டிக்காட்டியிருந்தார். ஆரம்பத்தில் புலிகள் இலங்கை அரசுடனான பேச்சுவார்த்தையில் மூன்றாம் தரப்பின் மத்தியஸ்தம் தொடர்பில் வலியுறுத்தி பேச்சுவார்த்தையில் மூன்றாம் தரப்புடன் கலந்து கொண்டார்கள். இதனால் எமது பிரச்சினை சர்வதேசத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டமை ஒரு புறமிருக்க புலிகளின் அழிவுக்கும் ஒரு விதத்தில் அதுதான் காரணமாகவும் அமைந்து விட்டதோ என இக்கட்டுரையை வாசித்த போது எண்ணத் தோன்றியது.

**சே.வேலாயுதபிள்ளை, கரவெட்டி**

## எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பு இயக்கம்

இலங்கையின் அரசியலைப் பொறுத்தவரை பலமான ஒரு எதிர்க்கட்சி இல்லை என்ற குறைபாடு அனைவரினாலும் உணரப்படும் ஒன்றாகவிருக்கின்றது. தேர்தல் காலங்களில் உருவாகும் எதிர்த்தரப்பு கூட்டணிகள் கூட பலமானவையாக இருக்கவில்லை. இந்த நிலையில் 10 எதிர்க் கட்சிகள் இணைந்து உருவாக்கியுள்ள 'எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பியக்கம்' ஊடகங்களில் அதிகளவு முக்கியத்துவத்தைப் பெற்ற ஒன்றாக அண்மையில் இருந்துள்ளது. இந்த நிலையில்தான் கடந்த சமகாலம் இதழில் குசல் பெரேரா எழுதியுள்ள 'உருப்படியான எதிர்க்கட்சிகளின் கூட்டணி அமைவதற்கு வழி என்ன?' என்ற கட்டுரை முக்கியத்துவம் பெறுகின்றது.

ரணில் விக்கிரமசிங்க உருவாக்கியுள்ள இந்தக் கூட்டமைப்புக்கான புரிந்துணர்வு உடன்படிக்கையில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு கைச்சாத்திடாத போதிலும், இணைந்து செயற்படுவதற்கு முன்வந்திருக்கின்றது. இந்த வகையில் இதில் இணைந்துள்ள கட்சிகளில் மக்களின் செல்வாக்கைப் பெற்ற கட்சிகளாக மூன்று கட்சிகள் மட்டுமே உள்ளன. ஏனைய கட்சிகள் வெறுமனே எண்ணிக்கைக்காகத்தான் இணைந்திருக்கின்றன. மகிந்த ராஜபக்ஷ ஆட்சியைத் தூக்கியெறியப்போவதாக இந்த அரசியல்வாதிகள் கூறுகின்ற போது, மக்கள் அதனை அக்கறையுடன் கேட்பார்களா? என அர்த்தமுள்ள கேள்வியொன்றைத் தொடுத்துள்ளார் கட்டுரையாளர்.

ராஜபக்ஷ ஆட்சியைக் கவிழ்க்கப்போவதாக ரணில் விக்கிரமசிங்க கூறுவது இது முதல் தடவையல்ல என்பதைச் சுட்டிக்காட்

## மேதாவியின் அக்கறை

2013 மார்ச் 1-15 சமகாலத்தின் இஸ்லாமிய சகோதரர்களுக்கு எழுதிய மேதாவியின் மின்னஞ்சல் தமிழ், முஸ்லிம் மக்களுக்கு இடையேயான ஒற்றுமையை வலியுறுத்தி இருந்ததுடன், தமிழர்களுக்கு ஏற்பட்ட நிலை இஸ்லாமியர்களுக்கு ஏற்பட்டு விடக்கூடாது என்னும் அக்கறையையும் வெளிப்படுத்தி நின்றது. நாட்டில் இன்று இஸ்லாமியருக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் வன்முறைகள் அதன் பின்னணி தொடர்பில் தெளிவுபடுத்தி இருந்தது மின்னஞ்சல். சொல்லப்பட்டிருந்த விதமும் மொழிநடையும் அருமை.

**மு.கருணாகரன், பருத்தித்துறை**

விளம்பரங்களுக்கு : தொலைபேசி; 011-7767702, 011-7767703, 011-7322736

டும் கட்டுரையாளர், இதேபோல, ஆட்சியைக் கவிழ்க்கப் போவதாக பல மேடைகளை அவர் அமைத்திருக்கின்றார். போராட்டத்தை முன்னெடுக்கப்போவதாக கூட்டணிகளையும் அமைத்திருக்கின்றார் என்பதையும் குறிப்பிடுகின்றார்.

தெல்லிப்பழையில் எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பியக்கத்தினால் நடத்தப்பட்ட முதலாவது சத்தியாக்கிரகப் போராட்டமே, இவ்வமைப்பை நோக்கி அனைவரது பார்வையையும் திருப்பியது என்பதையும் குறிப்பிடும் கட்டுரையாளர் , தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் புதியதொரு அணுகுமுறையைக் கடைப்பிடிப்பதற்கு ரணில் விக்கிரமசிங்க முயல்வதாகவும் குறிப்பிடுகின்றார். தெல்லிப்பழை போராட்டம் ஊடகங்களில் பெருமளவு முக்கியத்துவத்தைப் பிடித்திருந்தது. இதனையடுத்து யாழ் நகரில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் ரணில் தெரிவித்த கருத்துகளும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

இவ்வாறு வடக்கு சென்ற போது தமிழ் மக்களுக்கு சாதகமான முகத்தைக் காட்டிய ரணில் விக்கிரமசிங்க, தென்பகுதியில் மற்றொரு முகத்தைக் காட்டுகின்றார் என்பதையும் கட்டுரையாளர் ஆதாரபூர்வமாக சுட்டிக்காட்டுகிறார். இவை தொடர்பில் குறிப்பிடும் கட்டுரையாளர், மகிந்த ராஜபக்ஷவுக்கான பதிலான ஒரு தலைவராக ரணில் விக்கிரமசிங்கவினால் ஒருபோதும் உருவாக முடியாது என்பதைக் குறிப்பிட்டிருப்பதுடன், எதிர்க்கட்சிக் கூட்டணிகள் இதனால்தான் தோல்வியடைகின்றது என்பதையும் குறிப்பிடுகின்றார்.

இலங்கை அரசியல் அரங்கில் நடைபெறும் நிகழ்வுகளைப் புரிந்து கொள்வதற்கு உதவும் இதுபோன்ற கட்டுரைகளை 'சமகாலம்' வெளியிட்டு வருவது வரவேற்கப்பட வேண்டிய ஒன்று! தமிழ் ஊடக உலகில் இது போன்ற ஆழமான ஆய்வுக் கட்டுரைகளை வெளியிடும் ஒரே சஞ்சிகையாக சமகாலம் உள்ளமையை இதுபோன்ற கட்டுரைகள் உறுதிப்படுத்துகின்றது.

**ஆர். பரமேஸ்வரன், வெள்ளவத்தை**

## அநுராதாவின் பேட்டி

புதுடில்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தின் அரசியல் விஞ்ஞான பேராசிரியர் அநுராதா மித்ரா ஷெனோயின் விரிவான பேட்டி நன்றாக இருந்தது. தமிழர்கள் உரிமைகளைப் பெறும்வரை இலங்கை மீதான சர்வதேச நெருக்குதல்கள் தொடரவேண்டும் என்றும் பொதுநலவரசு உச்சிமகாநாட்டைப் பகிஷ்கரிப்பது இலங்கை மீது நெருக்குதலைக் கொடுப்பதற்கு உதவுமேயானால் அவ்வாறு செய்வது நல்லது என்றும் அவர் கூறியிருப்பதன் மூலம் இலங்கை அரசாங்கத்தைப் பற்றிய தனது புரிதலை செம்மையாக வெளிக்காட்டியிருக்கிறார் என்பது எனது அபிப்பிராயம்.

**மா.சீதாதேவி, வவுனியா.**




இருவாரங்களுக்கு ஒருமுறை

ISSN : 2279 - 2031

மலர் 01 இதழ் 18

2013, மார்ச் 16 - 30


A Fortnigtly Tamil News Magazine

**எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் (சிலோன்) (பிரைவேட்) லிமிடெட்**
185, கிராண்ட்பாஸ் ரோட்,
கொழும்பு-14,
இலங்கை.
**தொலைபேசி : +94 11 7322700**
**ஈ-மெயில்:** samakalam@expressnewspapers.lk

**ஆசிரியர்**
வீரகத்தி தனபாலசிங்கம்

**உதவி ஆசிரியர்**
தெட்சணாமூர்த்தி மதுசூதனன்

**ஒப்பு நோக்கல்**
என்.லெப்ரின் ராஜ்



வன்முறையை ஒரு பொய்யினால் மாத்திரமே மறைக்க முடியும். பொய்யை வன்முறையினால் மாத்திரமே பேணிக்காக்க முடியும்.

அலெக்சாண்டர் சொல்செனிற்சின்

வாசகர் கடிதங்களை அனுப்ப வேண்டிய முகவரி:
ஆசிரியர்,
**சமகாலம்**
185, கிராண்ட்பாஸ் ரோட்,
கொழும்பு -14.
இலங்கை.
மின்னஞ்சல் : samakalam@expressnewspapers.lk

# வாக்குமூலம்....




வானூர்தித் துறையில் இலங்கை நீண்ட சரித்திரத்தைக் கொண்டிருந்த போதிலும், இரண்டாவது உலக மகாயுத்த காலத்தில் 1942 ஆம் ஆண்டு கொழும்பு திருகோணமலையும் விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல்களுக்கு இலக்காகின. 1987ஆம் ஆண்டில் விமானத்தில் இருந்து பருப்பு போடப்பட்ட அனுபவமும் எமக்கு இருக்கிறது. விடுதலைப் புலிகள் கொழும்பிலும் கட்டுநாயக்காவிலும் தாக்குதல் நடத்தியபோது எம்மால் திருப்பித் தாக்கக்கூடியதாக இருக்கவில்லை. ஆனால், இன்று இலங்கை மீது எந்த நாடும் தாக்குதல் தொடுக்க முடியாது. ஏனென்றால், ஆகாய மார்க்கத் தாக்குதல்களில் இருந்து எமது வான் பரப்பைப் பாதுகாக்கும் ஆற்றல்களைப் பெற்றிருக்கிறோம்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ

பெருமளவு பணம் கையில் கிடைக்கும்போது அதை வைத்துக் கொண்டு என்ன செய்வதென்று சில கிரிக்கெட் வீரர்களுக்குத் தெரியவில்லை. அவர்கள் மனோதத்துவ நிபுணர்களிடம் ஆலோசனை பெறுவது உகந்தது என்று நான் நினைக்கிறேன். தேசிய அணியில் உள்ள சில சிரேஷ்ட கிரிக்கெட் வீரர்கள் தாங்கள் தான் இந்த நாட்டில் அதிமுக்கியத்துவம் வாய்ந்தவர்கள் என்று நினைக்கிறார்கள். மற்றவர்கள் சொல்வதை தாங்கள் கேட்க வேண்டியதில்லை என்றும் அவர்கள் நினைக்கிறார்கள்.


விளையாட்டுத்துறை
அமைச்சர் மகிந்தானந்த
அளுத்கமகே





வேகப்பந்து வீச்சாளர் லசித்மாலிங்க 2011ஆம் ஆண்டு டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் இருந்து விலகிக் கொண்ட போது நான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையில் இருந்திருந்தால், அதற்குப் பிறகு அவர் ஒருபோதுமே கிரிக்கெட் விளையாடியிருக்கமாட்டார்.

அர்ஜுன ரணதுங்க



இதற்குப் பிறகும் இந்திய மத்திய ஆட்சியில் திராவிட முன்னேற்றக் கழகம் நீடிப்பது தமிழினத்துக்கே இழைக்கப்படும் பெரும் தீமை என்பதால் மத்திய அமைச்சரவையிலிருந்தும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணியில் இருந்தும் உடனடியாக விலகிக் கொள்வதென கழகம் முடிவு செய்துள்ளது.

தி.மு.க.தலைவர்
கலைஞர் மு.கருணாநிதி



நன்றி கெட்ட அரசியல்வாதிகள் நீண்ட காலம் நின்றுபிடிக்க முடியாது. அரசியலில் மிகவும் முக்கியமானது வாக்காளர்களுக்கு நன்றியுடையவர்களாக இருக்க வேண்டியதேயாகும். அரசியல்வாதிகள் ஒரு வீட்டில் உணவை உட்கொண்டாலோ, தேநீரைக் குடித்தாலோ அதை நினைவில் வைத்திருக்கவேண்டியது தலையாய கடமையாகும்.

போக்குவரத்து
அமைச்சர்
குமார் வெல்கம

எமது நாட்டுத் தேர்தலில் குறிப்பிட்ட ஒரு வேட்பாளர் போட்டியிட அனுமதிக்கப்படவேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றியம் கேட்பது நேர்மையற்ற செயலாகும். ஜனநாயக நாடொன்றில் சட்டங்களை அவமதிக்கும் செயலாகவும் இது அமைகிறது. இலங்கையில் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் முன்னாள் இராணுவத் தளபதி சரத்பொன்சேகாவை போட்டியிட அனுமதிக்க வேண்டுமென்று இலங்கை அரசாங்கத்தை ஐரோப்பிய ஒன்றியம் கேட்டாலும் நான் ஆச்சரியப்படமாட்டேன்.

*மாலைதீவு ஜனாதிபதி*
*முஹமட் வாஹிட்*





மிகைப்படுத்தப்பட்ட பிரதிபலிப்புகளை வெளிக்காட்டுவதை விடுத்து, தமிழ் நாட்டில் உள்ள யதார்த்த நிலைவரத்தை நாம் கணக்கில் எடுக்கவேண்டுமென்று நான் திரும்பத்திரும்ப அறிவுறுத்திவந்திருக்கிறேன். சுதந்திரம் பெற்ற நாட்களில் இருந்து நாம் தமிழ் நாடு தொடர்பான எமது இராஜதந்திரத்தில் தோல்வி கண்டுவிட்டோம். அந்தத் தோல்விக்காக சரித்திரம் எம்மீது குறைகாணும்.

*சிரேஷ்ட அமைச்சர்*
*டியூ குணசேகர*



அரசியல்வாதிகளும் கோழிகளைப் போன்றவர்களே. கோழிகளில் இரு வகைகள் இருக்கின்றன. புறொயிலர் கோழிகள் பார்வைக்கு நன்றாக இருக்கும். அவற்றின் எடையும் கூட அதிகமாக இருக்கும். ஆனாலும், நாட்டுக் கோழிகளே கூடுதல் ஆரோக்கியமானவை, ருசியானவை என்பதை மக்கள் அறிவார்கள்.

*சுகாதார அமைச்சர்*
*மைத்திரிபால சிறிசேன*



உலகம் பூராவுமுள்ள தமிழர்களுக்காக தனியானதொரு அரசைத் தோற்றுவிக்க தமிழ்நாடு முதலமைச்சர் ஜெயலலிதா நோக்கம் கொண்டிருந்தால், அதற்குச் திராவிட குடும்பத்தின் சகல மொழிகளையும் பேசுகின்ற மக்கள் வாழும் தென்னிந்தியாவே சிறந்த இடமாகும்.

*வீடமைப்பு அமைச்சர்*
*விமல் வீரவன்ச*



செய்திச்சரம்

# 'இந்திய அணுகுமுறையில் மாற்றம் ஏற்படாதவரை இலங்கை நிலைவரங்களில் மேம்பாட்டை எதிர்பார்க்க முடியாது'

இனநெருக்கடிக்கு நிலை பேறான அரசியல் தீர்வொன்றைக் காண்பதை நோக்கியும் ஜனநாயக நிறுவனங்களை மீளமைப்பதை நோக்கியும் இலங்கை மீது செல்வாக்குச் செலுத்துவதற்கான ஆற்றலை அதிகபட்ச மாக்குவதற்கு இந்தியா கடைப்பிடிக்க வேண்டிய அணுகுமுறை குறித்து சர்வதேச நெருக்கடிக் குழு (International Crisis Group) வின் இலங்கைத் திட்ட பணிப்பாளரும் சிரேஷ்ட ஆய்வாளருமான அலன் கீனான் அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறார்.

ஜெனீவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்காவினால் இலங்கைக்கு எதிராகக் கொண்டுவரப்பட்டிருந்த தீர்மானம் தொடர்பில் இந்தியா கடைப்பிடித்த அணுகுமுறைக்கான தனது பிரதிபலிப்பை வெளிக்காட்டுமுகமாக கீனான் எழுதியிருக்கும் கட்டுரையொன்று இந்திய ஊடகங்களில் வெளியாகியிருந்தது.

இலங்கை விவகாரம் தொடர்பில் வலிமையான சர்வதேச தந்திரோபாயமொன்றை வகுப்பதில் இந்தியா முன்னணியில் நின்று செயற்பட முன்வந்தால் மாத்திரமே இனநெருக்கடிக்கான அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்கு இலங்கை மீது செல்வாக்குச் செலுத்துவதற்கான ஆற்றலை அதிகபட்சமாக்கக் கூடியதாக இருக்கும். இந்தியா இது தொடர்பிலான அதன் செயன்முறையை முதலில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் ஆரம்பித்து பிறகு ஏனைய சர்வதேச நிறுவனங்களில் விஸ்தரிக்கலாம். இவ்வாறு செய்வதன் மூலமாக இலங்கை அரசாங்கம் அளித்த வாக்குறுதிகளை மீறாதிருப்பதை உறுதி செய்யலாம் என்று கீனான் தெரிவித்திருக்கிறார்.

பொறுப்புடைமையுடன் (Accountability issue) சம்பந்தப்பட்ட விவகாரங்களில் இலங்கை இணங்கிச் செயற்படுவதை உறுதிப்படுத்துவதற்கான பலதரப்பு முயற்சிகளில் புதுடில்லி துடிப்புடன் பங்கேற்கும் வரை, ராஜபக்ஷ அரசாங்கத்துக்கு இந்தியாவினால் விடுக்கப்படக்கூடிய உறுதிவாய்ந்த செய்திகளும் கூட அலட்சியப்படுத்தப்படும். ஆபத்தான கொள்கைகளைக் கைவிடுவதற்கு ராஜபக்ஷ அரசாங்கத்தை நிர்ப்பந்திக்கக்கூடியதாக பலம் பொருந்திய சர்வதேசக் கூட்டணியொன்றை உருவாக்குவதில் புதுடில்லி முன்னின்று செயற்படவேண்டும். ஐ.நா. வில் ஒரு நாட்டின் பெயரைக் குறிப்பிட்டு பிரத்தியேகமாகக் கொண்டுவரப்படுகின்ற தீர்மானங்களை ஆதரிப்பதற்குத் தயக்கம் காட்டுகிற அதன் நீண்டகால நிலைப்பாட்டை



இந்தியா மாற்றியமைக்க வேண்டியது அவசியமாகும். இருதரப்பு ஊடாட்டங்கள் மூலமாகச் செயற்படுவதற்கு முன்னுரிமை காட்டுகின்ற இந்திய அணுகுமுறையிலும் மாற்றம் வேண்டும்.

இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ராஜபக்ஷ அரசாங்கம் இராணுவ மயப்படுத்தப்பட்ட அபிவிருத்திக் கொள்கைகளை முன்னெடுக்கிறது. இத்தகைய கொள்கைகளை கைவிடுமாறு அந்த அரசாங்கத்தை நிர்ப்பந்திப்பதற்கு ஜப்பான், உலகவங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியவை கணிசமான கூட்டு நிதித்துறைச் செல்வாக்கை பயன்படுத்தவேண்டுமென்று இந்தியா தூண்டுதல் கொடுக்க வேண்டும்.

இலங்கை விவகாரத்தில் இந்தியா உறுதிவாய்ந்த நடவடிக்கையை எடுக்க முன்வந்தால் இலங்கை தொடர்பிலான தங்கள் கொள்கைகளை ஏனைய அரசாங்கங்களும் கடுமையாக்கிக் கொள்வதற்கான வாய்ப்பும் உத்வேகமும் தோன்றும். உருப்படியான சர்வதேச கூட்டணியொன்றை உருவாக்குவதில் இந்தியாவை ஒரு முக்கிய அங்கமாக நோக்குவதாக அமெரிக்க மற்றும் ஐரோப்பிய இராஜதந்திரிகள் வெளிப்படையாகவே தெரிவித்திருக்கிறார்கள் என்றும் அலன் கீனான் தனது கட்டுரையில் குறிப்பிட்டிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. ■


செய்திச்சரம்

# மீண்டும் பள்ளிக்குப் போகிறாள் மலாலா

பாகிஸ்தானில் பெண்களின் கல்வி உரிமைக்காக குரல் கொடுத்தமைக்காக தலிபான்களினால் சுடப்பட்ட 15 வயதுச் சிறுமி மலாலா யூசுவ்சாய் மீண்டும் பாடசாலைக்குச் செல்ல ஆரம்பித்திருக்கிறார். தனது சொந்த நாட்டில் அல்ல, இங்கிலாந்தில். மத்திய இங்கிலாந்தில் பேர்மிங்ஹாமில் உள்ள எட்க் பாஸ்ரன் மகளிர் பாடசாலையில் சேர்க்கப்பட்டிருக்கும் மலாலா மார்ச் 19 தனது படிப்பை மீண்டும் ஆரம்பித்திருக்கிறாள்.

தாக்குதலையடுத்து பிரிட்டனுக்கு கொண்டுசெல்லப்பட்ட அவளின் தலைக்காயங்களுக்காக கடந்த மாதம் வரை பல சத்திரசிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டன. அவள் பாடசாலைக்குச் செல்வதை உலகம் பூராகவும் மக்கள் இணையத்திலும் தொலைக்காட்சிகளிலும் பார்க்கக் கூடியதாக இருந்தது.

'மீண்டும் பாடசாலைக்குச் செல்ல வேண்டுமென்ற எனது கனவு பலித்துவிட்டது. எனக்கு பெரும் அதிர்ச்சியாக இருக்கிறது. கல்வியைப் பெறுகின்ற இந்த அடிப்படை வாய்ப்பு உலகில் உள்ள சகல பெண்பிள்ளைகளுக்கும் கிடைக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன். பாகிஸ்தானில் உள்ள எனது வகுப்புத் தோழிகளைக் காண முடியாமல் இருக்கிறது. பர்மிங்ஹாமில் புதிய தோழிகள் எனக்குக் கிடைப்பார்கள்' என்று மலாலா கூறினாள். 'மலாலா மீண்டும் பாடசாலைக்குச் சென்ற தினம் அவளுக்கும் குடும்பத்தினருக்கும் மகத்தான ஒரு தினம். உலகம் பூராகவும் கல்விக்கும் ஒரு மகத்தான தினம்' என்று ஐக்கிய நாடுகள் கல்வித் தூதுவரான முன்னாள் பிரிட்டன் பிரதமர் கோர்டோன் பிரவுண் தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்திருக்கிறார். ■



பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்.

*(3ஆம் பக்கத்தொடர்ச்சி...)*

வெளிக்காட்டியிருக்கக்கூடிய உணர்வுகளை மதித்து புதுடில்லி அதன் இலங்கைக் கொள்கையை வகுத்துக் கொண்டதில்லை. ஆனால், இந்திய நலன்களுக்கு எதிராகச் செயற்பட்டிருக்கக்கூடிய இலங்கை அரசாங்கங்களை வழிக்குக்கொண்டுவர வேண்டுமென்று புதுடில்லி சிந்தித்திருக்கக்கூடிய காலகட்டங்களில் தேவையேற்பட்டபோது தமிழக அரசியல் சக்திகளையும் தலைவர்களையும் பயன்படுத்திக் கொள்வதில் மாத்திரம் அக்கறை காட்டப்பட்டிருக்கிறது. தமிழக மக்களின் உணர்வுப் பிரதிபலிப்புகள் இந்தியாவில் எதிர்விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய ஆபத்து இருக்கிறதென்று புதுடில்லி கூறியிருக்கக்கூடிய சந்தர்ப்பங்களில் கூட, அந்தத் தாக்கங்கள் வெறுமனே இந்தியாவின் வியூகங்களுக்கு நியாயப்படுத்தல்களைத் தேடுவதற்கான ஒரு சாக்குப் போக்காகவே பயன்படுத்தப்பட்டிருக்கின்றன என்பது வெளிப்படையானது. இலங்கைத் தமிழர்கள் தங்கள் உரிமைகளைப் பெற்று கௌரவமானதும் கண்ணியமானதுமான வாழ்வை வாழ்வதற்கான சூழ்நிலைகள் தோற்றுவிக்கப்பட வேண்டுமென்பதற்காக தமிழகத்தில் குரல் கொடுத்துப் போராடுகிற இதய சுத்தியான சக்திகள் சகலதுமே புரிந்துகொள்ளத்தவறக்கூடாத ஒரு மெய்மை இது! ■

# மாணவர் போராட்டங்கள்

## இலங்கைத்தமிழர் உரிமைப்போராட்டத்துக்கு ஆதரவாக தமிழகத்தில் ஒரு புதிய அணி









இலங்கைத் தமிழர்களுக்காக மாணவர்களின் இதயத்தில் பீறிட்டுக் கிளம்புகிற தமிழர் உணர்ச்சிக்குத் தடை போட முடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறது தமிழகம். ஆளுங்கட்சி அணி, தி.மு.க. அணி, மாணவர்கள் அணி என்று மும்முனைப் போராட்டம் தமிழகத்தை உலுக்கியது. எங்கு பார்த்தாலும் மாணவர்கள் அமைதிப் போராட்டத்தில்- அறப்போராட்டத்தில் குதித்தார்கள். துடிப்பு மிகுந்த வாலிப வயதில் வன்முறைக்கு சிறிதும் இடம்தராமல் 'சுய கட்டுப்பாட்டுடன்' நடைபெறும் இந்த மாணவர்கள் போராட்டம் இலங்கைத் தமிழர் பிரச்சினையில் அரசியல் கட்சிகள் மத்தியில் இனம் புரியாத ஒற்றுமையை உருக்கி வார்த்தெடுத்து வைத்திருக்கிறது- தமிழக காங்கிரஸ் கட்சி தவிர, உணர்ச்சி மிகு போராட்டத்திற்கு உருவம் கொடுத்தது மார்ச் 8ஆம் திகதி திடீரென்று சென்னையில் இலங்கை துணைத் தூதரகத்திற்கு அருகில் உள்ள பிரபலமான லயோலா கல்லூரி மாணவர்களால் மையம் கொண்ட புயல்தான்! ஆம், எட்டு மாணவர்கள்- இளம் காளைகள் இலங்கைத் தமிழர்களின் வாழ்வு மேம்பட தங்கள் உயிரை மாய்த்துக் கொள்ளத் தயார் என்று பிரகடனம் செய்து 'சாகும் வரை உண்ணாவிரதம்' இருந்தார்கள். அந்த தினம் தமிழகத்தின் தொடர் போராட்ட தினமாக மாறிவிடும் என்று யாரும் நினைக்கவில்லை.

ஐக்கிய நாடுகள் சபையில் 'யூ.பி.ஆர் ரிவியூவ்' என்று சொல்லப்படுகின்ற மனித உரிமைகள் ஆய்வு கூட்டம் நடைபெறுகிறது என்ற அறிவிப்பு வந்தவுடனேயே தமிழகம் சூடானது. இதற்கு முன்னோடியாக தமிழக மக்களின் இதயங்களை கொதிக்க வைத்தது பிரபலமான ஆங்கில நாளேடு 'இந்து' பத்திரிகையின் முதல் பக்கத்தில் விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனின் மகன் பாலச்சந்திரன் அப்பாவியாக பிஸ்கட் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் படமும், பிறகு சுட்டு வீழ்த்தப்பட்டு மார்பில் குண்டுக் காயங்களுடன் மாண்டு கிடக்கும் படமும்தான். தாய்மார்கள் எல்லாம் தங்கள் பிள்ளைகளை இழந்தது போன்ற ஒரு துடிப்பும், துயரமும் அந்தப் படத்தைப் பார்த்ததும் அவர்களின் நாடி நரம்புகளில்

ஜிவ்வென்று எகிறியது. இந்தச் சூழ் நிலையில் இலங்கை தொடர்பான அமெரிக்க தீர்மானம் வருகிறது என்றதும் அனல் காட்சிகள் ஆங்காங்கே தணிக்க முடியாத கனலாக பரந்து விரிந்து தமிழகம் முழுவதும் பறந்தன. அதுவும் பாராளுமன்றத்தில் இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பான விவாதங்கள் எழுந்ததும் தமிழகத்திற்குள் மேலும் புயல் சுழற்றி அடிக்க ஆரம்பித்தது. குறிப்பாக தமிழகத்தில் எதிரும் புதிருமாக இருக்கும் அ.தி.மு.க மற்றும் தி.மு.க. எம்.பி.க்கள் இந்திய நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் இலங்கைத் தமிழர்கள் மீது நடத்தப்பட்ட மனித உரிமை மீறல்கள் பற்றி சர்வதேச விசாரணை வேண்டும் என்பதை ஓங்கி ஒலித்தனர். அதற்கு இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சல்மான் குர்ஷித் அளித்த பதில் தமிழக எம்.பி.க்களை கொந்தளிக்க வைத்தது. இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இந்தியா மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் இருக்கிறது என்றே தமிழக எம்.பி.க்கள் சீறிப் பாய்ந்தார்கள். இதில் என்ன ஒற்றுமையென்றால் ஒட்டு மொத்த இந்திய எம்.பி.க்கள் இலங்கைத் தமிழர்கள் மீது நடத்தப்பட்ட மனித உரிமைகள் விசாரிக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை வைத்ததுதான்- காங்கிரஸ் எம்.பி.க்கள் மட்டும் 'அண்டை நாடு' 'நட்பு நாடு' 'பெரியண்ணன் போல் இந்தியா நடந்து கொள்ள முடியாது' என்று 'பசப்பு வார்த்தைகளில்' பதில் சொல்லிக் கொண்டிருந்தார்கள்.



பாராளுமன்றத்தில் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சரின் பதில் சொதப்பியதும் தமிழ் இன ஆர்வலர்கள் தலைமையிலான பழ. நெடுமாறன், ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ போன்றவர்கள் இல ங்கைத் தூதரக முற்றுகையைச் செய்தார்கள். அறிவித்தார்கள். சென்னை அடையாறில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் நிறுவன அலுவலகத்தை முற்றுகை செய்து போராடினார்கள். தி.மு.க. விறுவிறுப்புடன் களத்தில் இறங்கியது. டெசோ அமைப்பைக் கூட்டி இலங்கைத் தூதரகம் முன்பு முற்றுகைப் போராட்டத்திற்கு அறிவிப்புச் செய்தது. 'கண்ணீரை கவசமாக்கும் நாள் அந்த முற்றுகை தினம்' 'பாலகன் பாலசந்திரன் இலங்கையில் தான் கொல்லப்பட்டுள்ளான்' என்றெல்லாம் உருக்கமாக அறிவித்து டெசோ அமைப்பினரைத் திரட்டினார் தி.மு.க. தலைவர் கருணாநிதி. தி.மு.க. பொருளாளர் மு.க. ஸ்டாலின், திராவிட தலைவர் கி.வீரமணி, தொல். திருமாவளவன், சுப. வீரபாண்டியன் என்று அனைவரும் சேர்ந்து நடத்திய அந்த மறியல் 'அசாத்திய வெற்றி' பெற்றது. இந்த வேளையில்தான் கடலூர் மணி இலங்கைத் தமிழர் மீது கொடூர தாக்குதல் நடத்திய இலங்கை அதிபர் ராஜபக்சவை போர்க்குற்றவாளி என்று அறிவிக்க வேண்டும் என்று வலியுறுத்தி தீக்குளித்து மாண்டார். அன்றுதான் 'அனைவரும் ஒருங்கிணைந்து போராட வேண்டும்' என்ற அழைப்பை உலகத்தமிழர் பேரமைப்புத் தலைவர் பழ.நெடுமாறன் அறிவித்தார். அன்றே மாநிலம் முழுவதும் 'பந்த்' என்று தி.மு.க. அறிவித்து மற்றவர்களின் ஆதரவைக் கேட்டது. இலங்கைத் தூதரக முற்றுகை முடிந்த கையோடு தி.மு.க. '12ஆம் திகதி பந்த்' என்று அறிவித்ததுதான் மாணவர்கள் போராட்டத்தின் புதிய துவக்கம். எட்டாம் தேதி எட்டு லயோலா கல்லூரி மாணவர்கள் கோயம்பேடு பகுதியில் உண்ணாவிரதத்தை துவக்கினார்கள்.

அனைத்துக் கட்சித் தலைவர்களும் அங்கு படையெடுக்க ஆரம்பித்தார்கள். ஒரு கட்டத்தில் காங்கிரஸ் முன்னாள் மாநில தலைவர் கே.வி.தங்கபாலு அங்கு போக, அவரை 'திரும்பிப் போ' என்று கோஷம் எழுப்பினார்கள். 'மத்திய அரசு பிரதிநிதிகள் வந்தால் பேசுவோம். வேறு எந்த அரசியல்வாதிகளிடமும் பேசத் தயாராக இல்லை' என்றே உண்ணா

## சென்னை மெயில்






முத்தையா காசிநாதன்

விரதம் இருந்த மாணவர்கள் வெகுண்டெழுந்தார்கள். இதற்கிடையில் தி.மு.க. பந்திற்கு ஆதரவாக அழைப்பு விடுத்து தமிழகத்தை உசுப்பேற்றிக் கொண்டிருந்தது. 'இங்குள்ள தமிழர் ஒன்றாதல் காண்போம்' என்று அனைத்துக் கட்சியினரும் ஓரணியில் நின்று பந்தை வெற்றியடையச் செய்வோம் என்று அறிவித்தார் கலைஞர் கருணாநிதி. தமிழக முதல்வர் ஜெயலலிதா தரப்பிலும் இதற்கு அதிக எதிர்ப்புத் தெரிவிக்கப்படவில்லை. பாலசுப்பிரமணியன் என்ற வழக்கறிஞர் மட்டும் பந்தை தடை செய்ய வேண்டும் என்று வழக்குப் போட்டார். அதை சென்னை உயர்நீதிமன்றமே தள்ளுபடி செய்துவிட, 12ஆம் திகதி இலங்கைத் தமிழர்களுக்காக நடைபெற்ற 'பந்த்' எதிர்க்கட்சி நோக்கில் வெற்றி என்றும், ஆளுங்கட்சி நோக்கில் தோல்வி என்றும் பிரசாரங்கள் கிளம்பின. மாணவர்கள் போராட்டம் ஒரு புறமும், தி.மு.க.வின் முற்றுகை, பந்த் இன்னொரு புறமும், பழ.நெடுமாறன், வைகோ,சீமான் உள்ளிட்டோரின் போராட்டங்கள் மறுபுறமும்

# அறநெறி சார்ந்த அரசியல் நிலைப்பாட்டை இந்தியா எடுக்க வேண்டும்



டி.ராஜா,
இந்திய ராஜ்ய சபை உறுப்பினர்,
தேசிய செயலாளர்,
இந்திய கம்யூனிஸ்ட் கட்சி.

2009இல் போர் முடிந்தவுடன் இலங்கை அதிபர் ராஜபக்ச '4-டி' (அதாவது 'டிமிலிடெரிஸேசன், டெவலப்மென்ட், டெமாக்ரட்டிஸேசன், டெவல்யூசன்') என்ற திட்டத்தை அறிவித்து, அவற்றை செயல்படுத்துவேன் என்று உறுதிமொழி கொடுத்தார். அவற்றில் ஒன்றைக் கூட நிறைவேற்றவில்லை. தமிழ் இன அழிப்பு பாதிப்பிலிருந்து அங்குள்ள தமிழர்கள் இன்னும் மீளவில்லை. போர்க்குற்றங்கள், இன அழிப்பு போன்றவற்றை விசாரிக்க சர்வதேச விசாரணை கொண்டு வர வேண்டும் என்பதை அதற்காகவே வலியுறுத்துகிறோம். இந்த கோரிக்கையை நீர்த்துப் போக வைக்க இந்தியா முயற்சி செய்யக் கூடாது. அதை மேலும் வலுப்படுத்த வேண்டும். 'குறிப்பிட்ட நாடு தொடர்புடைய தீர்மானமாக இருக்கிறது' 'இலங்கை சுதந்திர நாடு' என்றெல்லாம் இந்தியா சொல்லிக் கொண்டிருக்கக்கூடாது. ஒரு அறநெறி சார்ந்த அரசியல் நிலைப்பாட்டை இலங்கை விவகாரத்தில் இந்தியா மேற்கொள்ள வேண்டும். ஏனென்றால் இதை தமிழர்களுக்கு எதிராக நடைபெற்ற மனித உரிமை மீறல் என்று மட்டும் பார்க்காமல், ஒட்டுமொத்த மனித குலத்திற்கே எதிராக நடைபெற்ற மனித உரிமை மீறலாகக் கருத வேண்டும்.

நாம் சனல்-4 காட்சிகளை நம்பிக் கொண்டிருக்க வேண்டியதில்லை. அங்கு தமிழர்களுக்கு எதிராக நடைபெற்ற கொடுமைகளை சித்தரிக்கும் காட்சிகளை எடுத்த 'சனல்-4'க்கு நமது பாராட்டுகள். அதற்காக நாம் ஏன் அதை நம்பிக் கொண்டிருக்க வேண்டும்? இந்தியாவே அப்பிரச்சினைகளை முன்னெடுத்துச் செல்ல வேண்டும். பாரபட்சமில்லாத சர்வதேச விசாரணை வேண்டும் என்று கோரிக்கை வைக்க வேண்டும். இப்படி சர்வதேச விசாரணை என்பது புதிதல்ல. ஏற்கனவே சிலி போன்ற நாடுகளில் ஏற்பட்ட பிரச்சினைகளில் சர்வதேச விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. அதே நேரத்தில் ஜம்மு காஷ்மீரை மனதில் வைத்துக் கொண்டு நாம் இலங்கைப் பிரச்சினையில் செயல்படக் கூடாது. உள்நாட்டு அரசியலை அதற்கு கொண்டு வரக்கூடாது. அப்படி பார்த்துத்தான் இன்று கலைஞர் மாட்டிக் கொண்டு நிற்கிறார். 'போர் நின்று விட்டதாக என்னை நம்ப வைத்து விட்டார்கள்' என்று இப்போது கலைஞர் கூறுகிறார். அப்படி யாராவது சொன்னால் அதை நம்பி விடுபவரா கலைஞர்? சரி, யார் அப்படிச் சொன்னது? யார் அப்படி நம்ப வைத்தது? அப்போது உள்துறை அமைச்சராக இருந்த ப.சிதம்பரம் சொன்னாரா? மத்திய அரசு சொன்னதா? ராஜபக்ச சொன்னாரா? அந்த விவரங்களை கலைஞர் வெளியிட வேண்டாமா? ஆகவே உள்நாட்டு அரசியலைப் பார்த்து நாம் இலங்கைத் தமிழர் பிரச்சினையை அணுகக்கூடாது.

போர்க்குற்றங்கள் தொடர்பாக சர்வதேச விசாரணை என்பது ஒரு புறமிருக்க, இலங்கையில் வாழும் தமிழர்களுக்கு அதிகாரப் பகிர்வு கொடு க்கப்பட வேண்டும். அது என்ன தீர்வு என்று நானோ, நீங்களோ சொல்ல முடியாது. அதை அங்குள்ள தமிழர்கள்தான் தீர்மானிக்க வேண்டும். அந்த மண்ணில் தான் முடிவு எடுக்கப்பட வேண்டும். இங்கு வேறு யாராவது அங்குள்ள தமிழர்களுக்கு இப்படித் தீர்வு கொடுங்கள் என்று சொன்னால் அப்படிச் சொல்வதற்கு அவர்களுக்கு அதிகாரத்தைக் கொடுத்தது யார்? என்று எனக்குத் தெரியவில்லை. எங்களைப் பொறுத்தமட்டில் தார்மீக ரீதியாக இலங்கைத் தமிழர்களுக்கு அரசியல் தீர்வு அளிக்கப்பட வேண்டும். அது எப்படிப்பட்ட தீர்வு என்பதை தமிழர்களே முடிவு செய்து கொள்ள வேண்டும். ■

ஆக- தமிழகம் இலங்கைத் தமிழருக்கு ஆதரவுப் போராட்டக் களமாக மாறியது. முதலில் லயோலா கல்லூரி மாணவர்கள்தான் போராட்டத்தை துவங்கினார்கள். பிறகு அது தமிழகம் முழுவதும் பரவியது. 60-க்கும் மேற்பட்ட கல்லூரி மாணவர்கள் ஆர்ப்பாட்டம், போராட்டம், உண்ணாவிரதம் என்று களத்திற்கு வந்தனர். கவர்னர் தங்கியிருக்கும் ராஜ் பவனைக்கூட முற்றுகை செய்து போராட்டம் நடத்தினார்கள். சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர்கள், அனைவரும் 'கறுப்பு-வெள்ளை' (வழக்கறிஞர் உடை) பேரணி நடத்தி சென்னை பாரிமுனையில் உள்ள மத்திய அரசின் அலுவலகங்களை முற்றுகையிட்டனர்.

மாணவர்கள் போராட்டம் உச்சமடையவே தமிழக அரசு அதை எப்படி கட்டுப்படுத்துவது என்று புரியாமல் தவித்தது. ஆனால் 'எந்த மாணவரையும் அடித்து தொந்தரவு செய்யக்கூடாது' என்று மட்டும் கறார் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. ஏற்கனவே உண்ணாவிரதம் இருந்த லயோலா கல்லூரி மாணவர்களையும், சட்டக்கல்லூரி மாணவர்களையும் நள்ளிரவில் பொலிஸ் அப்புறப்படுத்தியது அரசியல் கட்சிகளின் கண்டனத்திற்கு உள்ளானது. குறிப்பாக அரசுக்கு ஆதரவாக இருக்கும் வைகோ, பழ. நெடுமாறன் போன்றோரின் கண்டனத்திற்கே உள்ளாக நேரிட்டது. அதனால் இந்த முறை பொலிஸ் வேறு ரூட்டை கடைப்பிடித்தது. அனைத்து அரசு கலைக் கல்லூரிகளுக்கும் விடுமுறை அளித்தது. ஹொஸ்டல் மாணவர்கள் உடனடியாக தங்களின் சொந்த ஊருக்கு கிளம்பிச் செல்லுமாறு பணிக்கப்பட்டார்கள். ஆனால் அதன்பிறகுதான் போராட்டம் 'விஸ்வரூபம்' எடுத்தது. கல்லூரியே இல்லை என்றதும் புத்தக மூட்டைகளை தூக்கி எறிந்துவிட்டு, ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாகவும், இலங்கை மற்றும் இந்திய அரசுக்கு எதிராகவும் வாசகங்கள் இடம்பெற்ற 'பதாகைகள்' அடங்கிய மூட்டைகளுடன் ஆங்காங்கே உண்

# தமிழ்ச்சமுதாயத்திற்கு துரோகம் செய்பவர்களுக்கு தக்க நேரத்தில் மக்கள் சரியான பதிலடி கொடுப்பார்கள்

ஈழத்தமிழருக்கு எதிராக சிங்கள இராணுவம் நடத்திய இனப்படுகொலை இன்றைக்கு தமிழகத்தில் மட்டுமன்றி, தேசிய அளவிலும்- ஏன் சர்வதேச அளவிலும் 'விஸ்வரூபம்' எடுத்து நிற்கிறது. இனப்படுகொலை நடைபெற்ற போது மத்திய அரசுக்கு நிர்ப்பந்தம் கொடுத்து தடுத்து நிறுத்தாமல், தன் ஆட்சியைக் காப்பாற்றிக் கொள்ள, தன் குடும்பத்தின் மீதான வழக்குகளிலிருந்து தப்பித்துக் கொள்ள அமைதி காத்தது தி.மு.க. ஈழத்தமிழருக்கு எதிராக இலங்கை அரசுக்கு ஆதரவாக மத்தியில் உள்ள காங்கிரஸ் கூட்டணி ஆட்சி செயல்பட்ட போது அதைக் கண்டும் காணாதது போல் மௌனம் காத்தவர் கருணாநிதி. இன்றைக்கு நாடாளுமன்ற தேர்தல் வர சில மாதங்கள் இருக்கின்ற நேரத்தில் திடீரென்று கருணாநிதிக்கு ஈழத் தமிழர் மீது அக்கறை பொங்குகிறது. டெசோ அமைப்பிற்கு மீண்டும் உயிரூட்டப் பார்க்கிறார். ஆனால் டெசோவை 'தமிழ் ஈழம் சப்போர்ட்டர்ஸ் ஆர்கனைசேசன்' என்பதற்கு பதிலாக கருணாநிதியின் சந்தர்ப்பவாத அரசியல் நாடகத்தால் அது 'தமாஷா ஓவர் ஈழம் சர்வைவர்ஸ் ஆர்டியல்' என்ற அமைப்பாக மாறி கேலிக்கூத்தாகி விட்டது. அப்போது எல்லாவற்றையும் வேடிக்கை பார்த்து விட்டு இன்று 'கூட்டணியிலிருந்து விலகல்' என்று நாடகம் ஆடுவது தி.மு.க.வின் ஈழம் சார்ந்த சந்தர்ப்பவாதத்தை தோலுரித்துக் காட்டுகிறது.

அ.தி.மு.க.வின் ஈழத் தமிழர் நிலைப்பாடு தமிழக சட்டமன்றத்தில் ஒரு மனதாக தீர்மானமாக ஏற்கனவே நிறைவேற்றப்பட்டு விட்டது. ஈழத்தில் நடைபெற்றது இனப்படுகொலை, போர்க்குற்றம் என்ற நிலைப்பாட்டை எடுத்து ஐக்கிய நாடுகள் சபையில் இனப்படுகொலையைக் கண்டித்து தீர்மானம் கொண்டுவர வேண்டும் என்று தமிழக முதல்வர் ஏற்கனவே குரல் கொடுத்து விட்டார். ராஜபக்ச உள்ளிட்ட போர்க் குற்றவாளிகள் மீது சர்வதேச விசாரணை, சர்வதேச நீதிமன்றத்தில் தண்டனை என்று வலியுறுத்தி வருகிறோம். ஈழத்தமிழருக்கு பாதுகாப்பு, சமத்துவம், மரியாதை கிடைக்கும் வரை இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிக்கப்பட வேண்டும். இந்த நிலைப்பாட்டை ஒட்டியே, ஐக்கிய நாடுகளின் மனித உரிமை மீறல் விசாரணைக் குழுவில் இலங்கையை எதிர்த்து இனப்படுகொலைக்கு கண்டனம், பாரபட்சமற்ற சர்வதேச விசாரணை போன்றவற்றை கொண்டு வர வேண்டும் என்று நாங்கள் பாராளுமன்றத்திலும், மக்கள் மன்றத்திலும் வலியுறுத்தி வருகிறோம். இதிலிருந்து மாறுபட்டு தமிழ்ச் சமுதாயத்திற்கு துரோகம் செய்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்கு மக்கள் தக்க நேரத்தில் சரியான பதிலடி கொடுப்பார்கள். ■



டாக்டர் மைத்ரேயன்,
இந்திய ராஜ்ய சபை உறுப்பினர்,
அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்.

ணாவிரதம் இருக்கத் தொடங்கினார்கள். தமிழீழ விடுதலைப் போராட்டக்குழு மாணவர் தலைவி திவ்யா லைம்லைட் டிற்கு வந்தார். அவரின் தலைமையில் பல்வேறு கல்லூரிகளின் மாணவர்கள் போராட்டக்களத்திற்கு வந்தார்கள். அதில் எல்லாம் ஹைலைட் கவர்னரின் ராஜ்பவன் முற்றுகைதான். கூடியிருந்த மாணவர்களை ராஜ்பவனை நோக்கி 20 அடி தூரம் மட்டும் நடக்க விட்டு, அனை வரையும் கைது செய்தது பொலிஸ். இதில் திடீரென்று ராஜ்பவன் வளாகத் திலேயே இருக்கும் ஐ.ஐ.டி. மாணவர்கள் உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்த துதான் மாணவர்கள் போராட்டத்திற்கு புதிய வடிவத்தைக் கொடுத்தது. ஏனென் றால் எந்த மாணவர்கள் எங்கு போரா ட்டம் நடத்தினாலும் இந்த ஐ.ஐ.டி. மாண வர்கள் தங்கள் படிப்பு என்று மட்டுமே போய்க்கொண்டிருப்பார்கள். மத்திய அரசு கல்வி நிறுவனமான இங்கு படிக் கும் மாணவர்களே போராட்டப் பாதை க்கு வந்தார்கள். உடனே பொறியியல் கல்லூரி மாணவர்களும் ஐக்கியமானார் கள். மாணவர்கள் போராட்டம் 'தீப்பிழம் பாக' மாறிக் கொண்டிருக்கிறது என்பதை உணர்ந்த அரசு, பொறியியல் கல்லூரிக ளுக்கும் ஒரு வார விடுமுறை அறிவித் தது.

மாணவர்களின் போராட்டம் அண்டை மாநிலங்களிலும் நடைபெற்றது. கேரளா, கர்நாடகம், ஆந்திரம் என்று அந்த மாநி லங்களிலும் இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாகப் போராடும் தமிழக மாணவர் களுக்கு நேசக்கரம் நீண்டது. ஆனால் அனைத்து மாணவர்களுமே ஒட்டு மொத்த குரலில் சொன்ன ஒரே வாசகம், 'நாங்கள் அரசியல் வாதிகளை நம்ப வில்லை. இதில் அரசியலை கலக்காதீர் கள் ப்ளீஸ்' என்பதுதான்! உண்ணா விரதப் போராட்டங்களில் பங்கேற்ற மாணவர்களிடம் பேச்சுக் கொடுத்தோம். ராஜ்பவன் முற்றுகையில் கலந்து கொண்ட மாணவி தேன்மொழி, 'டெசோ என்ற அமைப்பு போராட்டம் நடத்துகிற து. ஆனால் அவர்கள் ஈழம் என்ற வார்த் தையையே சொல்லப் பயப்படுகிறார் கள்' என்று கோபித்துக் கொண்டார். இன்னொரு சந்திரன் என்ற சட்டக்கல்லூரி மாணவர், 'இங்குள்ள அரசியல் கட்சிகள்

# தமிழர்களின் உரிமைகளை நிலைநாட்ட பாடுபடுமாறு இந்திய அரசை தொடர்ந்து வலியுறுத்துவோம்



கே.வி. தங்கபாலு
முன்னாள் மாநிலத் தலைவர்,
தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி

எங்கள் தலைவர் ராஜீவ் காந்தி- ஜெயவர்த்தனே இடையே போடப்பட்ட இலங் கைத் தமிழர்களுக்கு அதிகாரம் அளிக்கும் ஒப்பந்தம் உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டும். அது தான் இலங்கைத் தமிழர்களுக்கு நிரந்தர பாதுகாப்பாக இருக்க முடி யும். எதிர்காலம் சிறப்பாக அமைய வழி வகுக்க முடியும். அதை இந்தியா மட்டுமே செய்ய முடியும் என்று நான் உறுதியாக நம்புகிறேன். ஏனென்றால், மற்ற உலக நாடுகள் இந்த விடயத்தில் இலங்கையை வலியுறுத்த முடியாது. ஏற்கனவே இலங்கை வாழ் தமிழர்களின் மேம்பாட்டிற் காக நிதியுதவி அளித்துள்ள நாடு என்ற முறையிலும், அவர்களுக்கு அரசியல் அதிகாரம் பெற்றுத் தர பாடுபட்ட நாடு என்ற முறையி லும் இந்தியாவிற்கு அந்த தார்மீக உரிமை இருக்கிறது. ஏனென்றால், இரு நாடுகளுக்கு இடையில் ஒரு ஒப்பந்தத்தை உருவாக்கி, அதை நடைமுறைக்கு கொண்டு வர வேண்டும் என்று பாடுபட்ட நாடு இந்தியா. அந்த வகையில் உரிமை மட்டும் அல்ல. தமிழர்களுக்கு அரசியல் உரிமை பெற்றுத்தரும் கடமையும் இந்தியாவிற்கு இருக் கிறது.

அதை மனதில் வைத்தே தமிழர் களுக்கு அதிகாரம் வழங்குவது பற்றி இலங்கை வெளியுறவுத் துறை அமைச்சருடன் பல முறை இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் பேசியிருக்கிறார். அங்கு வாழ்வதும் நம் தமிழ் சொந் தங்கள்தான். இந்திய மக்களுக்கு அதில் அக்கறை இருக்கிறது என் பதை நிரூபிக்கும் விதத்திலேயே இந்தியா ஆக்கபூர்வமான செயல் களில் ஈடுபட்டது. இப்போதும் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது. தமி ழகத்தில் நாங்களும், தி.மு.க.வும் மட்டுமல்ல- அனைத்து அரசியல் கட்சிகளும், ஏன் தமிழக அரசின் நிலைப்பாடும் கூட இதுதான். அத னால்தான் அனைவருமே தமிழர்க ளுக்கு அதிகாரம் என்பதை ஒரு முகமாக நின்று வலியுறுத்தி வருகி றோம். இந்தியாவிற்கும், இலங் கைக்கும் உறவு தொடருவதற்கு காரணமே தமிழர்களின் பாதுகாப் பிற்காகத்தான் என்பதை அனை வரும் புரிந்து கொள்ள வேண்டும். அந்த அடிப்படையில்தான் போர் முடிந்த பிறகு தமிழர்களின் வாழ் வாதாரத்தை மேம்படுத்தவும், அவர்கள் சகஜ வாழ்க்கையை சிங்களவர்களுக்கு இணையாக சம அந்தஸ்துடன் அனுபவிக்கவும் எண்ணற்ற நலத்திட்டங்களுக்கு இந்தியா நிதியுதவி வழங்கி வருகி றது. இந்தப் பாதையில் தமிழர்க ளின் உரிமையை நிலைநாட்ட இந் திய அரசு பாடுபட வேண்டும் என்று நாங்கள் தொடர்ந்து வலியு றுத்துவோம். ■

தேர்தலுக்காக இதை கையிலெடுக்கிறார்கள். ஆனால் நாங்கள் இலங்கைத் தமிழர்களுக்காக உணர்வுபூர்வமாக குரல் கொடுக்கிறோம்' என்றார். சென்னை மெரினா கடற்கரையில் 20 ஆம் திகதி பங்கேற்ற மே-17 இயக்கத்தைச் சேர்ந்த மாணவர் செந்தில் முருகன், 'மாணவர்கள் போராட்டம் வீண் போனதாக வரலாறு இல்லை. இலங்கைத் தமிழர்களுக்கு நீதி கிடைக்க, நியாயம் கிடைக்க நாங்கள் தொடர்ந்து போராடுவோம்' என்று ஆவேசப்பட்டார். மத்திய அரசு அலுவலக முற்றுகையில் கலந்து கொண்ட வழக்கறிஞர் சந்திரசேகரன், 'அந்த பாலகன் (பாலச்சந்திரன்) என்ன செய்தான்? அவனை சுட்டுக் கொன்றுள்ள இலங்கை இராணுவத்தினருக்கு பிள்ளை குட்டிகள் இல்லையா? சர்வதேச போர்க்குற்றவாளி என்று ராஜபக்சவை அறிவிக்க இந்தியா நடவடிக்கை எடுக்க வேண்டும். சாக்குப் போக்கு சொல்லிக் கொண்டிருக்கக் கூடாது' என்று கொதித்தெழுந்தார். போராட்டக்குழுத் தலைவி திவ்யா, 'ராஜபக்சவை போர்க்குற்றவாளி என்று அறிவிக்க வேண்டும். தமிழர்களுக்கு தனி ஈழம் கொடுக்க வேண்டும்' என்று ஆக்ரோஷமாக பேட்டி கொடுத்தார். இன்னொரு மாணவன் கதிரவன், 'இலங்கை அரசை காப்பாற்ற இந்தியா ஏன் இப்படித் துடிக்கிறது. நம் பிரதமருக்கு தமிழர்கள் வேண்டுமா, சிங்களவர்கள் வேண்டுமா?' என்று டென்ஷன் ஆனார். இப்படி மாணவர்கள் போராட்டம் தமிழகத்தில் தீப்பந்தம் போல் எரிந்தது.

மார்ச் 20ஆம் திகதி மட்டும் தமிழகத்தின் தலைநகரான சென்னையோ போர்க்களமாக மாறியது. மெரினா கடற்கரையில் காந்தி சிலை எதிரில் மே-17 இயக்கம் சார்பில் போராட்டம், கிண்டியில் உள்ள கவர்னரின் ராஜ்பவனை வழக்கறிஞர்கள் முற்றுகை, சென்னையில் உள்ள இந்திய வெளியுறவுத்துறை அமைச்சக அலுவலகம் முன்பு தேசிய கட்சியான பாரதீய ஜனதாக் கட்சி சார்பில் போராட்டம், ஊழல் எதிர்ப்புக்காக போராடி வரும் அரவிந்த் ஹெஜ்ரிவால் கட்சி சார்பில் சி.பி.ஐ. அலுவலகங்கள் இருக்கும் சென்னை நுங்கம்பாக்கம் சாஸ்திரி பவன் எதிரில் முற்றுகைப் போராட்டம், சென்னை அண்ணாசாலையில் உள்ள தாராப்பூர் டவர் அருகில் இன்னொரு தேசிய கட்சியான மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் போராட்டம், அடுத்து அடையாறில் உள்ள ஐக்கிய நாடுகள் சபை அலுவலகம் முற்றுகைப் போராட்டம்- இப்படி போராட்டக் காட்சிகளின் தலைநகரமாக மார்ச் 20 ஆம் திகதி சென்னை மாறி விட்டது. அந்த அளவிற்கு இலங்கைத் தமிழர் பிரச்சினை தமிழர்களின் உணர்வுகளைக் கக்கும் நெருப்புப் போராட்டமாக மாறிக் கொண்டிருக்கிறது. 1965இல் மாணவர்களின் இந்தி எதிர்ப்பு போர் தமிழ் மொழியைப் பாதுகாக்க நடைபெற்றது. 48 வருடங்கள் கழித்து அதே மாணவர்களின் எழுச்சி தங்களின் தொப்புள்கொடி உறவான இலங்கைத் தமிழர்களைக் காப்பாற்ற கிளம்பியிருக்கிறது. 20ஆம் திகதி போராட்டத்தில் கலந்து கொள்ள வேண்டிய வைகோவே, 'மாணவர்கள் போராட்டத்தை அரசியலாக்க வேண்டாம்' என்று கூறி விட்டு, மும்பையில் அதே தினத்தில் நடைபெறும் இலங்கைத் தமிழர் போராட்டத்தில் கலந்து கொள்ள புறப்பட்டுச் சென்று விட்டார் என்றால், மாணவர்களின் போராட்டம் எந்த அளவிற்கு உணர்ச்சிபூர்வமான உத்வேகப் போராட்டமாக தமிழகத்தில் உருவாகிக் கொண்டிருக்கிறது என்பதை அறிந்து கொள்ளலாம். 'போர்க்குற்ற விசாரணை' என்றெல்லாம் துவங்கிய மாணவர் போராட்டம் இப்போது ஒட்டுமொத்தமாகவே 'தமிழர்களுக்கு இலங்கையில் தனி ஈழம் அமைய வேண்டும்' என்ற கோரிக்கையின் மறு உருவமாக வேகமாக மாறிக் கொண்டிருக்கிறது! ■



# மாணவர்களின் போராட்டத்தை உன்னிப்பாகப் பார்த்து காய்நகர்த்திய கலைஞர்



இந்திய அமைச்சரவையிலிருந்து தி.மு.க. விலகியிருக்கிறது. அத்துடன் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணியிலிருந்தும் விலகி விட்டது. இந்த முறை இலங்கை மனித உரிமைகள் மீறல் தொடர்பான அமெரிக்க தீர்மானம் ஐ.நா. சபையில் வருகிறது என்று அறிந்த தினத்திலிருந்தே இந்திய அரசுக்கு அழுத்தம் கொடுக்கத் தொடங்கினார் தி.மு.க. தலைவர் கருணாநிதி. பெப்ரவரி 25ஆம் திகதி நடைபெற்ற டெசோ கூட்டம்தான் அதன் தொடக்கம். காங்கிரஸுடன் கூட்டணியை தொடருவதா, வேண்டாமா என்பதை முடிவு செய்வதற்கு வசதியாக அமைந்த முதல் கூட்டம் இதுதான்! அன்றைய தினம் கூடிய டெசோவில் 'மார்ச் 5 ஆம் திகதி இலங்கைத் தூதரகம் முற்றுகைப் போராட்டம்' 'டெல்லியில் மார்ச் 7ஆம் திகதி டெசோ கருத்தரங்கம்' என்று அறிவித்தார். 'இலங்கையில் நடந்த வேதனைகளை இந்திய அரசுக்கு உணர்த்த இந்தப் போராட்டம்' என்றார். அந்தப் போராட்டம் முடிந்து மாலை அண்ணா அறிவாலயத்தில் 'அவசர டெசோ' கூட்டம் நடைபெற்றது. அங்கே 'அடுத்த போராட்டம் என்ன?' என்று மற்ற டெசோ உறுப்பினர்கள் கேட்கும் முன்பே, 'மார்ச் 12 ஆம் திகதி தமிழகம் தழுவிய பந்த்' என்று தி.மு.க. தலைவர் கருணாநிதியே முந்திக் கொண்டு அறிவித்தார்.

பந்திற்கு முன்பு டெல்லியில் டெசோ கருத்தரங்கம். இக்கூட்டத்திற்கு முதல் நாள் 'இலங்கையில் போர் நின்று விட்டதாகப் பொய் சொன்னது போர்க்குற்றமே' என்று காங்கிரஸைப் பார்த்து ஒரு 'புதிய குண்டைத் தூக்கிப் போட்டார் தி.மு.க. தலைவர். டெசோ கருத்தரங்கிற்கு அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும் அழைப்பு விடுத்தாலும், வரும் பாராளுமன்ற தேர்தல் அரசியல் கூட்டணி கருதி பா.ஜ.க. உள்ளிட்ட பல தேசியக் கட்சிகள் வரவில்லை. குறிப்பாக கம்யூனிஸ்ட் கட்சியினர் வராதது அவருக்கு பெருத்த வேதனை. அதே சமயத்தில், தி.மு.க. கூட்டணியை எப்படியாவது தக்க வைத்துக்கொள்ள வேண்டும் என்று நினைத்து கடைசி நிமிடத்தில் தமிழக காங்கிரஸ் தலைவர் ஞானதேசிகன், மத்திய அமைச்சர் குலாம் நபி ஆசாத் போன்றவர்களை காங்கிரஸ் கட்சி டெசோ கருத்தரங்கிற்கு மட்டும் அனுப்பியது. அப்போது இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சல்மான் குர்ஷித் 'அமெரிக்க தீர்மானம் ஆதரிப்பது குறித்து இப்போது ஒன்றும் கருத்துச் சொல்ல முடியாது' என்று பாராளுமன்றத்தில் பா.ஜ.க. உள்ளிட்ட கட்சிகள் எழுப்பிய கோரிக்கைக்கு பதில் கூறியிருந்த நேரம். ஆனால், கூட்டத்தில் கலந்துகொண்ட குலாம் நபி ஆசாத், 'அமெரிக்கத் தீர்மானத்தை ஆதரிக்கும் வாய்ப்பு இருக்கிறது' என்றார். முதலில் அமெரிக்க தீர்மானத்தை இந்தியா ஆதரித்தால் போதும் என்பதே தி.மு.க.வின் நிலைப்பாடாக இருந்தது. 'பெரியண்ணன்' போலவும் 'சூப்பர் பொலிஸ்' போலவும் இந்தியா செயல்பட முடியாது என்று சல்மான் குர்ஷித் சொன்னதும், 'மதிப்பு மிக்க நட்பு நாடான இலங்

கையின் உள்நாட்டு விவகாரத்தில் தலையிட மாட்டோம்' என்று காங்கிரஸ் செய்தித் தொடர்பாளர் அபிசேக் சிங்வி சொன்னதையும் கண்டித்த கலைஞர் கருணாநிதி, 'இது உலகத் தமிழ் மக்களிடையே மிகப்பெரிய வருத்தத்தையும், வேதனையையும் ஏற்படுத்தியுள்ளது' என்று கூறியிருந்தார். அது மட்டுமன்றி, 'நம் நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர் எதிரியின் இராணுவத்தின் பக்கம் நின்று பேசும் நம் நாட்டு தளபதி போல் பேசுகிறார்' என்று கடுமையாகவே சாடினார். ஆனாலும், ஐ.நா.வில் வரும் தீர்மானம் பற்றி முடிவை அறிவிக்க மத்திய அரசு தயங்கிய நிலை தொடர்ந்தது. பிறகு ஒரு கட்டத்தில் 'இனி பொறுத்துக் கொண்டிருக்க முடியாத நிலைமை நெருங்கிக் கொண்டிருக்கிறது. ஆகவே இந்திய அரசு ஒரு நொடியும் தாமதிக்காமல் அமெரிக்க தீர்மானத்தில் தன் முடிவை அறிவிக்க வேண்டும்' என்றும், 'காங்கிரஸ் கட்சிக்கும், மத்திய அரசுக்கும் இலங்கைத் தமிழர் விடயத்தில் உள்ள கருத்து வேறுபாடு கவலையளிக்கிறது' என்றும் குத்திக் காட்டினார் கலைஞர் கருணாநிதி.

அப்படியும், மத்திய அரசு செவிமடுக்கவில்லை. இந்நிலையில், மார்ச் 15ஆம் திகதி அதிரடி முடிவை எடுத்தது தி.மு.க. 'அமெரிக்க தீர்மானத்தை ஆதரித்தால் மட்டும் போதாது. அதற்கு திருத்த தீர்மானமும் இந்தியா கொண்டு வந்து வலுப்படுத்த வேண்டும்' என்று தன் நிலைப்பாட்டை மாற்றிய கலைஞர் கருணாநிதி, 'அது நடக்கவில்லை என்றால் தி.மு.க.வினராகிய நாங்கள் இந்திய அரசின் அமைச்சரவையிலே இனிமேலும் நீடிப்பதென்பது அர்த்தமற்றதாகி விடும் என்பதை உறுதியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்' என்று எச்சரிக்கை விடுத்தார். சோனியாவுக்கும், பிரதமர் மன்மோகன்சிங்கிற்கும் 'அவசரக்கடிதமும்' எழுதினார். ஐ.நா.வில் அன்றைய தினம் நடந்த யூ.பி.ஆர்.ரிவியூவ் கூட்டத்தில் இலங்கையை இந்தியா பாராட்டிப் பேசியதே தி.மு.க.வின் 'உடனடி

# கலைஞர் சொன்னது போன்று காலவரையறை கூடிய சர்வதேச விசாரணைக்கு வழிகாண வேண்டும்



டி.எம். செல்வகணபதி,
தமிழக முன்னாள் அமைச்சர்,
இந்திய ராஜ்யசபை உறுப்பினர்,
திராவிட முன்னேற்றக் கழகம்

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இரு முக்கிய விடயங்கள் உள் ளன. 2009இல் இலங்கை சிங்கள இராணுவத்திற்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடைபெற்ற போரில் அப்பாவி தமிழ் மக்கள் கொல்லப்பட்டு, அங்கே இனப்படுகொலை அரங்கேறியதை ஒரு உள்நாட்டுப் பிரச்சினையாகப் பார்க்காமல் மனித குலப் பிரச்சினையாகப் பார்க்க வேண்டும். காரணமானவர்களைத் தண்டிக்க சர்வதேச விசாரணை நடத்தப்படவேண்டும். இரண்டாவது சண்டைக்குப் பிறகு அங்கே சகஜ நிலைமை திரும்பவில்லை. தமிழின அழிப்பு, கலாசார அழிப்பு எல்லாம் இன்னமும் தொடருகிறது. தமிழ்களின் அடிப்படை உரிமை, சிவில் உரிமை, பேச்சுரிமை பறிக்கப்பட்டுள்ளது. சிங்களவர்கள் தமிழர் பகுதிகளில் குடியமர்த்தப்பட்டு, சொந்த மண்ணில் தமிழ் மக்கள் அகதிகளாக வாழ்கிறார்கள். ஐந்து தமிழர்களுக்கு ஒரு இராணுவ வீரர் என்ற முறையில் அங்கே இராணுவம் தமிழர் பகுதிகளில் முகாமிட்டிருக்கிறது. தமிழனின் இல்லத்தில் சிறிய நிகழ்ச்சி நடத்த வேண்டும் என்றால் கூட இராணுவத்தின் அனுமதி தேவை என்ற நெருக்கடி நிலவுகிறது. ஜனநாயக நாட்டில் உள்ள உரிமைகள் அங்கு தமிழர்களுக்கு இல்லை. ஏன் உங்கள் 'சமகாலம்' பத்திரிகை நிருபரே தமிழர் பகுதிக்குள் நுழைய முடியாது. செய்தி சேகரிக்கப் போகிறவர்கள் காணாமல் போய் விடுகிறார்கள். ஜனநாயக நாட்டில் இப்படியெல்லாம் நடக்குமா?

இலங்கைத் தமிழர்களின் மீது நடத்தப்பட்ட மனித உரிமை மீறல்களுக்கு 'சர்வதேச விசாரணை', 'காலவரையறைக்குள் நடவடிக்கை' என்பதெல்லாம்தான் எங்கள் தலைவர் கலைஞரின் கோரிக்கை. அவர் இன்று நேற்று அல்ல இலங்கைத் தமிழர்களுக்காக 1956இலிருந்து போராடி வருகிறார். இரு முறை இலங்கைத் தமிழர்களுக்காக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சியை இழந்தார். முதலமைச்சர் பதவியை இழந்தார். தன் எம்.எல்.ஏ. பதவியை ராஜிநாமா செய்தார். டெசோவை மீண்டும் உயிரூட்டி இலங்கைத் தமிழர் பிரச்சினையை சர்வதேச அளவில் கொண்டு போயிருக்கிறார். தளபதி ஸ்டாலின் ஐ.நா. சபைக்கே சென்று தமிழர்களின் கோரிக்கைகளை கொடுத்து வலியுறுத்தி விட்டு வந்துள்ளார். அதன் விளைவாக இன்று இந்தியப் பாராளுமன்றத்தில் காங்கிரஸ் தவிர அனைத்து அரசியல் கட்சிகளும் இலங்கைத் தமிழர்கள் விடயத்தில் ஒரணியாக நிற்கின்றன. இந்தியாவின் பிரதான எதிர்க்கட்சியான பா.ஜ.க.வே ஆதரவாக குரல் கொடுக்கிறது. தமிழக அளவிலும், இந்திய அளவிலும்- ஏன் உலக

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

அளவிலும் இலங்கைத் தமிழர்கள் படும் இன்னல்களை தலைவர் கலைஞர் எடுத்துச் சென்றதுதான் இன்று இலங்கைப் பிரச்சினையில் இந்தியா 'ப்ரோ ஆக்டீவ்' ரோல் எடுக்க வேண்டும் 'பொறுப்புள்ள அண்டை நாடாக இப்பிரச்சினையை அணுக வேண்டும்' என்று அனைத்துக் கட்சிகளும் வற்புறுத்துகின்றன. அதுமட்டுமல்ல, 'இது தமிழ்நாட்டு பிரச்சினையோ, தமிழர் பிரச்சினையோ அல்ல. இந்தியப் பிரச்சினை' என்ற நிலை உருவாகியிருப்பதற்கு தி.மு.க.வின் இடைவிடாத போராட்டம்தான் காரணம்.

ஒரு பிரச்சினையில் இரு விடயங்களைப் பார்க்க வேண்டும். ஒன்று 'சென்ஸ் ஆப் தி பீயூப்பிள்'. இன்னொன்று 'சென்ஸ் ஆப் தி ஹவுஸ்'. இந்த இரு உணர்வுகளுமே இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக இந்தியாவில் இருக்கும் போது, மத்திய அரசு ஏன் மௌனமாக இருக்கிறது? அதுதான் எங்களுக்கு வேதனையாக இருக்கிறது. அதனால்தான் 'அமைச்சரவையில் நீடிப்பதில் அர்த்தமல்ல' என்று கலைஞர் மத்திய அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார். இது தவிர தன்னைத் தானே கொளுத்திக் கொள்ளும் (கடலூர் மணி தீக்குளித்து இறந்தது) அளவிற்கு தமிழகம் கொந்தளித்து நிற்கிறது. மாணவர்கள் போராட்டம் மாபெரும் எழுச்சியுடன் நடக்கிறது. ஐ.ஐ.டி. வளாகத்திலேயே மாணவர்கள் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். அந்த அளவிற்கு இப்பிரச்சினை உணர்வு பூர்வமாக எரிமலை போல் நிற்கிறது. ஆனால் இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும், இலங்கை அதிபரை போர்க்குற்றவாளியாக அறிவித்து சர்வதேச விசாரணை நடத்த வேண்டும் என்றெல்லாம் சட்டமன்றத்தில் தீர்மானம் போட்ட அ.தி.மு.க. அரசு இப்போது மாணவர்களின் போராட்டத்தை அடக்க கல்லூரிகளை காலவரையின்றி மூடுகிறது. இது இலங்கைத் தமிழருக்கு அளிக்கும் ஆதரவு அல்ல. ராஜபக்சவிற்கு நேசக்கரம் நீட்டுவதற்கு சமம்.

ராஜீவ் இலங்கை சென்ற போது தாக்கிய கப்பற்படை வீரருக்கு இலங்கை அரசு கௌரவம் அளிக்கிறது. ராஜீவ்- ஜெயவர்த்தனே ஒப்பந்தத்தை ஏற்க மறுக்கிறது. இந்திய அமைதி காக்கும் படையை முதலில் அழைத்துவிட்டு பிறகு அவமதித்து திருப்பி அனுப்பியது. பழைய வரலாற்றைப் பார்த்தால் கூட சீனா ஆக்கிரமிப்பின் போது இந்தியாவுக்கு ஆதரவாக நிற்கவில்லை. பங்களாதேஷ் போரின் போது பாகிஸ்தான் போர் விமானங்கள் கொழும்பில் பெட்ரோல் நிரப்ப அனுமதி கொடுத்தது. 'நாங்கள் இந்தியாவின் போரை நடத்தினோம்' என்று இலங்கை அதிபரே 2009 போருக்குப் பிறகு அறிவிக்கிறார்- இப்படியெல்லாம் உள்ள இலங்கை எப்படி இந்தியாவிற்கு நட்பு நாடாக இருக்க முடியும்? அதனால்தான் சொல்கிறோம். 'நட்பு நாடு' 'உள்நாட்டுப் பிரச்சினை' என்றெல்லாம் கூறி இந்தியா குழம்ப வேண்டாம். ஏனென்றால் பாலஸ்தீன விடுதலை இயக்கத்திற்கு ஆதரவாக 30 வருடம் இஸ்ரேலுடனான உறவைத் துண்டித்து வைத்திருந்தவர்கள் நாம். மாலைதீவு விடயத்தில் நீதிமன்றம் வாரண்ட் பிறப்பித்த முன்னாள் அதிபரை நம் தூதரகத்திற்குள்ளேயே அடைக்கலம் கொடுத்து தங்க வைத்து சமாதானம் செய்து அனுப்பி வைத்தவர்கள் நாம். உலகில் உள்ள அனைத்து விடுதலைக்கும் பாடுபடும் இந்தியா ஏன் தமிழர்கள் விடுதலைக்கு மட்டும் பாடுபடக்கூடாது. ஆகவே இந்தியா இலங்கைத் தமிழர் விடயத்தில் தலையிட்டு, 13ஆவது அரசியல் சட்ட திருத்தத்தின் படி வழங்கப்பட வேண்டிய அதிகாரப் பகிர்வை உடனடியாக அளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். கலைஞர் சொன்னது போல் 'காலவரையறையுடன் கூடிய' சர்வதேச விசாரணைக்கு வழி காண வேண்டும். ■

கோபத்திற்கு' காரணமாக அமைந்தது. இந்த எச்சரிக்கைக்கு பலன் கிடைத்தது. அதுவரை முரண்டு பிடித்துக் கொண்டிருந்த வெளியுறவுத் துறை அமைச்சர் சல்மான் குர்ஷித், 'தீர்மானத்தின் மீதான முடிவை எடுக்கும் முன்பு தி.மு.க.வை கலந்து ஆலோசிப்போம்' என்று லக்னோவில் அறிவித்தார். அதைத் தொடர்ந்து மத்திய அமைச்சர்கள் சிதம்பரம், ஏ.கே.அந்தோணி, குலாம் நபி ஆசாத் சென்னை வந்தார்கள். கலைஞர் கருணாநிதியை சந்தித்துப் பேசினார்கள். மாலை 5.30 மணிக்குத் தொடங்கிய பேச்சுவார்த்தை இரவு 7.45 மணி வரை நீடித்தது. பேச்சுவார்த்தை துவங்கிய 15 நிமிடங்கள் கழித்து டி. ஆர்.பாலுவும், பேச்சுவார்த்தை முடிவதற்கு முக்கால் மணி நேரத்திற்கு முன்பு மு.க.ஸ்டாலினும் அதில் கலந்து கொண்டார்கள். கனிமொழியின் இல்லத்தில் பேச்சுவார்த்தை நடந்தாலும், 'இது ஏதோ 2-ஜி அலைக்கற்றை தொடர்பான பேச்சுவார்த்தை' என்று நினைத்துவிடக் கூடாது என்பதற்காக மத்திய அமைச்சர்கள் வரும் முன்பே வீட்டை விட்டுக் கிளம்பிச் சென்ற கனிமொழி, அந்த அமைச்சர்கள் பேச்சுவார்த்தை முடிந்து டெல்லிக்கு கிளம்பிய பிறகுதான் வீட்டிற்குள் நுழைந்தார்.

பேச்சுவார்த்தை சுமுகமாக இல்லை என்பது மூன்று மத்திய அமைச்சர்களின் முகத்திலேயே பிரதிபலித்தது. சென்ற 2011 சட்டமன்றத் தேர்தலின் போது தொகுதி பங்கீட்டுக்கு வந்த நேரத்தில் இருந்த தெம்பு அந்த மூன்று காங்கிரஸ் அமைச்சர்களின் முகத்திலும் இப்போது காணப்படவில்லை. வெளியில் வந்தவுடன் நிருபர்களைச் சந்தித்த குலாம் நபி ஆசாத், 'கருணாநிதிஜி சோனியாவுக்கும், பிரதமர் மன்மோகன்சிங்கிற்கும் எழுதிய கடிதங்கள் தொடர்பாக ஆலோசனை செய்தோம். தீர்மானம் பற்றிப் பேசவில்லை. நடந்த விவரங்களை மேலிடத்தில் சொல்வோம். மீண்டும் வந்து பேசுவோம்' என்றார். அப்படிச் சொல்லிவிட்டு காரில் ஏறி அமர்ந்தவுடனேயே நிதியமைச்சர்

சிதம்பரம் தன் பாக்கெட்டில் இருந்த செல்போனை எடுத்து பிரதமர் மன்மோகன்சிங்கிடம் பேசினார். அத்துடன் கார் அங்கிருந்து புறப்பட்டது. இவர்கள் சென்ற பிறகு நிருபர்களை சந்தித்த கலைஞர் கருணாநிதி, 'இலங்கையில் நடந்தது போர்க்குற்றம், இனப்படுகொலை என்று அறிவித்து அந்த திருத்தங்களுடன், சுதந்திரமான பன்னாட்டு ஆணையம் அமைத்து குறிப்பிட்ட கால வரம்பிற்குள் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று இந்திய நாடாளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி, அதே போல் அந்த திருத்தங்களுடன் கூடிய அமெரிக்கத் தீர்மானத்தையும் ஆதரிக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளோம்' என்றார். 'இந்தியப் பாராளுமன்றத் தீர்மானம் பற்றி ஆவன செய்வதாக கூறிவிட்டுச் சென்றிருக்கிறார்கள்' என்றார். ஆனால் இந்த விடயத்தை குலாம் நபி ஆசாத் நிருபர்களிடம் சொல்லவில்லை என்ற கோபம் தி.மு.க. தலைவர் கருணாநிதிக்கு ஏற்பட்டது.

உடனே அன்று இரவே சீனியர் லீடர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். மறு நாள் காலை டெல்லியில் காங்கிரஸ் எம்.பிக்கள் கூட்டம். அதே நேரத்தில் ஜெனீவா தீர்மானத்தின் (வலுவிழக்கச் செய்யப்பட்ட தீர்மானம்) இறுதி வடிவத்தைப் பார்த்து ரொம்பவும் அப்செட் ஆனார். அதற்கு முன்பு அண்ணா அறிவாலயத்தில் தி.மு.க.வின் உயர்மட்டக் குழுக் கூட்டத்தைக் கூட்டினார். அதில், 'மத்திய அமைச்சரவையிலிருந்தும், ஐக்கிய முற்போக்கு கூட்டணியிலிருந்தும் விலகுகிறோம்' என்ற முடிவை அறிவித்தார். 'விலகியே தீர வேண்டும்' என்ற முடிவிற்கு மெருகூட்டி, வலியுறுத்தியது மு.க.ஸ்டாலின்தான் என்றார் சீனியர் லீடர் ஒருவர். இந்திய நாடாளுமன்றத்தில் தீர்மானம் கொண்டு வந்தால் மறுபரிசீலனை செய்யத் தயார் என்று பத்திரிகையாளர் சந்திப்பில் கலைஞர் கருணாநிதி தெரிவித்தாலும், ஒபிஷியலாக வெளியிடப்பட்ட பத்திரிகைக் குறிப்பில், 'மறுபரிசிலனை' என்ற வார்த்தை இடம் பெறவில்லை. தி.மு.க. முடிவு பற்றி ஆலோசிக்க, சோனியா தலைமையில் காங்கிரஸ் எம்.பிக்கள் கூட்டம் மார்ச் 19ஆம் தேதி நடந்தது. அதில், 'இலங்கைத் தமிழர்களின் சட்டபூர்வமான உரிமைகள் மறுக்கப்படுவது நமக்கு வேதனையாக இருக்கிறது. அப்பாவி மக்கள் மற்றும் குழந்தைகள் மீது போரின் இறுதிக் கட்டத்தில் நடத்தப்பட்ட சொல்லமுடியாத அராஜகங்கள் துன்பத்தைத் தருகிறது' என்று இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பாக முதல் முறையாக சோனியா பேசினாலும், 'சர்வதேச விசாரணை' பற்றி அவர் குறிப்பிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஆனாலும் அதற்கு முன்பே தி.மு.க. தன் ஆதரவை வாபஸ் பெற்று விட்டது.

'சோனியா பேசியது டூ லேட்' என்று கருத்துச் சொன்னார் தி.மு.க. எம்.பி. டி.கே.எஸ். இளங்கோவன். சோனியாவின் பேச்சும் தி.மு.க.வை திருப்திப்படுத்தவில்லை. இந்தியப் பாராளுமன்றத் தீர்மானமோ, ஜெனீவாத் திருத்தமோ 'சர்வதேச விசாரணை' 'இனப்படுகொலை' என்ற வாசகங்களைக் கொண்டதாக இருக்கப் போவதில்லை என்பதே தி.மு.க. தரப்பின் எண்ணம். இதற்கு முன்பு ஐந்து முறைகளுக்கு மேல் மத்திய அரசுக்கு 'ஆதரவை வாபஸ் பெறுவேன்' என்று தி.மு.க. அறிவித்திருந்தாலும், இந்த முறை 'எரிமலையாக' குமுறிய மாணவர் போராட்டம் தி.மு.க.வின் அறிவிப்பை முடிவாக மாற்ற நிர்ப்பந்தம் அளித்து விட்டது. காங்கிரஸிடம் இருந்து விலகிச் சென்று விட வேண்டும் என்ற 'விவேகத்தை' அக்கட்சிக்கு கொடுத்து விட்

## இலங்கைத்தமிழர் நல்வாழ்வுக்காக மறுமலர்ச்சி தி.மு.க. முன்வைக்கும் மூன்று கோரிக்கைகள்

ன்று



மாசிலாமணி,
அவைத் தலைவர்,
மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம்

இ பேசப்படும் 'பொது வாக்கெடுப்பு' என்ற கோரிக்கையை முதன் முதலில் இலங்கைத் தமிழர்களுக்காக முன் வைத்தவர் எங்கள் பொதுச் செயலாளர் வைகோதான். ஐரோப்பிய நாடாளுமன்ற கூட்டுக் குழுக் கூட்டத்தில் முதன் முதலாக இந்த கோரிக்கையை எழுப்பிப் பேசினார். அதைத்தான் இப்போது அனைவரும் பேசுகிறார்கள். போர்ச்சுக்கலின் காலனி ஆதிக்கத்திலிருந்த இந்தோனேஷியா சுதந்திரம் பெற்றது. பிறகு அந்நாட்டுடன் இருந்த கிழக்கு தைமூர், 'நாங்களும் தனித் தேசிய இனம். ஆகவே எங்களுக்கு தனி நாடு வேண்டும்' என்ற கோரிக்கையை போர்ச்சுக்கல்லிடம் முன் வைத்தது. அதை ஏற்று போர்ச்சுக்கல்லே முன்நின்று கிழக்கு தைமூரை பொதுவாக்கெடுப்பு மூலம் உருவாக்கியது. அதே மாதிரி இலங்கை பிரிட்டிஷ் ஆதிக்கத்தில் இருந்தது. அங்கு தமிழர்களும், சிங்களவர்களும் ஒருங்கிணைந்து வாழ்வார்கள் என்று நினைத்து இலங்கைக்கு சுதந்திர நாடு அந்தஸ்தை பிரிட்டிஷ் கொடுத்தது. ஆனால் அப்படி இணைந்து வாழ முடியாது என்ற நிலை இலங்கையில் ஏற்பட்டு விட்டது. இந்த உதாரணத்தைச் சுட்டிக் காட்டிய வைகோ, 'இலங்கைக்கு சுதந்திரம் கொடுத்த நாடு என்ற

டது. அதற்கு காரணம் தமிழகத்தில் உள்ள 39 எம்.பி.க்களின் வீடுகளையும் முற்றுகையிடுவதாக அறிவித்து, ப.சிதம்பரம், சுதர்ஸன நாச்சியப்பன், விஸ்வநாதன் போன்ற காங்கிரஸ் எம்.பி.க்களின் தமிழக இல்லங்களை முற்றுகையிட்டது போல் தி.மு.க. எம்.பி.க்களின் வீடுகளையும் முற்றுகையிட்டு விடக் கூடாது என்பதற்காகவே! இதற்கிடையில், 'ஆதரவை வாபஸ்' அறிவித்த அன்று இரவு 10.30 மணிக்கு தி.மு.க. வினருக்கு குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி 'அவசர அப்பாயின்மெண்ட்' கொடுத்தது சோனியா, பிரதமர் மன்மோகன்சிங், ப.சிதம்பரம் உள்ளிட்ட மூவருக்குமே அதிர்ச்சியாக அமைந்துவிட்டது. தி.மு.க. எம்.பி.க்களும் குடியரசுத் தலைவரைச் சந்தித்து தங்கள் ஆதரவு விலகல் கடிதத்தை வழங்கி விட்டார்கள். அதன் பிறகு பிரதமர் மன்மோகன்சிங்கைச் சந்தித்து தங்கள் அமைச்சர் பதவிகளையும் ராஜினாமா செய்து விட்டார்கள்.

மாணவர்கள் போராட்டத்தின் மாண்பை நன்கு உணர்ந்தவர் தி.மு.க. தலைவர் கருணாநிதி. அதனால் தமிழகத்தில் 1965இல் ஆட்சியை இழந்த காங்கிரஸ் கட்சி 46 வருடங்களாக திரும்பவும் ஆட்சியைப் பிடிக்க முடியவில்லை என்பதும் அவருக்குப் புரியும். அதனால்தான் மாணவர்களின் போராட்டத்தை அவ்வளவு உன்னிப்பாகப் பார்த்து காய் நகர்த்துகிறார் கலைஞர் கருணாநிதி. இந்திய பாராளுமன்றத்தில் தீர்மானம் கொண்டு வரவும், ஜெனீவாவில் அமெரிக்கத் தீர்மானத்திற்கும் திருத்தம் கொடுக்கவும் தயாராகிவரும் இந்தியா, 'ஒபிஷியலாகவும்' அறிவித்து, 'ஜெனீவாத் தீர்மானத்தை நீர்த்துப் போக நாங்கள் அமெரிக்காவுடன் சேர்ந்து செயல்படவில்லை' என்று தமிழக கட்சிகளுக்கு 'சமாதானம்' சொல்லியிருக்கிறது. ஆனால் 'எல்லாமே டூ லேட்' என்பதுதான் உண்மையான நிலைமை. 'இனப்படுகொலை' 'சர்வதேச விசாரணை' இரண்டும் இல்லாமல், 'ஆதரவு வாபஸ்' முடிவை தி.மு.க. திரும்பப் பெறுவதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை. அதை வலியுறுத்தும் வகையில், 'தி.மு.க. ராஜினாமா செய்யும் முடிவை திசை திருப்பி விஷம பிரசாரம் செய்வதா?' என்று முதல்வர் ஜெயலலிதாவிற்கு கண்டனமும், 'நான் இந்திய பாராளுமன்ற தீர்மானம் மட்டும் போதும் என்று ஒரு போதும் சொல்லவே இல்லை' என்றும் மறுத்துக் கூறியிருக்கிறார் கருணாநிதி. இது தான் எடுத்த முடிவிலிருந்து பின்வாங்கப் போவதில்லை என்ற அவரது மனநிலையை வெளிப்படுத்துகிறது. இலங்கைத் தமிழர் விவகாரத்தில் 'இலங்கை அரசைக்

---

முறையில் அங்கேயுள்ள தமிழர்கள் மற்றும் புலம் பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் பொது வாக்கெடுப்பு நடத்தி தமிழர்களுக்கு தனி நாடு பெற்றுத் தர வேண்டிய பொறுப்பு பிரிட்டிஷ் அரசுக்கு இருக்கிறது' என்று ஐரோப்பிய பாராளுமன்ற கூட்டுக்குழுக் கூட்டத்தில் கோரிக்கை விடுத்தார். இந்திய பாராளுமன்றத்தில் எங்கள் தலைவர் போல் இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காக வாதிட்டவர் வேறு எவரும் இல்லை என்றே சொல்லலாம்.

இலங்கைத் தமிழர்கள் ஏன் தனி நாடு கேட்கிறார்கள் என்பதற்கான காரணங்களையும் அடுக்கினார் வைகோ. அமைதிப் போராட்டம் எப்படி அங்கே ஆயுதம் ஏந்திய போராட்டமாக மாறியது என்பதையும், அதற்கு இலங்கை அரசு எப்படியெல்லாம் காரணமாக அமைந்தது என்பதையும் விளக்கிப் பேசினார். இன்று இலங்கைக்குள் ஐ.நா. அதிகாரிகள் போக முடியவில்லை. செஞ்சிலுவைச் சங்கத்தினர் நுழைய முடியவில்லை. ஊடகங்கள் சுதந்திரமாகச் செயல்பட முடியவில்லை. அங்குள்ள தமிழர்களைப் பாதுகாக்க வேண்டிய ஐ.நா. மன்றமே கண் மூடித்தனமாக இருந்தது என்று வரும் தகவல்கள் எங்களுக்கு வேதனை தருவதாக இருக்கிறது. இதற்கெல்லாம் எங்களுடைய 'எல். எல். ஆர்.சி.' அறிக்கைப்படி நடவடிக்கை எடுக்கிறோம் என்று இலங்கை கூறுகிறது. குற்றவாளியே குற்றவாளியை எப்படி விசாரிக்க முடியும்? தமிழர்களைக் கொன்று குவித்த சிங்கள அரசு எப்படி நல்லிணக்க த்தை ஏற்படுத்த முடியும்? சோனியா என்ற தனிமனிதரின் பழி வாங்கும் உணர்ச்சியால் இன்று இலங்கைத் தமிழர்களுக்கு இந்த அவல நிலைமை ஏற்பட்டிருக்கிறது. போர்க்குற்றங்களை விசாரித்தால் எங்கே நாமும் பதில் சொல்ல வேண்டிய நிலை வந்து விடுமோ என்று இந்தியா நினைக்கிறது. அதனால் தான் இவ்வளவு தயங்குகிறது. இந்தியா அமைதியாக இருப்பதால்தான் இந்தப் பிரச்சினையில் உலக நாடுகளு க்கு வலிமை கிடைக்கவில்லை. ஆனால், தமிழர்களுக்கு எதிராக நடைபெற்ற போர் இந்தியா இயக்கிய போர். அதற்கு இந்திய அரசு பதில் சொல்ல வேண்டிய காலம் வந்தே தீரும்.

இன்றைய நிலையில், நாங்கள் மூன்று முக்கிய கோரிக்கைகளை இலங்கைத் தமிழர்களின் நல்வாழ்விற்காக முன் வைக்கிறோம். முதல் கோரிக்கை இலங்கையில் நடந்த இனப்படுகொலை, மனித உரிமை மீறல் பற்றி சுதந்திரமான பன்னாட்டு விசாரணை நடைபெற வேண்டும். இரண்டாவது கோரிக்கை தமிழர் பகுதிகளில் அரங்கேறும் 'சிங்களக் குடியேற்றம்' உடனடியாக தடுத்து, இதுவரை குடியேறிய சிங்களவர்கள் வெளியேற்றப்பட வேண்டும். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நிறுத்தப்பட்டிருக்கும் சிங்கள இராணுவம் திரும்பப் பெறப்பட வேண்டும். மூன்றாவதாக சிங்களவர்களுடன் தமிழர்கள் சேர்ந்து வாழும் சூழ்நிலை இப்போது அறவே இல்லை. அதனால் பொது வாக்கெடுப்பு நடத்தி தனித் தமிழ் ஈழம் அமைக்கப்பட வேண்டும். ■

காப்பாற்றுவதற்காக' எடுத்த முயற்சி தற்போது இருக்கின்ற காங்கிரஸ் கட்சியின் அரசுக்கே 'நித்ய கண்டம் பூர்ண ஆயுசாக' மாறிவிட்டதே என்ற அதிர்ச்சியில் இருக்கிறார் சோனியா காந்தி!

இப்போது வாபஸ் பெற்றாலும், 2009இல் போரின் இறுதிக்கட்டத்திலேயே இதை தி.மு.க. செய்திருந்தால், இலங்கைத் தமிழர்கள் காப்பாற்றப்பட்டிருப்பார்கள் என்பதுதான் மற்றக் கட்சிகளின் கருத்தாக இருக்கிறது. 'தமிழர்களுக்கு துரோகம் செய்தவர் கருணாநிதி' என்று தமிழக முதல்வர் ஜெயலலிதாவும், 'ஓரங்க நாடகத்தில் இதுவும் ஒரு அங்கம்' என்று சி.பி.ஐ. மாநிலச் செயலாளர் தா. பாண்டியன், 'இந்த முடிவிலாவது உறுதியாக நிற்க வேண்டும்' என்று பழ.நெடுமாறன் ஆகியோர் அறிவித்துள்ளனர். அதே எண்ணவோட்டத்தில் தான் வைகோவும் இருக்கிறார். சி.பி.எம். கட்சியின் மாநிலச் செயலாளர் ஜி.ராமகிருஷ்ணனும் இருக்கிறார். ஆனால் எதிர்பாராத விதமாக பா.ஜ.க.வின் மாநிலத் தலைவர் பொன் ராதாகிருஷ்ணன் மட்டும், 'தி.மு.க.வின் இந்த முடிவு பாராட்டத்தக்கது - வரவேற்கத்தக்கது - வாழ்த்தத்தக்கது' என்று கூறியிருப்பது, இலங்கைத் தமிழர் விவாதம் பாராளுமன்றத்தில் நடைபெற்ற போது அதை ஆக்ரோஷமாக ஆதரித்துப் பேசிய பா.ஜ.க.வின் முன்னாள் வெளியுறவுத்துறை அமைச்சர் யஷ்வந்த் சின்கா, வெங்கையா நாயுடு ஆகியோரின் நடவடிக்கைகள் போல் வித்தியாசமாகவே இருக்கிறது. ■

# தமிழர்கள் பூரண உரிமைபெற்று வாழ இலங்கை அரசை இந்தியா நிர்ப்பந்திக்க வேண்டும்



கே.எஸ். அழகிரி,
இந்திய பாராளுமன்ற உறுப்பினர்,
இந்திய தேசிய காங்கிரஸ்.

இந்தியாவில் உள்ள தேசியக்கட்சிகள் அனைத்துமே தனி ஈழத்தை ஆதரிக்கவில்லை. ஏன் தமிழகத்தில் உள்ள திராவிடக் கட்சிகளே கூட 'புலிகள் தனி ஈழம் பெற்றால் மகிழ்ச்சி' என்றுதான் சொல்கிறார்களே தவிர, அவர்களும் தனி ஈழத்தை கொள்கை ரீதியாக ஆதரிக்கவில்லை. ஒன்றுபட்ட இலங்கைக்குள் பரிபூரண அரசியல் சுதந்திரத்துடன், சிங்களவர்க்ளுக்கு இணையான உரிமைகளைப் பெற்று தமிழர் கள் அங்கு வாழ வேண்டும் என்பதுதான் காங்கிரஸ் கட்சியின் கொள்கை. இந்தியாவில் பல்வேறு இன மக்கள் சம உரிமையோடு வாழுகின்ற ஜனநாயக ரீதியிலான இந்த அரசாங்கத்தைப் பார் த்தும் கூட, இலங்கையின் அதிபர்களாக வரும் யாரும் உணரவில்லை.

போரில் விடுதலைப் புலிகள் தண்டிக்கப்பட்டு விட்டார்கள் என்பதற்காகவே இலங்கைத் தமிழர்களும் தண்டிக்கப்படக்கூடாது என்பதே எங்கள் கருத்து. அவர்களுக்கு முழு அரசியல் உரிமை கிடைக்க வேண்டும் என்பது தான் காங்கிரஸின் நிலைப்பாடு. அதை இந்தியாவால் மட்டுமே செய்ய முடியும். என்னைப் பொறுத்தவரை அமெரிக்கா தீர்மானம் கொண்டு வருவது எல்லாம் சுயநலம் சார்ந்த யுக்திகள். அதாவது, சீனாவின் ஆதிக்கத்தை இலங்கையில் கட்டுப்படுத்த அமெரிக்கா எடுத்துக் கொண்டுள்ள ஒரு ஆயுதம் அது என்றே நினைக்கிறேன். ஆனாலும் பரவாயில்லை. அது போன்ற அமெரிக்க தீர்மானங்களையும் இலங்கைக்கு 'அழுத்தம் கொடுக்க' இந்தியா பயன்படுத்திக் கொள்வதில் எந்தத் தவறுமில்லை.

காங்கிரஸ் கட்சிக்கும், தமிழகத்தில் உள்ள விடுதலைப் புலிகள் ஆதரவு கட்சிகளுக்கும் உள்ள வித்தியாசம் ஒன்றே ஒன்றுதான். அவர்கள் முடிந்த போரைப் பற்றி பேசிக் கொண்டிருக்கிறார்கள். அதன் மூலம் உலகத்தின் கவனத்தை திருப்பி மீண்டும் விடுதலைப் புலிகள் இயக்கம் புதுப்பிக்கப்படுவதற்கு ஒரு வாய்ப்புக் கிட்டுமா என்று எதிர்பார்க்கிறார்கள். ஆனால் காங்கிரஸைப் பொறுத்தமட்டில் 'நடந்தது நடந்ததாக இருக்கட்டும். இனிமேல் நடப்பவை இலங்கைத் தமிழர்களுக்கு நல்லவைகளாக அமையட்டும்' என்று கருதுகிறோம். இலங்கையில், வடகிழக்கு மாகாணம், மலையகப் பகுதிகள் உள்ளிட்ட இடங்களில் உள்ள கோடிக்கணக்கான தமிழர்கள் பூரண அரசியல் உரிமை பெற்று வாழ வேண்டும். அதற்கு இலங்கை அரசை இந்தியா நிர்ப்பந்திக்க வேண்டும் என்று விரும்புகிறோம். அதற்காக உலக நாடுகளின் கவனத்தை ஈர்க்க வேண்டும். அந்த வழியில்தான் இந்தியா இந்தப் பிரச்சினையை முன்னெடுத்துச் சென்று கொண்டிருக்கிறது. ராஜீவ்- ஜெயவர்த்தன அமைதி ஒப்பந்தம் விடுதலைப் புலிகள் செய்த 'வரலாற்றுப் பிழையால்' தோற்று விட்டது. இப்போது அங்குள்ள தமிழர்கள் ஒருமித்த கருத்திற்கு வந்து ஒட்டுமொத்தமாக இந்தியாவின் பக்கம் நின்றால், தமிழர்களுக்கு உரிமை கிடைக்க இந்திய அரசு பேச்சுவார்த்தையை தொடங்கும். ஏனென்றால் இந்தியாவை விட இலங்கைத் தமிழர்களுக்கு அக்கறை உள்ள நாடு வேறு எதுவும் இருக்க முடியாது. ■

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

புலம்பெயர் தமிழர் அரசியல்



குமார் டேவிட்

# நிழலுக்குள் இருந்து வெளியேவரும் உலகத் தமிழர் பேரவை

புலம்பெயர் தமிழர்களில் பெரும்பான்மையானவர்கள் இன்னமும்கூட விடுதலைப்புலிகளின் கோட்பாடுகளுக்காக குரல்கொடுப்பவர்களாக இல்லை என்பது எனது மதிப்பீடு

விடுதலைப் புலிகள் இயக்கம் இராணுவ ரீதியாக ஒழிக்கப்பட்டதன் பிறகு தமிழ் அரசியல் சமுதாயம் முழுவதும் மாறுதலுக்குள்ளாகும் என்பது எதிர்பார்க்கப்பட்டதேயாகும். இலங்கையில் ஆயுதமேந்திய தீவிரவாதச் செயற்பாடு இல்லாமற் போய்விட்டது. அத்துடன் இலங்கைத் தமிழர்களின் பிரதான அரசியல் பிரதிநிதித்துவ இயக்கமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மேலெழும்பியிருக்கிறது. தீவிரவாதம் இன்னமும் இருக்கிறது என்று பாதுகாப்பு அமைச்சு மாயக்காட்சி காட்டிக் கொண்டிருக்கிறது என்பது வேறு விடயம். இதுகாறும் உள்ள நிலை புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் ஒப்பீட்டளவில் மெதுவாகவே மாறிக் கொண்டு வருகிறது. ஆனால், லண்டனுக்கு நான் அண்மையில் மேற்கொண்ட விஜயத்தின் போது நிலைவரங்களை நெருக்கமாக அவதானிக்கக்கூடிய வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. பழைய நண்பர்களுடன் இரவு விடுதிகளில் கூடிக் கும்மாளம் அடித்து வாக்குவாதப்படும் சந்திப்புகளாகவே அமையும் என்று நான் எதிர்பார்த்தவை கீழைத்தேய மற்றும் ஆபிரிக்க கற்கைகளுக்கான பாடசாலையிலும் கிங்ஸ் கல்லூரியிலும் (இலங்கையில் வளர்ந்து வருகிற சர்வாதிகாரம், தேசிய இனப்பிரச்சினை, இந்து சமுத்திரத்தில் அதிகாரச் சமநிலை ஆகிய விவகாரங்களை ஆராய்கின்ற) கருத்தரங்கங்களாக மாறி விட்டன. இவை பல்கலைக்கழக நிகழ்வுகளல்ல. மாணவர் சங்கங்களினால் இந்தப் பெருங் கல்வி நிறுவனங்களில் ஏற்பாடு செய்யப்பட்டவையே.

பிரிட்டிஷ் பாராளுமன்றக் கட்டிடத்தில் நடைபெற்ற உலகத் தமிழர் பேரவை (Global Tamil Forum) யின் மகாநாட்டில் அவதானிகளில் ஒருவராகவும் நான் கலந்து கொண்டேன். புலம்பெயர்ந்த இலங்கை இளைஞர்களுடன் - பிரதானமாக தமிழர்களுடனும் ஒரு சில சிங்களவர்களுடனும்- கலந்துரையாடவும் பழகவும் சந்தர்ப்பம் கிடைத்தது. எனக்கு இது நல்லதொரு அனுபவமாக இருந்தது. அதனால், புலம்பெயர் தமிழர்கள் மத்தியில், பிரதானமாக லண்டனில் உள்ள தமிழர்கள் மத்தியிலுள்ள அரசியல் போக்குகள் பற்றியே இங்கு விபரிக்க விரும்புகின்றேன். இங்கிலாந்திலும் ஐரோப்பாவிலும் இருக்கும் ஏனைய புலம்பெயர் தமிழர்களுக்கும் இதைப் பிரயோகிப்பது பொருத்தமானதாக இருக்கும் என்பது எனது அபிப்பிராயமாகும்.

ஒரு நிச்சயமற்ற தன்மை, ஒரு மாறுதல், தெளிவாகத் தெரிகிற புதிய போக்கு ஆகியவற்றை அங்கு அவ




உலகத் தமிழர் பேரவை மகாநாட்டில் பிரிட்டிஷ் தொழிற்கட்சித் தலைவர் எட்வேர்ட் மில்லிபான்ட் உரையாற்றுகிறார்

தானிக்கக் கூடியதாக இருக்கிறது. அவைபற்றி விரிவாக பிறகு எழுதுவேன். விடுதலைப் புலிகளின் நிகழ்ச்சி நிரலுக்கு- அதாவது இலங்கையில் தமிழர்களுக்கென்று "தமிழ் ஈழம்" என்ற பெயரில் தனியானதொரு அரசு என்ற கோட்பாட்டுக்கு விசுவாசமாக இன்னமும் இருக்கிற ஒரு சிறிய பிரிவினர் மனதிலேயே நிச்சயமற்ற தன்மை குடிகொண்டிருக்கிறது. இந்தவகையான பிரிவினர் புலம்பெயர் தமிழர்கள் மத்தியில் எவ்வளவு சிறிதாக இருக்கிறார்கள் என்றோ அல்லது பெரிதாக இருக்கிறார்கள் என்றோ நான் ஊகம் சொல்ல விரும்பவில்லை. ஆனால், எனது சந்திப்புகளின் போது மூன்று அல்லது நான்கு பேர் மாத்திரமே தனிநாட்டு கோட்பாட்டைக் கொண்டிருப்பவர்கள் என்று தங்களை அடையாளம் காணக்கூடியதாக கருத்துகளைத் தெரிவித்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

சிங்களப் பெரும்பான்மையினத்தவர்களிடமிருந்து நியாயமான முறையில் தமிழர்களுக்கு எதுவுமே ஒரு போதுமே கிடைக்கப்போவதில்லை என்ற மனப்பாங்கையே இந்த ஈழம் ஆதரவு ஆட்கள் (விடுதலைப் புலிகளுக்கு விசுவாசமானவர்களும் விடுதலைப் புலிகளைச் சாராதவர்களும்) கொண்டிருக்கிறார்கள். தமிழர்களுக்கு அவர்களது சொந்தத்தில் அரசொன்று இருந்தால் மாத்திரமே அவர்கள் நன்றாக வாழ்வார்கள் என்பதே இவர்களின் நிலைப்பாடு. ஆனால், விடுதலைப் புலிகள் விட்ட இடத்திலிருந்து மீண்டும் தமிழர்கள் ஆரம்பிக்கவேண்டுமென்று வாதிடுகின்ற ஒருவரைக் கூட நான் சந்திக்கவில்லை. மீண்டும் ஆயுதப் போராட்டத்திற்குத் திரும்புவதென்பது பயனற்றது என்ற அபிப்பிராயம் வலுவானதாக இருக்கிறது என்பதையே இதிலிருந்து உணர முடிகிறது. ஆனால், தனி ஈழத்தை அடையக் கூடிய யதார்த்தபூர்வமான வேறு மார்க்கங்கள் உண்டா என்று கேட்ட போது அதற்கான பதில்கள் வெறும் மழுப்பல்களும் சொற்புரட்டுகளும் பொருத்தமற்ற கூற்றுகளாகவுமேயிருந்தன.



தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு தலைவர் இரா சம்பந்தன் உரையாற்றுகிறார்

வசதிபடைத்த புலம்பெயர் தமிழர்கள் கடந்தகாலத்தில் தனிநாட்டுக்காக குரல் கொடுத்து போதனையும் செய்து கொண்டு விடுதலைப் புலிகளுக்கு நிதியுதவிகளைச் செய்த அதே வேளை, தங்களது பிள்ளைகளை டாக்டர்களாகவும் கணக்காளர்களாகவும் பொறியியலாளர்களாகவும் கவனமாகப் படிப்பித்தார்கள். விடுதலைப் புலிகளின் காலத்தில் அவர்களின் படையணிக்கு வறியவர்களான தொழிலாளர், விவசாயிகள் மற்றும் மீனவர்களின் பிள்ளைகள் சேர்க்கப்பட்டார்கள். இந்தப் பிள்ளைகள் ஆயுதப் போராட்டத்தில் செய்த தியாகங்களைப் பயன்படுத்தி வசதி படைத்த புலம்பெயர் தமிழர்கள் மேற்குலக பொருளாதார வசதிகளை அனுபவித்துக்கொண்டு பாதுகாப்பாக இருந்த வண்ணம் தங்களது தேசியவாத விரக்தி உணர்வுகளை வெளிப்படுத்தக் கூடியதாக இருந்தது. சிங்கள அரசின் துப்பாக்கிகளுக்குப் பலிகொடுப்பதற்கு விடுதலைப் புலிகள் இல்லாத நிலையில், "பொடியன்கள்" இல்லாத நிலையில், வறிய தமிழர்களின் பிள்ளைகள் இல்லாத நிலையில் புலம்பெயர் தமிழர்களுக்கான குறிப்பாக, தனித்தமிழ் நாடு பற்றி உரத்துப் பேசிக்கொண்டு பாதுகாப்பானதும் வசதியானதுமான வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருப்பவர்களுக்கு தெரிவுகள் குறுகிவிட்டன.

புலம்பெயர் தமிழர்களில் பெரும்பான்மையானவர்கள் இன்னமும் கூட, விடுதலைப்புலிகளின் கோட்பாடுகளுக்காக குரல் கொடுப்பவர்களாக இல்லை என்பதே எனது மதிப்பீடாகும். அதனால், அவர்கள் மத்தியில் இருக்கும் வயதுவந்தவர்கள் மற்றும் இளைஞர்கள் மத்தியில் விடுதலைப் புலிகளின் கோட்பாடு இன்னமும் செல்வாக்குக் கொண்டதாக இருக்கிறது என்பது போல, விடுதலைப் புலிகளின் எச்ச சொச்சங்கள் என்ற சொல்லைப் பயன்படுத்துவது தவறானது. தமிழர்களின் இலட்சியத்தின் மீது தீவிரமான, உணர்ச்சிபூர்வமான பற்றுறுதி இருக்கிறது என்பது உண்மையே. ஆனால், ஆயுதப் போராட்டம் தோல்வியடைந்து விட்டது என்ற விளக்கப்பாடு ஏற்பட்டிருக்கிறது. அத்துடன் வாஷிங்டனும் டில்லியும் முயற்சிசெய்து தராவிட்டால் தமிழ் ஈழம் என்பது பகற்கனவே என்பதையும் அவர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள். ஆனால், புலம்பெயர் தமிழர்கள் விமல் வீரவன்சவைப் போன்று கிறுக்குத்தனமானவர்கள். மனித உரிமைகள் பாதுகாக்கப்படுவதை உறுதி செய்வதற்கு அல்லது அரசியல் தீர்வொன்றைக் கொண்டுவருவதற்கு வாஷிங்டனையும் டில்லியையும் பயன்படுத்தலாம். ஆனால், அவை தமிழ் ஈழத்துக்காக கொடி தூக்குபவை அல்ல என்பதை

**உலகத்தமிழர் பேரவை விடுதலைப்புலிகளின் முன்னைய அனுதாபி களையும் ஆதரவாளர்களையும் உள்ளடக்கியிருக்கிறது என்ற விமர்சனம் என்னை எந்தவகையிலும் குழப்பத்திற்குள்ளாக்கவில்லை. எந்தவொரு தமிழ் அமைப்புமே இன்று முன்னாள் புலிகள் இயக்க ஆட்களை தாராள மாகக் கொண்டிருக்கவே செய்யும்**

புலம்பெயர் தமிழர்கள் அறிவார்கள்.

சுருக்கமாகச் சொல்வதானால் புலம்பெயர் தமிழர்களில் பெரும் பகுதியினர் கசப்பான தனிப்பட்ட அனுபவங்களைக் கொண்டவர்க ளாக இருக்கிறார்கள். வன்னியில் இடம்பெற்ற படுகொலைகள் குறித்து அவர்கள் ஆத்திரமடைந்திருக்கிறார் கள். சிறுபான்மையினத்தவர்கள் ஒடுக்கு முறைக்குள்ளாக்கப்படுவதை எதிர்த்து நிற்க அவர்கள் திடசங் கற்பம் பூண்டிருக்கிறார்கள். ராஜ பக்ஷ சகோதரர்களையும் அரசாங்கத் தையும் தோற்கடிக்க அவர்கள் உதவுவார்கள். ஆனால், எந்தவகை யான நேர்மறையான தந்திரோபாயத் தைப் பின்பற்றுவது என்பது அவர்க ளுக்குத் தெரியவில்லை. புலம்பெயர் ந்த தமிழர்கள் ஒரு மாறுதல் கட்டத் தில் இருக்கிறார்கள். கடந்த காலத்தை விளங்கிக் கொண்டவர்களாக அதைப்பற்றிய நினைவுகளைக் கடந்து சென்று கொண்டிருக்கிறார் கள். ஆனால், எதிர்காலமொன்றை அவர்கள் இன்னமும் கண்டுபிடிக்க வில்லை. நம்பிக்கையைத் தரக்கூடிய சக்திகளாக இடதுசாரிகளே இருந்தி ருக்க வேண்டும். ஆனால், அச்சக்தி கள் பட்டுப்போய் ராஜபக்ஷவின் சட் டைப்பைக்குள் கிடக்கின்றன. மக்களால் வெறுக்கப்படுகின்றன.

சிறிய இடதுசாரிக் கட்சிகள் அவதா னிக்கப்படுகின்றன. ஆனால், எவை யுமே முக்கியத்துவம் வாய்ந்தவை யாகக் கணிக்கப்படக்கூடிய நிலை யில் இல்லை. உள்நாட்டில் தமிழ்ச் சமூகத்தைக் காட்டிலும் புலம்பெயர் தமிழர்கள் ஜனதா விமுக்தி பெர முனையை (ஜே.வி.பி.) அந்நியத் தன்மையுடனேயே நோக்குகிறார்கள். வெளிப்படையாக இனவெறித் தன்மை கொண்டதாக இல்லாவிட் டாலும் தமிழர்களுக்கு கொடுப்ப தற்கு எந்தத் தீர்வையும் ஜே.வி.பி. தன்வசம் கொண்டிருக்கவில்லை என் பதே புலம்பெயர் தமிழர்களின் உறுதி யான கருத்து. இந்த நிலைக்கு 101 சதவீதமும் ஜே.வி.பி.யே பொறுப் பாகும். புலிகள் புதைக்கப்பட்டு விட் டார்கள் என்பதை மனவிருப்பமில் லாமலேயே ஏற்றுக்கொள்கிற புலம் பெயர் தமிழர்கள் தமிழர்களுக்கு இப் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப் புத்தான் என்பதையும் உணர்ந்து கொண்டுள்ளார்கள். இது ஒரு மேலோட்டமான கருத்தாக சில வாச கர்களுக்குத் தெரியக்கூடும். ஆனால், அந்தத் தமிழர்கள் மனதில் மெதுமெ துவாக மாறுதல் ஏற்படத் தொடங்கி யிருக்கிறது என்பதுதான் உண்மை.

தேசிய ஜனநாயக செயற்திட்ட மொன்றில் அக்கறையிருக்கிறது என் பது வெளிப்படையானது. ஆனால், புலம்பெயர் இளைஞர், யுவதிகளை சமூக-பொருளாதாரச் செயற்பாடுக ளில் ஈடுபடுத்துவதென்பது கஷ்டமா னதாகும். இது எனக்கு பெரும் ஏமாற் றத்தைத் தருகிறது. அவர்களை அந்தச் செயற்பாடுகளில் ஈடுபடுத்து வதற்கு முயற்சித்துப் பாருங்கள். ஒன் றில் கற்சுவருடன் அல்லது வெற்று மண்டைகளுடன் போய் மோது வீர்கள். நான் அளவுக்கு அதிகமாக நிலைவரத்தை வர்ணிப்பதாக நினை க்கிறீர்களா? அவகாசத்தைக் கொடுத் துப்பாருங்கள். புலிகளைப் பற்றிய மருட்சியில் இருந்து அவர்கள் விடு படுவதற்கு காலமெடுக்கும். குறைந் தது ஒரு தசாப்தமாவது செல்லக்கூ டும். இலங்கைக்குத் திரும்பிவந்து உண்மையான பிரச்சினைகளை விளங்கிக்கொண்டு தங்களை ஈடு படுத்திக் கொள்கிற இளைஞர், யுவதி கள் மாத்திரமே தந்தக் கோபுரத்திலி ருந்து பேசுகிற தேசியவாதச் சிந்தனை பயனற்றது என்பதை விளங்கிக் கொள்ள முடியும்.

தேசிய ஜனநாயகச் செயற்திட்டத் துக்கு தொலைவில் இருந்து பங்களிப் புகள் கிடைக்கும் என்பதும் சரியான தாக இருக்காது. புதிய அரசியலமை ப்பை வரைவது, பொருளாதார தந் திரோபாயம் ஒன்றை வகுப்பது மற் றும் (சுகாதாரம், கல்வி மற்றும் பெண் கள் விவகாரம் போன்ற) சமூக பிரச் சினைகளைப் பற்றியே நான் இங்கு குறிப்பிடுகிறேன். புதிய பண்புகளு க்கு தங்களை இசைவாக்கிக் கொண் டவர்கள் என்பதால் பெரும்பான்மை யான இளைஞர், யுவதிகள் திரும்பி வரப்போவதில்லை. அவர்களின் பிரதான பங்களிப்பு இலங்கையில் பொதுவில் ஜனநாயகத்துக்காகவும் குறிப்பாக, சிறுபான்மையினத்தவர்க ளின் உரிமைகளுக்காகவும் சர்வதேச நெருக்குதலை தோற்றுவிப்பதாகவே அமையும். அதுவும் பெறுமதியா னதே.


பெப்ரவரி இறுதியில் பிரிட்டிஷ் பாராளுமன்ற கட்டிடத்தில் நடை பெற்ற உலகத் தமிழர் பேரவையின் மகாநாடு, நோக்குகளை விவாதித்து எதிர்காலத்திட்டங்களை வகுக்கும் ஒரு அரங்கு என்பதைவிடவும் மேலானதாகவும் கூடுதலான அளவு க்கு ஆரவாரமிக்கதாகவும் அமைந்தி ருந்தது. அந்த மகாநாடு எதைச் செய் வதற்குத் தயாராகிறது என்பதைப் பொறுத்தவரை, பெரிய வெற்றிகரமா னதாக அமைந்ததுடன், இரு பெறுபே றுகளை அடைந்திருக்கிறது. முதலா வது, பிரிட்டிஷ் அரசியல் சமுதாயம் (கன்சர்வேட்டிவ் கட்சியினர், தொழிற்கட்சியினர் மற்றும் லிபரல் ஜனநாயக வாதிகள்) அரசியல் தீர் வொன்றுக்கு முழு ஆதரவாக செயற் படுவதற்கு தயாராயிருக்கிறது என் பதை இந்த மகாநாடு வெளிக்காட்டி யிருக்கிறது. கற்றுக்கொண்ட பாடங்


கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் விதப்புரைகள், பொறுப்புடைமை, சுயாதீனமான விசாரணை போன்றவை தொடர்பில் நல்லிணக்கத்துக்கான கோரிக்கையை ஆதரிப்பதில் பிரிட்டிஷ் அரசியல் சமுதாயம் ஏகமனதானதாக நிற்கிறது என்பதும் வெளிக்காட்டப்பட்டிருக்கிறது. எரிக் சொல்ஹெய்ம், யஸ்மின் சூக்கா மற்றும் கோர்டோன் வீஸ் போன்று ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸும் அதன் குரலை எழுப்பியிருக்கிறது. ஜெனீவாவில் ஐக்கியநாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் இலங்கை அரசாங்கத்தின் மீதான நெருக்குதல்கள் அதிகரிப்பதற்கான சூழலை ஏற்படுத்தியிருப்பது உலகத் தமிழர் பேரவையின் மகாநாடு சாதித்த இரண்டாவது விடயம். இலங்கை அரசாங்கம் நான்கு பக்கத்தாலும் நெருக்குவாரத்துக்குள்ளாகிறது. மும்முரமான சர்வதேச நெருக்குதலின் கீழ் உள்நாட்டுச் சீரழிவுத்தனங்கள் மேலும் அரசாங்கத்தை அம்பலப்படுத்துகின்றன. பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப்பிரேரணையும் அவரது பதவிநீக்கமும், திவிநெகும நாடகம், சிரேஷ்ட அமைச்சர்கள் அவர்களின் வழித்தோன்றல்களின் சார்பில் சட்டத்தைத் துஷ்பிரயோகம் செய்தல், சட்டத்திலிருந்து விடுபாட்டு உரிமை பெற்றவர்களாக நடந்து கொள்ளுதல் என்று சீரழிவுத்தனங்களை அடுக்கிக் கொண்டே போகலாம். உக்கிப்போன கட்டுமரம் எப்போதோ கடலில் அமிழ்ந்திருக்க வேண்டும்.

> புலம்பெயர் தமிழர்கள் மத்தியில் இருக்கக்கூடிய முன்னோக்கிச் சிந்திக்கின்ற தமிழ் அரசியல் இயக்கமாக உலகத்தமிழர் பேரவையை நான் பார்க்கிறேன். எனது இந்தக்கருத்து பேரினவாத வட்டாரங்களிலிருந்து கூச்சல்களை கிளப்பும் என்பதில் சந்தேகமில்லை

உலகத் தமிழர் பேரவை மேற்கொண்ட ஒரு முன்முயற்சி ஒழுங்காக அமையவில்லை. பல இனத்தவர்களையும் அணிதிரட்டுவதை நோக்கிய முதற்படியாக இரு டசினுக்கும் அதிகமான சிங்கள முற்போக்குச் செயற்பாட்டாளர்கள், இடதுசாரிகள் மற்றும் ஊடகவியலாளர்களை அழைப்பதற்கு பேரவை உத்தேசித்திருந்தது. இறுதியில் நான்கோ அல்லது ஐந்தோ சிங்களவர்கள் தான் மகாநாட்டுக்கு வந்திருந்தார்கள்.

*(45ஆம் பக்கம் பார்க்க...)*





### நவதாராளவாதத்துக்கும் வாஷிங்டனுக்கும் சவால் விடுத்த

# ஹியூகோ ஷாவேஸ்



பேராசிரியர்
சுமணசிறி லியனகே

அவரது மரணம் அதிர்ச்சியைத் தரவில்லையென்ற போதிலும், அளவிடமுடியாத இழப்பு என்ற உணர்வைத் தோற்றுவித்தது. அது வெனிசூலாவின் வறியவர்களுக்கும், பின் தங்கியவர்களுக்கும் முற்போக்குச் சிந்தனை கொண்டவர்களுக்கும் மாத்திரமல்ல, உலகம் பூராகவுமுள்ள உழைக்கும் மக்களுக்கும் ஒரு பேரிழப்பாகும். நவதாராளவாதம் வீறுகொண்டிருந்த நாட்களில் அதை அவர் தாக்கி எதிர்த்திசையில் சென்றார். அமெரிக்காவுக்கும் ஈராக் மற்றும் ஆப்கானிஸ்தான் மீதான அதன் ஆக்கிரமிப்புகளுக்கும் மக்கள் பயந்து கொண்டிருந்த போது அவர் தன்னந்தனியனாக வாஷிங்டனுக்குச் சவால் விடுத்தார். தோல்வியைக் கண்டு அவர் பயப்படவில்லை. எச்சரிக்கை அறிகுறிகளை உணர்ந்த போது அவர் வலிந்துசென்று தாக்கினார். போராடினார். கடந்த நூற்றாண்டில் இன்னொரு தென்னமெரிக்க நாடான சிலியில் செய்ததைப் போன்று அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் 21 ஆம் நூற்றாண்டில் வெனிசூலாவில் செய்வதற்கு அனுமதிப்பதில்லை என்று அவர் திடசங்கற்பம் பூண்டிருந்தார். ஊழல்தனமான நிதி வழங்குநர்களின் உதவியைப் பெறுகின்ற மனித உரிமைகள் கண்காணிப்பகம் (Human Rights Watch) போன்ற அமைப்புகள் குற்றச்சாட்டுகளைச் சுமத்தியபோதிலும், புதிய வகையான ஜனநாயகத்தை அவர் தோற்றுவித்தார். ஜனநாயகத்துக்குப் புதியதோர் அர்த்தத்தைக் கொடுத்தார். அவரது பொலிவேரியன் பரீட்சார்த்தம் உலகில் உள்ள வறியவர்களுக்கு நம்பிக்கையுணர்வைத் தோற்றுவித்தது. இடதுசாரிச் சிந்தனை கொண்ட பிரிட்டிஷ் பாகிஸ்தானிய பத்திரிகையாளரும் அரசியல் ஆய்வாளருமான தாரிக் அலி மிகமிகச் சரியாகவே அவரை வர்ணனை செய்தார். ஹியூகோ ஷாவேஸ் கம்யூனிஸ்ட் யுகத்துக்கு பின்னரான காலகட்டத்தின் மேன்மையான அரசியல் தலைவர்களில் ஒருவர்.

ஜனாதிபதியின் மரணம் பற்றி தெரியவந்த உடனடியாகவே வெனிசூலா பூராகவும் நகரங்களின் மையத்தில் அமைந்திருக்கும் பொலிவார் சதுக்கங்களில் மக்கள் கூடத்தொடங்கினார்கள். ''ஐக்கியப்பட்ட மக்கள் ஒரு போதும் தோற்கடிக்கப்படுவதில்லை'', ''அவர்கள் பின்னோக்கிச் செல்லப்போவதில்லை'', ''போராட்டம் தொடருகிறது'' என்பது போன்ற சுலோகங்களை உச்சரித்தவண்ணம் அவர்கள் மிராபுளோரஸ் ஜனாதிபதி மாளிகை நோக்கி அணிவகுத்துச் சென்றார்கள். 1999ஆம் ஆண்டு ஹியூகோ ஷாவேஸ் ஆரம்பித்த பொலிவேரியன் பரீட்சார்த்தம் வெனிசூலாவில் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் நிலக்காட்சியைக் குறிப்பிடத்தக்கவகையில் மாற்றிவிட்டது.

மக்களினால் முறைப்படி தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி சல்வடோர் அலண்டேயைக் கொலை செய்து அதிகாரத்தைக் கைப்பற்றிய பிறகு 1970 களில் சிலி நாட்டில் அகஸ்டோ பினோஷே கொடூரத்தனமாக முன்னெடுத்த நவதாராளவாதக் கொள்கைகள் லத்தீன் அமெரிக்கக் கண்டம் பூராகவும் உருண்டோடின. 1980 களின் முற்பகுதியிலிருந்து மூன்றாம் உலகநாடுகள் பலவற்றிலும் அந்த நவதாராளவாதக் கொள்கைகள் பரவின. 1980 களின் பிற்பகுதியில் வாஷிங்டனின் கருத்தொருமிப்பை அடிப்படையாகக்கொண்டு, உலக வங்கியினதும் சர்வதேச நாணய நிதியத்தினதும் ஆதரவுடன் ''மகத்தான திருப்பம்'' என்ற கொள்கையை வெனிசூலா ஜனாதிபதி கார்லோஸ் அந்திரெஸ் பெரஸ் அறிமுகப்படுத்தினார்.

1981-1997 காலகட்டத்தில் 10 சதவீதமான வெனிசூலா தனவந்தர்கள் தேசியவருவாயில் தங்களின் பங்கு 22 சதவீதத்திலிருந்து 33 சதவீதம் வரை வளர்ந்ததைக்கண்டார்கள். வறுமை, ஏற்றத்தாழ்வு மற்றும் வேலையில்லாத் திண்டாட்டம் ஆகியவை அதிகரித்தன. நவதாராளவாதத்துக்கான தங்கள் பிரதிபலிப்பை வெனிசூலாவின் வறியமக்கள் ''காரகாசோ'' என்று அறியப்பட்ட ஆர்ப்பாட்டங்கள், முற்றுகைகள், மறியல் போராட்டங்கள், கலவரங்கள் மூலமாக வெளிக்காட்டினார்கள்.

இத்தகைய பின்புலத்திலேயே 1998 ஆம் ஆண்டு முதற்தடவை

**செயல்முறைக்கு ஒவ்வாத உயர் கனவுகளைக் கண்டு கொண்டிருப்பதிலும் பார்க்க நடைமுறைச் சாத்தியமான செயற்பாட்டில் ஒரு மில்லிமீற்றர் முன்னோக்கிச் செல்வது பெரிய விடயமே என்பது ஷாவேஸின் அணுகுமுறையாகவிருந்தது. மிகவும் தூய்மையான புரட்சிகர சுலோகம் பொறிக்கப்பட்ட பதாகையை உயர்த்திப் பிடித்துக் கொண்டு ஒன்றும் செய்யாமல் நிற்பதிலும் பார்க்க போராட்டத்தில் இறந்து போவது சிறப்பானது. புரட்சியை முயற்சிகளின் ஊடாகச் செய்து பார்க்க வேண்டும் என்பது அவரது கோட்பாடு**

யாக ஷாவேஸ் ஜனநாயக ரீதியாக மக்களினால் தெரிவு செய்யப்பட்டார். அமெரிக்காவின் ஆதரவுடன் ஜெனரல்களும் திருச்சபைத் தலைவர்களும் பெருமுதலாளித்துவ நிறுவனங்களும் 2002 ஆம் ஆண்டு மேற்கொண்ட சதிப்புரட்சியில் ஷாவேஸ் தூக்கியெறியப்பட்டார். ஆனால், 1971இல் சிலிமக்கள் நடந்து கொண்டதைப் போலன்றி, வெனிசூலா மக்கள் மிராபுளோரஸ் ஜனாதிபதி மாளிகையைச் சுற்றிவளைத்து சதிப்புரட்சியின் தலைகளை அதிகாரத்திலிருந்து இறங்க நிர்ப்பந்தித்தனர். இதையடுத்து மீண்டும் ஷாவேஸ் அதிகாரத்துக்கு வருவதற்கு வழிசெய்யப்பட்டது. வீதிகளில் முன்னெடுக்கப்பட்ட ஜனநாயகப் போராட்டங்களும் வாக்குச் சாவடிகளில் வாக்களிப்பு மூலம் வெளிக்காட்டப்பட்ட ஜனநாயக உரிமைகளும் மக்கள் ஒரு மாற்றத்தை, சமுதாய உருநிலை மாற்றத்தை தங்கள் கைகளுக்கு அதிகாரம் வருவதை விரும்பினார்கள் என்பதை வெளிக்காட்டின. தேர்தல்களில் ஷாவேஸை அவரது அரசியல் எதிராளிகள் தோற்கடிப்பதற்கான வாய்ப்பு பெருமளவுக்கு இருந்ததாக பெருமுதலாளித்துவ ஊடக நிறுவனங்கள் சூழ்ச்சித்தனமாக பல அபிப்பிராய வாக்கெடுப்புகளை அறிவித்த போதிலும் கூட, அவர் எதிர்கொண்ட சகல தேர்தல்களிலும் வெற்றிபெற்றார்.

### சமூக மாற்றம்

தனது ஆட்சிக்கு எதிரான 2002 சதி முயற்சிக்குப் பிறகு ஷாவேஸ் பொருளாதார மாற்றத்துக்கான ஒரு முற்போக்குச் செயற்திட்டத்தை அறிமுகப்படுத்தினார். வெனிசூலாவின் வறியவர்கள் வாழ்வில் பெரிய முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்கு காலாயமைந்த இத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு வசதியாக எண்ணெய் விலை அதிகரிப்பு அமைந்தது. பொதுமக்கள் சார்ந்த செயன்முறைத் திட்டங்களின் ஊடாக ஒழுங்கமைக்கப்பட்ட வீடமைப்புத்திட்டங்கள், மானிய அடிப்படையிலான உணவுத் திட்டங்கள், புதிய மருத்துவ நிலையங்கள் மற்றும் எழுத்தறிவை மேம்படுத்தும் திட்டங்கள் எல்லாம் இலட்சக்கணக்கான மக்களின் வாழ்க்கை மீது பெரும் பயனுறு விளைவுகளை ஏற்படுத்தின. நாட்டின் சனத்தொகையில் சுமார் அரைவாசிப் பேர் அரசாங்கத்திடமிருந்து மலிவு விலையில் உணவு விநியோகங்களைக் கிரமமாகப் பெற்றிருக்கிறார்கள். இதன் விளைவாக ஷாவேஸின் கட்சியின் கீழ் கடந்த 14 வருடங்களில் வறுமை கணிசமான அளவுக்கு குறைக்கப்பட்டது. வறியவர்களினதும் பின்தங்கிய பிரிவு மக்களினதும் வாழ்க்கைத்தரம் உயர்வடைந்தது. சிக்கனத் திட்டமும் வறியவர்கள் வயிற்றுப் பட்டிகளை இறுக்கிக்கொள்ள வேண்டுமென்ற கோரிக்கையும் ஷாவேஸின் நிகழ்ச்சி நிரலில் இருக்கவில்லை.

இத்தகைய சகல பெறுபேறுகளுக்கு மத்தியிலும் கூட, தனது சமூக நலத் திட்டங்களை விரித்துரைப்பதற்கு மிகைப்படுத்தப்பட்ட சொற்தொடர்களைப் பயன்படுத்த ஷாவேஸ் மறுத்தார். அவரின் நிலைப்பாடு, கருத்துக் கோணம் மற்றும் நோக்கு ஆகியவற்றை தாரிக் அலி அவருடனான சந்திப்பொன்றை நினைவு கூர்ந்தபோது பின்வரும் வார்த்தைகளில் கச்சிதமாக தீட்டிக்காட்டுகிறார்.

''காரகாஸில் ஷாவேஸைச் சந்தித்த போது ஒரு தடவை பொலிவேரியன் திட்டம் தொடர்பில் மேலும் அவரிடம் கேள்வியெழுப்பினேன். அத் திட்டத்தினால் சாதிக்கக்கூடியதாக இருந்தது என்ன? அவர் மிகவும் தெளிவாக இருந்தார். மார்க்சியப் புரட்சியின் கொள்கைப் பிடிவாதமான போக்குகளில் தனக்கு நம்பிக்கையில்லை என்று அவர் கூறினார். பாட்டாளிவர்க்கப் புரட்சிகளின் காலகட்டமொன்றில் நாம் வாழ்கிறோம் என்பதையும் தான் ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் அவர் கூறினார். அந்த விடயங்கள் எல்லாம் மீளாய்வு செய்யப்பட வேண்டுமென்பது அவரின் நிலைப்பாடு. யதார்த்த நிலை எங்களுக்கு இதையே தினமும் சொல்லிக்கொண்டிருக்கிறது என்று விளக்கமும் தந்தார். வெனிசூலாவில் தனியுடைமையை ஒழிப்பதற்கோ அல்லது வர்க்கங்கள் இல்லாத சமுதாயமொன்றை உருவாக்குவதற்காக நோக்கம் கொண்டிருக்கிறோம் என்ற கேள்வியை முன்வைத்த அவர் ''தான் அவ்வாறு நினைக்கவில்லை'' என்று பதிலையும் தந்தார். யதார்த்த நிலை இவ்வாறிருக்கிறது என்பதற்காக, வறியவர்களுக்கு உதவுவதற்கு எதையும் செய்யமுடியாது என்றில்லை என்ற அவர் சமுதாயத்திலே செல்வத்தை பகிர்ந்தழிக்க முடியாது என்று தான் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளப்போவதில்லை என்று குறிப்பிட்டார். ''உயர் வர்க்கத்தவர்கள் வரிகளைச் செலுத்துவதற்குக்கூட விரும்புவதில்லையே. அவர்கள் என்னை வெறுப்பதற்கு அது ஒரு காரணம். நீங்கள் வரிகளைச் செலுத்த வேண்டும் என்று அவர்களுக்கு நாம் கூறுகின்றோம். ஒரு புரட்சிகர பதாகையை, மிகவும் தூய்மையான





சுலோகம் பொறிக்கப்பட்ட பதாகையை வெறுமனே உயர்த்திப் பிடித்துக்கொண்டு ஒன்றுமே செய்யாமல் நிற்பதிலும் பார்க்க போராட்டத்தில் இறந்துபோவது சிறப்பானது என்று நான் நம்புகிறேன். எமது புரட்சியை நாம் முயற்சிகளின் ஊடாக செய்து பார்க்க வேண்டும். போராட்டத்தில் குதித்து முன்னோக்கிப் போக வேண்டும். செயல்முறைக்கொவ்வாத உயர் கனவுகளைக் கண்டு கொண்டிருப்பதிலும் பார்க்க நடைமுறைச் சாத்தியமான செயற்பாட்டில் ஒரு மில்லிமீற்றர் முன்னோக்கிச் செல்வது பெரிய விடயமே' என்று ஷாவேஸ் அடுக்கிக் கொண்டு போனார்.''

## வெளியுறவுக் கொள்கை

ஷாவேஸின் வெளியுறவுக் கொள்கை உள்நாட்டுக் கொள்கைளுடன் ஒத்துப் போகின்றவையாகவும் ஒரே கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டவையாகவும் இருந்தன என்பது உன்னிப்பாகக் கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். உள்நாட்டுப் பெரு முதலாளித்துவ தொழில் நிறுவனங்களும் பிரமாண்டமான ஊடக நிறுவனங்களும் அவரின் அரசியல் எதிரிகளும் தனித் தனியே நின்று செயற்படுவதில்லை என்பதை ஷாவேஸ் நன்கு அறிந்திருந்தார். அவர்களுக்கு அமெரிக்க ஏகாதிபத்தியம் உதவி செய்கிறது என்றும் காலமறிந்து ஆதரிக்கிறது என்றும் ஷாவேஸ் குறிப்பிட்டிருந்தார்.

எனது அபிப்பிராயத்தில் ஷாவேஸின் வெளியுறவுக் கொள்கையில் இரு பிரதான தூண்கள் இருக்கின்றன. ஒன்று, அமெரிக்க ஏகாதிபத்தியத்தையும் ஆக்கிரமிப்பையும் நிபந்தனையேதுமின்றி எதிர்த்து நிற்பது, மற்றையது லத்தீன் அமெரிக்க நாடுகளின் ஐக்கிய முன்னணியொன்றை அமைத்துப் பலப்படுத்துவது. உலகில் உள்ள வறியவர்களினதும் விளிம்பு நிலை மக்களினதும் முதலாவது எதிரியாக அவர் அமெரிக்காவை வகைப்படுத்தினார். ஜனநாயகத்துக்கும் மனித உரிமைகளுக்குமான இயக்கங்கள், பிரசாரங்கள் என்று கூறப்படுபவை அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகளினாலும் அவர்களின் அடியாட்களினாலும் பயன்படுத்தப்படுகின்ற ஆட்சிமுறை நுட்பநுணுக்கங்களாகஇப்போதுதரங்குறைக்கப்பட்டு விட்டன என்பது ஷாவேஸுக்கு பட்டவர்த்தனமாகத் தெரிந்தது. அவரின் இந்தக் கருத்துக் கோணம் அரபுலகின் புதிய நிலைவரத்தின் கடுஞ் சிக்கல்களைப் பற்றிய விளக்கப்பாட்டுக்கு வழிவகுத்தது. அதனால், எங்கென்றாலும் எப்போதென்றாலும் அமெரிக்கத் தலையீடு இடம்பெறுகின்றபோது அவர் முற்றுமுழுதாக எதிர்த்து நின்றார். ஷாவேஸின் மரணம் பற்றி ஒபாமாவுக்குத் தெரியப்படுத்தப்பட்டபோது ஒபாமா "இப்போது வெனிசூலாவுடன் புதியவகையான ஊடாட்டத்தை அமெரிக்காவால் செய்யக்கூடியதாக இருக்கும்'' என்ற கூற்றின் மூலமாகவே தனது பிரதிபலிப்பை வெளிக்காட்டினார். 1994ஆம் ஆண்டிலிருந்து ஷாவேஸ் கட்டியெழுப்பிய இயக்கத்திலிருந்து அவரை ஒபாமா தனிமைப்படுத்திப் பார்க்கவே முயற்சித்தார். லத்தீன் அமெரிக்காவிலும் மத்திய அமெரிக்காவிலும் தங்களது ஆக்கிரமிப்புக் கொள்கைக்கு இருந்த பிரதான தடை அகற்றப்பட்டுவிட்டது என்று அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகள் நினைத்திருக்கக்கூடும்.

மகத்தான மனிதர்களை எளிதாக ஈடுசெய்துவிடமுடியாது. ஹியூகோ ஷாவேஸ் 21ஆம் நூற்றாண்டின் மகத்தான தலைவர்களில் ஒருவர். வெனிசூலாவில் அவர் கட்டவிழ்த்து விட்ட செயன்முறையை சுலபமாக மாற்றியமைத்துவிட முடியாமற்போகலாம். அவரது மறைவு இந்தச் செயன்முறைகளில் ஒரு வெற்றிடத்தையும் பின்னடைவையும் தோற்றுவித்திருக்கக்கூடும். ஆனால், அவரது இயக்கம் மக்களை தொடர்ச்சியானதும் நிலையானதுமான செயற்பாட்டுக்குள் கொண்டுவந்திருக்கிறது. அதனால், ஷாவேஸின் தோற்றம் எதிர்காலத்திலும் உணர்வூக்கத்துடன் மக்கள் மத்தியில் இருக்கும்.

தாரிக் அலி எழுதியதைப் போன்று ஷாவேஸ் மெச்சத்தக்க, போற்றும்படியான ஒரு தலைவர். "உலகம் மௌனமாகிப் போய்விட்ட ஒரு நேரத்தில், மத்தியவலதும் மத்திய இடதும் சில வேறுபாடுகளைக் கண்டுபிடிப்பதற்கு கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் போது, அவர்களின் தலைவர்கள் பணம் பண்ணுவதில் பிரமை கொண்ட உலர்ந்த இயந்திரங்களாக மாறியிருக்கும் நிலையில், ஷாவேஸ் நிலக்காட்சிக்கு ஒளியூட்டினார்.'' ■

***(பேராசிரியர் சுமணசிறி லியனகே - கொழும்பு, கண்டி, நீர்கொழும்பில் இயங்கும் மார்க்ஸ் பாடசாலையின் இணை ஒருங்கிணைப்பாளர்)***





# தென்னமெரிக்கர்கள் ஷாவேஸை ஒருபோதுமே மறக்கப்போவதில்லை



ஷோபன் சக்செனா

ஒரு சிறிய கிராமத்தில் வளர்ந்த அந்த 16 வயது சிறுவன் ஹியூகோ பேஸ்போல் விளையாட விரும்பினான். பாடசாலை ஆசிரியர்களான பெற்றோருடனும் 6 சகோதரங்களுடனும் அவன் சிறியதொரு வீட்டிலேயே வாழ்ந்தான். தலைநகர் காரகாஸில் பெரிய அணிகளில் சேர்ந்து பேஸ்போல் விளையாட வேண்டுமென்பதே அவனின் கனவாக இருந்தது. ஒரு நாள் தனது மூட்டை முடிச்சுகளை எடுத்துக்கொண்டு பஸ் ஏறி காரகாஸுக்குச் சென்று இராணுவத்தில் சேர்ந்துகொண்டான். தனது வறுமையைப் போக்குவதற்காக மாத்திரமல்ல, பேஸ்போலும் விளையாடலாம் என்பதற்காகவும் தான் அவன் இராணுவத்தில் சேர்ந்தான். ஒருநாள் உலகம் தனக்கு பல்வேறு நாமங்களைச் சூட்டும் என்றோ தனது பெயரைக் குறிப்பிட்ட மாத்திரத்திலேயே உணர்வலைகள் கிளம்பும் என்றோ அந்த வயதில் ஹியூகோ ஒருபோதுமே கற்பனை செய்துகூடப் பார்த்திருக்கமாட்டான்.

மீட்பர், இரண்டாவது யேசு, சர்வாதிகாரி, போர்த் தலைவன், புரட்சிவாதி- இவ்வாறாகவெல்லாம் ஹியூகோ ஷாவேஸுக்கு நாமகரணங்கள். புற்றுநோயுடனான இரு வருடகால போராட்டத்தில் கடந்த 5 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தோல்விகண்ட வெனிசூலாவின் தலைவரை வர்ணிப்பதற்கு அவர் உயிருடனிருந்த காலத்தைப் போன்றே மரணத்திலும் கூட, ஒரு தனிச்சொல்லைப் பயன் படுத்துவது குறித்து உலகினால் இணக்கத்தைக் காணமுடியவில்லை. அமெரிக்க, இந்திய-

ஸ்பானிய வம்சாவளி கலப்புக் குடும்பமொன்றில் 1954 ஜூலை 28 ஆம் திகதி ஹியூகோ ராபீல் ஷாவேஸ் ஃபிரையாஸ் என்ற பெயரில் பிறந்த அவர், ஒருபோதுமே அரைகுறை நடவடிக்கைகளில் நம்பிக்கை கொண்டிருக்கவில்லை. உண்மையான ஒரு பேஸ்போல் விளையாட்டு வீரரைப் போன்று அவர் எப்போதுமே பந்தை சனக்கூட்டத்தை நோக்கி அடித்து வெறியுடன் வீடு திரும்புவதிலேயே நம்பிக்கை கொண்டிருந்தார். வெனிசூலாவை கூடுதலான அளவுக்கு ஒப்புரவான சமுதாயமாக மாற்றுவதிலும் தென்னமெரிக்காவை கூடுதலான அளவுக்கு கட்டுறுதியானதும் ஒருங்கிணைந்ததுமான பிராந்தியமாக மாற்றுவதிலும் இவ்வாறு தான் அவர் தலைமைதாங்கி வழிநடத்திச்சென்றார்.

சர்வதேச விவகாரங்களில் 'பின்புத்தி' என்று அடிக்கடி ஏளனம் செய்யப்பட்ட தென்னமெரிக்கா 1999 இல் ஜனாதிபதித் தேர்தலில் மகத்தான வெற்றிபெற்று வெனிசூலாவில் ஷாவேஸ் அதிகாரத்துக்கு வந்த போது, உண்மையிலேயே அமெரிக்காவின் கோடிப்புறமாகவே விளங்கியது. அந்த நேரத்தில் தென்னமெரிக்க நாடுகள் ஊழல் தனமான சர்வாதிகாரிகளினால் ஆளப்பட்டன. பொருளாதார ரீதியில் பலவீனமானவையாக இருந்தன. ஷாவேஸ் அதிகாரத்துக்கு வந்த உடனடியாகவே வெனிசூலாவில் 'ஆட்டத்தின் விதிகளை' மாற்றியமைக்கத் தொடங்கினார். தனது வறுமைப்பட்ட நாட்டுக்கு கோடானுகோடி டொலர்களைக் கொண்டு வந்த எண்ணெய் வர்த்தகத்துடன் அவர் தனது இடதுசாரிக் கவர்ச்சித்திறச் சொல்லாட்சியைக் கலந்தார்.

இடதுசாரிச் சிந்தனைக்குள் ஷாவேஸின் பிரவேசம் ஒரு தற்செயலான நிகழ்வு மூலம் இடம்பெற்றது. 1970 களின் நடுப்பகுதியில் இராணுவத்தில் ஒரு கண்ணியமான வாழ்வை நடத்திக்கொண்டு ஷாவேஸ் காரகாஸில் உள்ளூர் அணியொன்றுக்காக பேஸ்போல் விளையாடிக் கொண்டிருந்தார். அதற்கு மேலதிகமாக பத்திரிகையொன்றுக்கு கட்டுரைகளை எழுதியதுடன், அழகுராணிப் போட்டிகளுக்கு நடுவராகவும் பணியாற்றினார். ஒருநாள் துப்பாக்கிக் குண்டுகளினால் துளைக்கப்பட்ட நிலையில் கைவிடப்பட்ட கார் ஒன்றுக்குள் ஒரு குவியல் மார்க்சியப் புத்தகங்கள் இருந்ததை அவர் தற்செயலாகக் கண்டார். மார்க்ஸ், மாவோ, சேகுவேரா, பிடல் காஸ்ட்ரோ ஆகியோரின் எழுத்துகளைப் படித்த ஷாவேஸ், வெனிசூலாவிற்கு ஒரு இடதுசாரி இயக்கம் தேவை என்ற முடிவுக்கு வந்தார். 'எனக்கு 21 அல்லது 22 வயதாக இருக்கும்போது என்னை ஒரு இடதுசாரியாக்கிக் கொண்டேன்' என்று ஷாவேஸ் ஒருதடவை குறிப்பிட்டிருந்தார்.

இடதுசாரித்துவத்திற்குள் அவரின் பிரவேசம் சுலபமானதாக இருந்தது. ஆனால், அரசியலில் தீவிரமாக இறங்கியதும் அவர் அக்கினிப் பரீட்சைகளைச் சந்திக்க வேண்டியிருந்தது. தன்னை 'ஞானஸ்நானம்' செய்து கொள்ள வேண்டியிருந்தது. 1992 இல் வெனிசூலா அரசாங்கத்துக்கு எதிராக ஷாவேஸும் ஏனைய சில இராணுவ அதிகாரிகளும் சேர்ந்து சதிப்புரட்சியொன்றைச் செய்ய முயற்சித்து அது தோல்வி காணவே ஷாவேஸ் இருவருடங்கள் சிறைவாசத்தை அனுபவிக்க வேண்டியதாயிற்று. தனது நாட்டுக்கும் பிராந்தியத்துக்கும் '21ஆம் நூற்றாண்டுச் சோசலிசத்தை'க் கொண்டுவர விரும்பிய பொலிவேரியன் குடியரசின் ஜனாதிபதியாக ஷாவேஸ் தன்னை நிலைநிறுத்திக் கொண்ட பிறகு 2002 ஆம் ஆண்டு வலதுசாரி அரசியல்வாதிகள் கும்பலொன்றும் வர்த்தகப் பிரமுகர்களும் இராணுவத்தில் உள்ளவர்களும் சி.ஐ.ஏ.யின் உதவியுடன் சதிப்புரட்சியொன்றை மேற்கொண்டு ஷாவேஸைத் தடுப்புக்காவலில் வைத்தனர். ஆனால், மக்களின் நெருக்குதலினால் சதிகாரர்கள் அவரை விடுவிக்க வேண்டியதாயிற்று. அதையடுத்து ஷாவேஸ் மீண்டும் ஜனாதிபதியாக பதவியேற்க அனுமதிக்கப்பட்டார்.

அதற்குப் பிறகு ஷாவேஸ் ஒரு குறிக்கோளுடனான மனிதன், அடுத்த பத்துவருடங்களுக்கும் கூடுதலான காலகட்டத்தில் சமூக நலச் செயற்திட்டங்களுக்காக வெனிசூலாவின் எண்ணெய் வளத்தின் மூலம் வருகின்ற பணத்தைப் பயன்படுத்தினார். இலவச வீடமைப்புத் திட்டங்கள், மலிவு விலைக்கடைகள், ஏழைகளுக்கு சிறந்த மருத்துவ வசதிகள் போன்ற செயற்திட்டங்களை உள்நாட்டில் முன்னெடுத்த அதேவேளை, அவர் பொலிவியாவில் இருந்து ஹொண்டூரஸ் வரை தென்னமெரிக்க நாடுகளுக்கு இலகுக் கடன்களையும் நிதியுதவிகளையும் வழங்கினார். லத்தீன் அமெரிக்காவை குறிப்பாக தென்னமெரிக்காவை ஒரு கட்டுக்கோப்பான அமைப்பாக ஐக்கியப்படுத்துவதற்காக அவர் சளைக்காது பாடுபட்டார். இதனால், அமெரிக்காவுடன் முரண்படவேண்டிய நிலை ஏற்பட்டது. அமெரிக்காவுடன் மிகவும் சௌகரியமாக எண்ணெய் வியாபாரத்தில் ஷாவேஸ் ஈடுபட்ட அதே வேளை, பிராந்திய விவகாரங்களில் தலையீடு செய்வது தொடர்பில் எந்த விட்டுக்கொடுப்புக்கும் தயாராயிருக்கவில்லை.

வெனிசூலாவில் ஷாவேஸ் அடுத்தடுத்துத் தேர்தல்களில் வெற்றிபெற்று வந்த போது, அதனால் தென்னமெரிக்கா பூராகவும் ஒரு அலையதிர்வுகளை அவரால் ஏற்படுத்த முடிந்தது. அந்தக் கண்டத்திலேயே பெரிய நாடான பிரேசில் 2002 இல் இடதுசாரியான லூயிஸ் இனன்சியோ லூலாடி சில்வாவை ஜனாதிபதியாகத் தெரிவு செய்தது. ஆர்ஜன்டீனா, சிலி, பொலிவியா, பெரு, ஈகுவடோர், உருகுவே, பரகுவே என்று அப்பிராந்தியத்தின் நாடுகள் அதே பாதையில் சென்று இடதுசாரிகளைத் தங்கள் ஜனாதிபதிகளாகத் தெரிந்தெடுத்தன. இன்று தென்னமெரிக்க நாடுகள் சகலதுமே தனித்துவமானதொரு அபிவிருத்தி மாதிரியை விருத்தி செய்திருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. அதாவது செல்வத்தை சமூக

***(56ஆம் பக்கம் பார்க்க...)***

# கூட்டு ஒப்பந்தமும் பெருந்தோட்டத்

முதலாளிமார் சம்மேளனத்துடன் பேசுவோர் சரியான தரவுகளுடன் தர்க்க ரீதியாக விவாதிக்க வேண்டும். இதற்கு அறிவுசார் அரசியல் தலைமைத்துவம் அவசியம். மலையக அரசியலில் காணப்படுகின்ற மிகப்பெரிய குறைபாடு இது



இரா.ரமேஷ்

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் வேதன அதிகரிப்பு தொடர்பாக மிக நீண்ட காலமாகவே பேசப்பட்டு வருகின்றது. இது விடயத்தில் வரலாற்றின் பல்வேறு கட்டங்களில் போராட்டங்களும், வேலைநிறுத்தங்களும் இடம்பெற்று வந்துள்ளன. அந்த வகையில் இன்று தொழிலாளர்களின் வேதனத்தை தீர்மானிப்பதற்கான கூட்டு ஒப்பந்தம் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை முதலாளிமார் சம்மேளனத்துக்கும் மூன்று தொழிற்சங்கங்களுக்கும் இடையில் இடம்பெறுகின்றன. இறுதியாக 2011ஆம் ஆண்டு மே மாதம் 6ஆம் திகதி செய்யப்பட்ட கூட்டு ஒப்பந்தத்தின் படி தொழிலாளர்களுக்கான அடிப்படைச் சம்பளம் 380 ரூபாவாகவும் 75% மேல் வருகை காணப்படுமாயின் 105 ரூபாவும் ஒரு நாளுக்கான நியமத்தை பூர்த்தி செய்தால் 30 ரூபாவும் வழங்கப்படுகின்றது. மொத்தமாக 515 ரூபா சம்பளம் ஒரு நாளைக்கு வழங்கப்படுவதாக கம்பனிகள் சார்பில் வாதிடப்படுகின்றது. ஆயினும் நடைமுறையில் 515ரூபா சம்பளம் அனைவருக்கும் கிடைப்பதில்லை. இதற்கு பல காரணிகள் உண்டு. சில தோட்டங்களில் வரவு கொடுப்பனவை இல்லாது செய்யும் வகையில் முகாமைத்துவங்கள் சில உபாயங்களை கையாள்கின்றன. இதனால் 105 ரூபா கொடுப்பனவினை 60-70% மான தொழிலாளர்களால் பெற முடிவதில்லை. தேயிலை விளைச்சல் இல்லாத காலங்களில் 17 அல்லது 18 கிலோ கிராம் தேயிலையினைப் பறிக்க வேண்டுமென தோட்ட முகாமைத்துவத்தால் நிபந்தனை விதிக்கப்படுவதுடன், அது நியம கொடுப்பனவு 30 ரூபாவினைப் பெற அவசியமானதாகக் காணப்படுகின்றது. உண்மையில் இன்று ஒரு நாளுக்கான நியமத்தை தீர்மானிப்பதில் தோட்ட முகாமைத்துவத்துக்கு அதிகாரம் உண்டு. அதனால் நாளுக்கு நாள் இது மாற்றமடைகின்றது. மறுபுறமாக 25



# தொழிலாளர்களின் வேதனமும்

நாட்கள் தோட்டத்தில் வேலை வழங்கப்படுமாயின் அதில் குறைந்தது 20 நாட்கள் வேலைக்குச் சென்றிருக்க வேண்டும். அவ்வாறன்றில் வருகைக் கொடுப்பனவு வழங்கப்படமாட்டாது. இதன்படி பார்க்கும் போது 75% மான தொழிலாளர்களின் வேதனம் 380 ரூபாவுடன் மட்டுப்படுத்தப்படுகின்றது. தேயிலை விளைச்சல் அதிகமாக இருக்கும் மார்ச், ஏப்ரல், மே ஆகிய மாதங்களில் மாத்திரமே தொழிலாளர்கள் நியமக் கொடுப்பனவு 30 ரூபாவினைப் பெற முடியும். இன்று காலநிலை மாற்றம் தேயிலை விளைச்சல் பருவங்களிலும் எதிர்மறையான தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது.

2011ஆம் ஆண்டு சம்பளம் நிர்ணயம் செய்யும் போது வாழ்க்கைச் செலவு மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் விலைகளுக்கும் இன்று காணப்படுகின்ற விலைகளுக்கும் இடையே பெரியளவிலான வேறுபாடு உண்டு. 2011க்குப் பின்னர் பொருட்களின் விலைவாசி தொடர்ச்சியாக உயர்த்தப்பட்டதுடன், இரு தடவைகள் பெற்றோல், டீசல் விலை உயர்த்தப்பட்டது. இவை நேரடியாக வாழ்க்கைச் செலவில் தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது. இது மிகக் குறைந்த வேதனம் பெறும் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த வாழ்க்கையிலும் எதிர்மறையான தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது. பின்வரும் அட்டவணை கடந்த மூன்று ஆண்டுகளில் அத்தியாவசியப் பொருட்களில் ஏற்பட்டுள்ள விலை அதிகரிப்பினைக் காட்டுகின்றது.

ஆகவே அட்டவணை 01 விலைவாசி அதிகரிப்பினையும் அதற்கேற்ற வகையில் சம்பள அதிகரிப்பிற்கான தேவையையும் வெளிக்காட்டுகின்றது. 2009/2010 ஆம் ஆண்டு குடும்ப வருமானம் மற்றும் செலவு தொடர்பாக இலங்கை புள்ளிவிபரவியல் திணைக்களம் மேற்கொண்ட ஆய்வின்படி ஒரு குடும்பத்திற்கு உணவு மற்றும் உணவில்லாத செலவுகளுக்கு சராசரியாக 31,331 ரூபா தேவை எனக் குறிப்பிடுகின்றது. ஆயினும் தோட்டத் தொழிலாளர்களுக்கு இன்றுள்ள சம்பள கட்டமைப்பில் இருந்து கொண்டு மேற்கூறிய தொகையினை எட்டுவது இயலாத காரியமாகும்.

இன்று தோட்டங்களில் குடும்பத்துக்கு இரண்டு பேர் சராசரியாக வேலை செய்கின்றார்கள். நன்கு விளைச்சல் உள்ள தோட்டங்களில் 20 தொடக்கம் 24 நாட்கள் வரை வேலை வழங்கப்படுகின்றது. இதன்படி பார்த்தால் இருவருக்குமான மாத வருமானம் 18,500 ரூபாவாகும். இதில் ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதி, கோவில் கொடுப்பனவு, தொழிற்சங்க சந்தா, கூட்டுறவுச் சங்கம், மரண சங்கம், உணவுக்கான கழிப்பனவு, தேயிலை, பெருநாள் முற்பணம், சம்பள சீட்டுக்கான கழிப்பனவு என மொத்த வேதனத்தில் 30-40 வீதம் கழிக்கப்படுகின்றன. விபரிக்கப்பட்ட சம்பள சீட்டுக்குக் கூட 7 ரூபாய் கழிக்கப்படுவது வியப்புக்குரிய விடயமாகும். சில தோட்டங்களில் வேறு கழிப்



பனவுகள் என 6 ரூபாய் அறவிடப் படுகின்றது. இது எதற்கான அறவீடு என்பது குறித்த விபரங்கள் சம்பளச் சீட்டில் குறிப்பிடப்படவில்லை. குறைந்த வேதனக் கட்டமைப்பு மற்றும் லயன் குடியிருப்பு வாழ்க்கை முறை ஆகியன இன்றைய இளைஞர், யுவதிகள் தோட்டத் தொழில் துறையினை விரும்பாமைக்கும், தோட்டத்தில் வாழ விரும்பாமைக்கும் காரணமாகும். இதனால் பெற்றோர்கள் லயன் அறைகளைத் திருத்துவதற்காக கடன் பெறுகின்றார்கள். இதற்கு தமது வேதனத்திலிருந்து 22% வட்டியைச் செலுத்துகின்றமை குறிப்பிடத்தக்கது. உழைக்கும் பணத்தில் பெரும்பகுதி வட்டிக்காகவே செலவாகின்றமையினை பல தோட்டங்களில் காண முடிந்தது. உண்மையில் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் 31,331 ரூபாவினைக் குடிமனைத் தேவைகளுக்கு செலவிட வேண்டுமாயின் அவர்களின் ஒரு நாள் வேதனம் குறைந்தது 650 ரூபாவாக அதிகரிக்கப்பட வேண்டும். அப்பொழுதே இருவர் தொழில் செய்யும் குடும்பமொன்றில் மாத வருமானம் சராசரியாக 26,000 ரூபாவினையேனும் பெற முடியும்.

உண்மையில் தோட்டத் தொழிலாளர்களுக்கு வரவு கொடுப்பனவு கிடைக்காமைக்கு வேறு பல காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. குறிப்பாக தொழிலாளர்கள் திருமணம், மரணம், பண்டிகைகள், திருவிழாக்கள், உறவினர் வீடுகளுக்குச் செல்லுதல், சடங்கு, சுகயீனம் போன்ற பல தனிப்பட்ட காரணங்களால் வேலை வழங்கப்படுகின்ற அத்தனை நாட்களும் வேலைக்குச் செல்வதில்லை. உண்மையில் 515 ரூபா சம்பளத்தினை மொத்த தொழிலாளர் படையில் 10 வீதத்துக்கு குறைவாக இருக்கின்ற காவலாளிகள், பங்களா சேவையாளர்கள், சுகாதார உத்தியோகத்தர்கள், தொழிற்சாலை ஊழியர்கள் போன்றோரே பெறுகின்றனர். வரவுக் கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ள முடியாமைக்கு தொடர்ச்சியான காலநிலை மாற்றம் பாடசாலைகளில் இடம்பெறும் கூட்டங்கள், ஞாயிறு தினங்களில் வேலை செய்தல் பெண் தொழிலாளர்கள் 15-20 கிலோகிராம் நிறையுடைய பச்சை கொழுந்துப் பைகளைக் கடும் வெயிலில் சுமப்பதால் ஏற்படும் சுகவீனம் போன்றவற்றையும் குறிப்பிடலாம்.

அட்டவணை 01- அத்தியாவசியப் பொருட்களின் சில்லரை விலை 2010-2013

| அத்தியாவசிய பொருட்கள் | 2010 (ரூபா) | 2011(ரூபா) | 2013(ரூபா) |
|---|---|---|---|
| அரிசி (நாட்டரிசி) | 59 | 59 | 60 |
| மா | 69.75 | 83.56 | 110 |
| சீனி | 93.79 | 97.37 | 110 |
| தேங்காய் | 30.48 | 36.41 | 42 |
| தேங்காய் எண்ணெய்(750 ml) | 173.44 | 211.75 | 200 |
| வெங்காயம் | 99 | 142 | 90 |
| கிழங்கு | 96 | 108 | 120 |
| பருப்பு - மைசூர் | 164 | 149 | 150 |
| கோழி இறைச்சி | 398 | 383 | 450 |
| முட்டை | 14 | 13 | 17 |
| டின் மீன் | 196 | 232 | 270 |
| அங்கர்(400 g) | 234 | 256 | 375 |
| பாண் | 40 | 48 | 60 |
| கடலைப் பருப்பு | 112 | 141 | 140 |
| மண்ணெண்ணெய் | 51 | 59 | 126 |
| மிளகாய்த் தூள் (100 g) | 35 | 41 | 45 |
| செத்தல் மிளகாய் | 202 | 275 | 230 |
| நெத்தலி | 316 | 325 | 675 |

மூலம்: Economic and Social Statistics of SriLanka 2012, கட்டுரை ஆசிரியரால் சேகரிக்கப்பட்ட தரவுகள் (மேற்குறிப்பிட்ட அத்தியாவசியப் பொருட்கள் அதிகளவில் பெருந்தோட்ட மக்களால் கொள்வனவு செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது).

தொழிலாளர் வரவு கொடுப்பனவு சில நேரங்களில் 18 நாள் தொடர்ந்து தொழில் செய்கின்ற ஒருவருக்கு கிடைக்காமல் போகலாம். அதற்கு தோட்ட முகாமைத்துவத்தின் திட்டமிட்ட செயல்கள் காரணமாகும். தொழிலாளர் வரவு தொடர்பான பதிவுகள் தோட்ட முகாமைத்துவத் திடமே காணப்படும். இதில் மாற்றங்கள் செய்தாலும் தொழிலாளர்களுக்குத் தெரிவதில்லை.

தோட்ட முகாமைத்துவம் சராசரியாக 25 நாட்கள் வேலை வழங்கினாலும் பெண் தொழிலாளர்கள் 18 அல்லது 19 நாட்கள் மாத்திரமே செல்வர். அதற்கு அவர்களுக்குள்ள குடும்ப/தனிப்பட்ட அர்ப்பணிப்புகள், பிரச்சினைகள் என்பனவே காரணமாகும்.

1996ஆம் ஆண்டிலிருந்து தொழிலாளர்களின் வேதனம் கூட்டு ஒப்பந்தத்தின் மூலமே தீர்மானிக்கப் படுகின்றது. நாட்சம்பளமும் சில நிர்ணயிக்கப்பட்ட கொடுப்பனவுகளும் மாத்திரமே இவர்களின் மாத வருமானத்தில் அடங்குகின்றன. குறைந்த சம்பளம் என்ற விடயம் முதன் முதலில் 1927 ஆம் ஆண்டு சம்பளக் குழுவினால் ஆகக் குறைந்த சம்பள சட்டத்தின் (Minimum Wages Ordinance) கீழ் தீர்மானிக்கப்பட்டது. சம்பள நிர்ணய சபை தாபிக்கப்படும் வரை தொழிலாளர்களின் சம்பளம் முதலாளிகளிடம் இருந்து நேரடியாக வழங்கப்படவில்லை. சம்பளத்திற்குப் பதிலாக அரிசி மற்றும் ஏனைய உணவுப் பண்டங்கள் வழங்கப்பட்டதுடன், தொடர்ச்சியான சம்பளமும் வழங்கப்படவில்லை. பின்னர் ஆகக் குறைந்த சம்பள சட்டத்தின் கீழ் தோட்ட சம்பளச்சபை தாபிக்கப்பட்டது. அதில் தொழிலாளர்களைப் பிரதி

நிதித்துவம் செய்யும் தொழிற்சங்கங்கள், தோட்ட முதலாளிகள் மற்றும் அரசாங்கப் பிரதிநிதிகள் இடம்பெற்றனர். இதுவே 1996 ஆம் ஆண்டிலிருந்து கூட்டு ஒப்பந்தம் என்ற பெயரில் மாற்றம் செய்யப்பட்டது.

1984ஆம் ஆண்டு மறைந்த தலைவர் தொண்டமான் தலைமையில் சம்பள அதிகரிப்பிற்கான போராட்டம் இடம்பெற்றது. இதன் பயனாக வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு தொழிலாளர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டது. (ஒரு நாளைக்கு மூன்று ரூபா என்ற அடிப்படையில்) அத்துடன் நாட்டில் வாழ்க்கைச் செலவு சுட்டி அதிகரிக்கும் போது வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு ஒரு குறிப்பிட்ட விகிதத்தில் அதிகரிக்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டது. ஆயினும் இவை இன்று பின்பற்றப்படுவதில்லை. எவ்வாறாயினும் இந்தப் போராட்டத்தின் மூலம் தொழிலாளர்களின் குறைந்த வேதனம் 23.75 சதமாக நிர்ணயிக்கப்பட்டது. 1994ஆம் ஆண்டு தொழிலாளர் சம்பளம் ரூபாய் 72.24 சதத்தில் இருந்து 83 ரூபாவாக உயர்த்தப்பட்டது. இதற்கு அப்போதைய ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க அவர்களின் அழுத்தம், ஆதரவு காரணமாக அமைந்தது. 1994 க்குப் பின்னர் அரசாங்கம் சம்பள நிர்ணய விடயத்திலிருந்து விலகிக் கொண்டது. அதன் பின் பெருந்தோட்டக் கம்பனிகள் தொழிற்சங்கங்களைக் கொண்டு கூட்டு ஒப்பந்தம் ஒன்றின் மூலம் தொழிலாளர்களின் சம்பளத்தை நிர்ணயிக்க ஆரம்பித்தன. 1996 ஆம் ஆண்டு பிரிதொரு கூட்டு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. அதில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், லங்கா தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம் (LJEWU) மற்றும் ஒருங்கிணைந்த பெருந்தோட்டக் கூட்டமைப்பு ஆகியன கைச்சாத்திட்டன. இவை தொழிலாளர்கள் சார்பிலும் முதலாளிமார் சம்மேளனம், முதலாளிகள் சார்பிலும் கைச்சாத்திட்டன. 1997 ஆம் ஆண்டு தொழிலாளர்களின் அடிப்படை வேதனம் 83 ரூபாவாகக் காணப்பட்டது. இது 1999 ஆம் ஆண்டு 95 ரூபாவாக உயர்த்தப்பட்டது. உண்மையில் தொழிலாளர்களின் வேதனக் கட்டமைப்பில் 2000 க்குப் பின்னரேயே குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டன. அதனை அட்டவணை 02இன் மூலம் விளங்கிக் கொள்ளலாம்.

அட்டவணை 2 தொழிலாளர் சம்பளம் 2001-2011

| ஆண்டு | அடிப்படைச் சம்பளம் | வரவு கொடுப்பனவு | விலை பங்கீட்டு கொடுப்பனவு | மொத்தம் |
|---|---|---|---|---|
| 2001 | 101 | 50 | 5 | 116 |
| 2004 | 135 | 20 | 25 | 185 |
| 2007 | 200 | 70 | 20 | 290 |
| 2009 | 285 | 90 | 30 | 405 |
| 2011 | 380 | 105 | 30 | 515 |

மூலம் : கடந்த கால கூட்டு ஒப்பந்தங்களில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்கள்.

அட்டவணை: 3 உற்பத்திச் செலவு

| ஆண்டு | தேயிலை- உற்பத்திச் செலவு (ரூபாய்- கிலோகிராம்) | இறப்பர் |
|---|---|---|
| 2004/2005 | 149.13 | - |
| 2005/2006 | 161.98 | - |
| 2006/2007 | 210.75 | - |
| 2007/2008 | 231.49 | 119.89 |
| 2008/2009 | 269.01 | 135.80 |
| 2009/2010 | 313.17 | 158.94 |
| 2010/2011 | 355.2 | 188.23 |
| 2013 | 430 | 120 |

**மூலம்** : Sri Lanka Tea Board> 2011/12 / Rubber Development Depatment of Sri Lanka/2012/13

இன்று கம்பனிகளின் உற்பத்திச் செலவு அதிகரித்துச் செல்வதாக குறிப்பிடப்படுகின்றது. குறிப்பாக தொழிலாளர்களுக்கு வழங்கப்படுகின்ற வேதனம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள், சேமநல வசதிகள் இதற்கு காரணம் என்பது அவர்களின் தர்க்கமாகும். ஆயினும் மொத்த உற்பத்திச் செலவில் தொழிலாளர்களுக்கான செலவு 60 வீதம் எனவும் ஏனையவை தேயிலை உற்பத்தி, விநியோகம், விற்பனைக்கான நிர்வாகச் செலவாகும். உண்மையில் கம்பனிகள் இது தொடர்பாக தெளிவான தரவுகளை வெளியிடுவதில்லை. இதனால் உண்மையான உற்பத்திச் செலவு குறித்த விடயங்களை தொழிலாளர்களால் அறியமுடியாதுள்ளது. பெருந்தோட்டங்கள் தனியார் மயமாக்கப்பட்டதனைத் தொடர்ந்து தகவல் அறிவதற்கான உரிமை பெரியளவில் மறுக்கப்பட்டுள்ளது. தொழிலாளர்களுக்கு தோட்டத்தின் வருமானம் அல்லது உற்பத்தி தொடர்பான எந்தவிதமான தகவல்களும் வழங்கப்படுவதில்லை. இது ஒரு மனித உரிமை மீறலாகும்.

இன்று சராசரியாக ஒரு தொழிலாளி 16-19 வரையான கிலோகிராம் பச்சை தேயிலையைப் பறிக்கின்றார். இது எல்லாத் தோட்டங்களிலும் உள்ள பொதுவான நியமமாகும். இதனைக் கொண்டு 4 கிலோகிராம் தேயிலையைத் தயாரிக்க முடியும். இன்று கொழும்பு ஏல விற்பனையில் 1 கிலோகிராம் தேயிலை 380 ரூபாவுக்கு (2013)

அட்டவணை 4- தேயிலை விற்கப்பட்ட விலை 2012 மூன்றாவது காலாண்டு (ஜூன்-செப்)

| தேயிலை | வீதம் (மி.கி.கி) | விற்கப்பட்ட விலை (மி.ரூ) 2012 இல் | விற்கப்பட்ட விலை (மி.ரூ) 2011 | மி.கி.கி |
|---|---|---|---|---|
| உயர் நிலப்பகுதி | 16.6 | 400 | 300 | 19.5 |
| மத்திய நிலப்பகுதி | 12.8 | 358 | 298 | 13.7 |
| தாழ் நிலப்பகுதி | 51.6 | 420 | 373 | 51.1 |
| மூலம் :இலங்கைத் தேயிலை சபையின் அறிக்கை, 2012 | | | | |

விற்கப்படுகின்றது. இதன் மூலம் ஒரு தொழிலாளியிடமிருந்து 1520 ரூபாய் இலாபம் கிடைக்கின்றது. இதில் சம்பளம் EPF/ETF என்பவற்றுக்கு 600 ரூபாவை கழித்தாலும் ஒரு தொழிலாளியிடமிருந்து எல்லை இலாபமாக 905 ரூபாய் கம்பனிக்கு கிடைக்கின்றது. அல்லது ஒரு கிலோ கிராம் தேயிலைக்கு சராசரியாக 251 ரூபாய் இலாபம் உண்டு. இதன்படி பார்க்கும் போது உற்பத்திச் செலவு அதிகரித்துச் செல்கின்றது என கம்பனிகள் கூறும் கருத்து நியாயமற்றது.

அட்டவணை 5- தெரிவு செய்யப்பட்ட நாடுகளில் பிரதான ஏற்றுமதி வருமானம்

| நாடுகள் | ஏற்றுமதி வருமானம் (அமெரிக்க டொலர் மில்லியன்) |
|---|---|
| இலங்கை | 1145.1 |
| கென்யா | 899.8 |
| சீனா | 705.0 |
| இந்தியா | 540.7 |
| இந்தோனேசியா | 171.6 |
| வியட்நாம் | 138.0 |
| மூலம்: இலங்கைத் தேயிலை சபை அறிக்கை, 2011 | |

1Kg தேயிலைக்கான உற்பத்திச் செலவினைவிட அதிக இலாபம் கம்பனிகளுக்கு கிடைக்கின்றது. அட்டவணை 03 தேயிலை மற்றும் இறப்பருக்கான உற்பத்திச் செலவினைக் காட்டுகின்றது.

அட்டவணை 03ஆனது ஒரு தொழிலாளியிடமிருந்து கம்பனிக்கு கிடைக்கும் எல்லை இலாபம் எவ்வளவு என்பதனைக் காட்டுகின்றது.

அட்டவணை 04 இலங்கை தேயிலை கொழும்பு ஏல விற்பனையில் நல்ல விலைக்கு விற்கப்படுவதனைக் காட்டுகின்றது. இப்புள்ளிவிபரங்கள் தேயிலைக்கான விலையில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என்ற கருத்தினை வலுவற்றதாக்குகின்றது.

அட்டவணை 05 தேயிலை உற்பத்தி செய்யும் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் போது இலங்கையின் ஏற்றுமதி வருமானத்தில் தேயிலை முக்கிய பங்கினை வகிப்பதனைக் காட்டுகின்றது.

அட்டவணை 06 தேயிலை, இறப்பர் என்பவற்றின் உற்பத்தியில் ஏற்பட்டுள்ள மாற்றத்தினைக் காட்டுகின்றது. குறிப்பாக இறப்பர் உற்பத்தியில் ஏற்பட்டுள்ள சடுதியான அதிகரிப்பினைக் காட்டுகின்றது. அட்டவணை 07 தேயிலை உற்பத்தி செய்யப்படும் மூன்று பிரதேசங்களையும் அவற்றின் உற்பத்தி அளவில் ஏற்பட்டுள்ள மாற்றங்களையும் காட்டுகின்றது. தாழ்நிலப்பகுதிகளில் தேயிலை விளைச்சல் அதிகமாகக் காணப்படுவதுடன், அதற்கான கேள்வியும் அதிகமாகும்.

2010ஆம் ஆண்டு தேயிலைத் துறையின் மூலம் 17 பில்லியன் ரூபா வருமானம் கிடைத்தமை வரலாற்றில் மிக உயர்ந்த வருமானமாகும். தேயிலை ஏற்றுமதி வருமானம் 2009, 2010, 2011 ஆகிய ஆண்டுகளில் முறையே 136171, 162793, 164869 மில்லியன் ரூபாவாகும். 2009 ஆம் ஆண்டு 291 Mkg மாகக் காணப்பட்ட தேயிலை உற்பத்தி 2010 ஆம் ஆண்டு 331.4 Mkg மாக பெரியளவில் அதிகரித்தது. அதேபோல் ஏற்றுமதி அளவும் 2009 இல் 208 Mkg இலிருந்து 2010 இல் 298 Mkg மாக அதிகரித்தது. உலகளாவிய ரீதியில் இலங்கை தேயிலைக்கான கிராக்கி குறைவடையவில்லை. உலகில் தேயிலை உற்பத்தி செய்யும் நாடுகளில் இலங்கை நான்காவது இடத்தில் உள்ளது. அட்டவணை 08 இதனை மேலும் தெளிவுபடுத்துகின்றது.

இத்தரவுகள் பெருந்தோட்டத் துறை இலாபத்தில் இயங்குவதனைக் காட்டுகின்றது. இவ்வாறு இலாபத்தினை ஈட்டுகின்ற போதும் தொழிலாளர் வேதனக் கட்டமைப்பில் பெரியளவிலான மாற்றங்கள் ஏற்படவில்லை. இன்று தற்காலிகமாக நகர்ப்புறங்களில் தொழில் செய்வோர் நாட் சம்பளமாக சராசரியாக 600 வரையில் உழைக்கின்றார்கள். நகர்ப்புறக் கடைகளில் வேலை செய்வோர் 800 ரூபா வரையில் உழைக்கின்றார்கள். கட்டுமானப் பணிகளில் ஈடுபடுவோர் 900-1000 ரூபா வரை சம்பளம் பெறுகின்றனர். தனியார் துறைகளில் பணிபுரியும் திறனுள்ள தொழிலாளர்கள் (Skilled Labour) 1000-2000 வரையில் சம்பளம் பெறுகின்றனர். ஆயினும் உடலை வருத்தி தொழில் செய்யும், தேசிய பொருளாதாரத்திற்கு பெரிதும் பங்களிக்கும் தோட்டத் தொழிலாளர்கள்

அட்டவணை- 6 தேயிலை இறப்பர் உற்பத்தி (மெ.தொன்)

| | 2008 | 2009 | 2010 | 2011 |
|---|---|---|---|---|
| தேயிலை | 318700 | 290000 | 331400 | 327500 |
| இறப்பர் | 129240 | 136000 | 152990 | 158198 |
| மூலம்: Economics and Social Statistics of Sri Lanka, 2012/ Statistical Data Sheet, 2012 | | | | |

இன்னும் 380 ரூபாய் வேதனத்தை மாத்திரமே பெறுகின்றனர். ஏனைய துறைகளில் தொழில் செய்வோரின் வேதனம் வாழ்க்கைச் செலவு ஏற்றத்திற்கு ஏற்ப வருடாந்தம் மீளாய்வு செய்யப்படுகிறது. அரச துறையில் வருடாந்தம் ஒரு குறிப்பிட்ட விகிதத்தில் சம்பளம் அதிகரிக்கப்படுகின்றது (increment). அத்துடன் ஏனைய துறைகளில் அதிகமானோர் மாதச் சம்பளத்துக்காகவே தொழில் செய்கின்றார்கள். ஆயினும் பெருந்தோட்ட தொழிலாளர்கள் சுமார் 200 வருட காலமாக நாட் கூலிக்காகவே தொழில் செய்கின்றார்கள். இவர்களின் வேதனம் இரண்டு வருடத்திற்கு ஒரு முறை மீளாய்வு செய்யப்பட்டாலும் அது நாகரிகமான மானிட வாழ்க்கையினைக் கொண்டு நடத்துவதற்கு பொருத்தமற்றது. வாழ்க்கைச் செலவுச் சுட்டிகள் தொடர்ந்து அதிகரித்துச் சென்ற போதும் அதற்கான சலுகைகள் இவர்களுக்கு வழங்கப்படுவதில்லை. ஆயினும் அரச மற்றும் தனியார் துறையில் உள்ளோர் இச்சலுகைகளை அனுபவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. சம்பளத்திற்கு அப்பால் ETF/EPFக்கான கொடுப்பனவு, வாடகையற்ற வீடு, தண்ணீர் வசதி, இலவச சுகாதாரம், சலுகை விலையில் தேயிலை போன்ற பல சேமநல வசதிகள் வழங்கப்படுவதாக முதலாளிமார் சம்மேளனம் குறிப்பிடுகின்றது. ஆயினும் இவற்றின் தரம் மிகவும் மோசமான நிலையிலேயே காணப்படுகின்றது. இன்று அரசசார்பற்ற நிறுவனங்களே பெருந்தோட்டப் பகுதிகளில் இம்மக்களின் சேமநல விடயங்களில் அதிகளவில் செயற்பட்டு வருகின்றன.

மேலும் தோட்ட முதலாளிகள் சம்மேளனம் சராசரியாக ஒரு வீட்டில் 3 பேர் வேலை செய்வதாகக் குறிப்பிடுகின்றனர். அதில் 16 வயதைப் பூர்த்தி செய்த பெண்களை உள்ளடக்குகின்றார்கள். இது தவறான வாதமாகும். இன்று இந்நிலை மாறிவிட்டது. இன்றைய இளைஞர்கள் தோட்டத்துறை தொழிலை நாடுவதில்லை, அதிகமானோர் சாதாரண தரம் வரை கற்றுள்ளனர். அவர்கள் இன்று நகர்ப்புறங்களிலும், தனியார் நிறுவனங்களிலும் சுயதொழில்களிலும் ஈடுபட்டு வருகின்றனர். மொத்த இளைஞர், யுவதிகளில் 8% மானவர்களே இன்று தோட்டத்துறை தொழிலை நாடுகின்றார்கள். அவர்கள் பாடசாலைக் கல்வியை முழுமையாக பூர்த்தி செய்யாதவர்களாகும். 2011 ஆம் ஆண்டு முதலாளிமார் சம்மேளனம் விடுத்த அறிக்கையொன்றில் ஒரு தொழிலாளி ஒரு நாளைக்கு தொழிலுக்கு சமுகம் தந்தால் 527 ரூபாய் வேதனம் பெறுவதாகக் குறிப்பிட்டிருந்தனர். அதில் அடிப்படைச் சம்பளம் 380 ரூபாய் ETF/EPF கொடுப்பனவு 57 ரூபாய், ஊக்கக் கொடுப்பனவு 30 ரூபாய், வருகைக்கான கொடுப்பனவு 105 ஆகியன உள்ளடக்கப்பட்டிருந்தது. இங்கு புரிந்து கொள்ள வேண்டிய விடயம் யாதெனில், எத்தனை பேர் இந்த 572 ரூபாய் சம்பளம் பெறுகின்றனர் என்பதாகும். கலாநிதி சந்திரபோஸ் மற்றும் சிவப்பிரகாசம் ஆகியோர் 2011 இல் மேற்கொண்ட ஆய்வொன்றின்படி 1.41% மட்டுமே அத்தொகையினைப் பெறுகின்றார்கள் என்பது வெளிப்படுத்தப்பட்டது.

உண்மையில் இவ்வாறான அறிக்கைகளை வெளியாட்கள் பார்க்கும் போது இது உண்மையென நம்புவதுடன், மறுபுறமாக தொழிலாளர்கள் உயர் வருமானத்தைப் பெறுவதாக எண்ணுவர். ஊடகங்களுக்கு தகவல்களைச் சரியாக வழங்குவது எமது கடப்பாடு. சுமார் 80% தொழிலாளர்கள் அடிப்படை வேதனத்தினை மாத்திரமே பெறுகின்றனர். எல்லா கழிப்பனவுகளும் போக சராசரியாக 6000-7000 க்கும் குறைவான வேதனமே வீட்டுக்கு எடுத்துச் செல்லப்படுகின்றது. (சுமார் 21-23 நாட்கள் வேலை செய்திருந்தால்) ஒரு பெண் தொழிலாளி 25 நாட்கள் வேலை செய்தால் அவரால் 515 ரூபா என்றடிப்படையில் 12,875 ரூபாய் வேதனம் கிடைக்கும். இதில் எல்லாக் கழிப்பனவுகளும் போக 10,000 ரூபாய் எஞ்சும். ஆயினும் அவரது கணவரால் இவ் வேதனத்தைப் பெற முடியாது. அவரால் (515 என்றடிப்படையில் பார்த்தால்) சராசரியாக 18 /19 நாட்கள் வேலை செய்திருந்தால் 9785 ரூபாய் பெற முடியும். (தோட்டங்களில் ஆண்களுக்கு ஒரு மாதத்தில் சராசரியாக 18-20 நாட்களே வேலை வழங்கப்படுகின்றது, அதிகமான ஆண்களுக்கு நியமக் கொடுப்பனவு 30ரூபா வழங்கப்படுவதில்லை, காரணம் ஆண்கள் கொழுந்து பறிக்கும் வேலையில் ஈடுபடுவது மிகக் குறைவாகும்) இதில் கழிப்பனவுகள் போக 7000 ரூபாவரை மிஞ்சும். ஆகவே இருவரினதும் வருமானம் 14000 ரூபாவேயாகும்.

**அட்டவணை -7 தேயிலை உற்பத்தி 2010 - 2012 (மில்லியன் கிலோகிராம்)**

| | 2012 | 2011 | 2010 |
|---|---|---|---|
| **உயர் நிலப்பகுதி** (High Grown) | 14.5 | 14.7 | 15.9 |
| **மத்திய நிலப்பகுதி** (Mid Grown) | 11.3 | 10.6 | 12.7 |
| **தாழ் நிலப்பகுதி** (Low Grown) | 52.6 | 49.2 | 48.0 |
| **மொத்தம்** | 78.4 | 74.5 | 76.6 |

**மூலம்:** Economics and Social Statistics of Sri Lanka, 2012

**அட்டவணை -08 உலக தேயிலை உற்பத்தி 2011/2012 (தெரிவு செய்யப்பட்ட நாடுகளில்) Mkgs**

| நாடு | 2011 | 2012 |
|---|---|---|
| கென்யா | 260 | 248 |
| இலங்கை | 245 | 242 |
| இந்தியா | 775 | 772 |
| சீனா | 1100 | 1410 |

**மூலம் :** Economic and Social Statistics of Sri Lanka, 2012, Annual Report of Sri Lanka Tea Board, 2010

இதனைக் கொண்டு 5 பேர் கொண்ட குடும்பத்தை நடத்துவது பெரிதும் கடினமாகும். தோட்டத் தொழிலாளர்களுக்கான மாற்று வருமான மூலங்கள் பெரிதும் குறைவாகும். மரக்கறிச் செய்கை, வீட்டுத் தோட்டம், ஆடு, மாடு, கோழி வளர்ப்பு ஆகிய தொழில்களில் ஈடுபட நிலம், நேரம், முதலீடு இவர்களிடம் இல்லை. மொத்த தொழிலாளர்களில் சுமார் 3%மானோரே இவ்வாறான தொழில்களில் ஈடுபடுவர். இதனை அனைவருக்கும் பொதுமைப்படுத்த முடியாது. 75% க்கு மேல் வேலைக்கு சமுகமளித்த குடும்பங்களின் நிலை இவ்வாறாயின் வெறுமனே அடிப்படைச் சம்பளம் மாத்திரம் வாங்கும் இருவர் தொழில் செய்யும் குடும்பங்களின் மாத வருமானம் எல்லா கழிப்பனவுகளும் போகச் சராசரியாக 10,000 ரூபாவாகக் காணப்படும். ஆயினும் 2009/2010ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட குடிமனை வருமானம் மற்றும் செலவு தொடர்பான ஆய்வு அறிக்கையானது இலங்கையில் ஒரு குடும்பம் (4-5 பேர்) சராசரியாக உணவு மற்றும் உணவல்லாத பண்டங்களுக்காக 31,331 ரூபாவைச் செலவிடுவதாகக் குறிப்பிடுகின்றது. இதில் உணவு மற்றும் பானத்திற்காக 13,267 ரூபாவும் உணவல்லாத விடயங்களுக்காக 18,064 ரூபாவும் செலவிடுவதாகக் குறிப்பிடுகின்றது. இந்நிலையில் பெருந்தோட்ட தொழிலாளர்களைப் பார்க்கும் போது மிகக் குறைந்த வருமானத்தையே பெறுகின்றார்கள் என்ற முடிவுக்கு வர முடிவதுடன், நாகரிகமான வாழ்க்கை ஒன்றினைக் கொண்டு நடத்தக் கூடிய வருமானம் கூட இவர்களுக்கு கிடைப்பதில்லை என்பது வெளிப்படுகின்றது. இது குறித்த துறை சார் தரவுகளை அட்டவணை 09இன் மூலம் அறிந்து கொள்ளலாம்.

தோட்டத்துறை மக்கள் குறைந்த வேதனம் பெறுவதனால் அவர்களின் மாதச் செலவு குறைவாகக் காணப்படுவதுடன், மொத்த வருமானத்தில் 51% உணவுக்காக செலவிடுகின்றனர்

**அட்டவணை 09- துறைசார் அடிப்படையில் குடிமனை செலவு**

| | மொத்த செலவு | உணவுக்கான செலவு | உணவல்லாத விடயம் |
|---|---|---|---|
| இலங்கை | 31331 | 13267 (42%) | 18064 (57.7%) |
| நகரம் | 44928 | 16003 (36%) | 28925 (64.4%) |
| கிராமம் | 29423 | 12859 (44%) | 16564 (56.3%) |
| தோட்டம் | 23988 | 12201 (51%) | 11792 (49.2%) |

Source: Household Income and Expenditure Survey Report 2009/10

என்பது அட்டவணை 09இன் மூலம் வெளிப்படுகிறது. கல்வி, சுகாதாரம் மற்றும் பௌதீக முன்னேற்றத்துக்கு ஏனைய துறைகளுடன் ஒப்பிடும் போது குறைந்த பணத்தினைச் செலவிடுகின்றனர். தோட்டத்துறை மக்கள் சமூக பொருளாதார வளர்ச்சி நிலையில் பின்னடைந்து இருப்பதற்கு இது ஒரு முக்கிய காரணமாகும். இங்கு கவனிக்கப்பட வேண்டிய விடயம் யாதெனில் இரண்டு பேர் தொழில் செய்யும் ஒரு குடும்பத்தில் மாதம் 23,998 ரூபாய் வருமானத்தினைப் பெற முடியுமா என்பதாகும். இக் கட்டுரையில் ஏலவே குறிப்பிட்டதன்படி இருவர் தொழில் செய்யும் குடும்பத்திற்கு மாத வருமானம் சராசரியாக 14000 ரூபா வரையிலேயே கிடைக்கின்றது.

தொழிலாளர் வேதனம் தொடர்பாக ஆய்வு செய்யும் போது இவ்வருடம் ஜனவரி மாதம் 27 நாட்கள் வேலை செய்த ஒரு பெண் தொழிலாளியின் சம்பள சீட்டைக் காணக்கிடைத்தது. அதன் விபரங்கள் வருமாறு.

27 நாட்கள் வேலை செய்த தொழிலாளிக்கே வீட்டிற்கு எடுத்துச் செல்ல வெறும் 8208 ரூபாய் மாத்திரமே கிடைக்கின்றது எனின் சாதாரணமாக 18-19 நாட்கள் அல்லது அதற்கு குறைவாக வேலை செய்வோரின் மிகுதிச் சம்பளம் என்னவாக இருக்கும் என்பது இதன் மூலம் வெளிப்படுகின்றது. எல்லா மாதங்களும் 27 நாட்கள் வேலை வழங்கப்படுவதில்லை என்பதுடன், அனைத்து நாட்களும் வேலை செய்யக்கூடிய உடல்நிலை குடும்பச் சூழல் எல்லாத் தொழிலாளர்களுக்கும் கிடைப்பதில்லை. மொத்த தொழிலாளர் படையில் 5% மானோரே இவ்வாறு காணப்படுவர்.

இதுவரை பார்த்த புள்ளிவிபரத் தரவுகள் யாவும் இலங்கையின் தேயிலைக்கு இன்றும் பெரியளவில் கேள்வி இருப்பதனையும் தொடர்ந்து இலாபத்துடன் இத்துறை செயற்படுவதனையும் வெளிப்படுத்துகின்றது. ஒரு சில ஆண்டுகளில் சிறியளவில் சரிவுகள் ஏற்பட்டிருந்தாலும் அவை பெருந்தோட்டத் துறையினை பெரியளவில் பாதிக்கவில்லை. அதே போல் இறப்பருக்கும் இன்று பெரியளவில் கேள்வி இருப்பதனை அவதானிக்க முடியும்.

2009, 2010, 2011 ஆகிய ஆண்டுகளில் முறையே 11327, 19580, 22811 மில்லியன் ரூபாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. இன்று இறப்பருக்கு உயர் விலையும் அதிகரித்த கேள்வியும் உண்டு. இறப்பர் 1kg க்கான உற்பத்திச் செலவு 120 ரூபாவாகக் காணப்படுவதுடன், அது 535 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது. 2009 இல் ஒரு கிலோகிராம் இறப்பர் விலை 202 ரூபாவாகவும், 2010 இல் 377 ரூபாவாகவும், 2011 இல் 535 ரூபாவாகவும் காணப்பட்டுள்ளது. இது இறப்பர் விலையின் அதிகரிப்பினைக் காட்டுகின்றது. இன்றைய நிலையில் இறப்பர் தோட்டத் தொழிலாளர்களின் வேதனத்தை 650 ரூபா வரை அதிகரித்தாலும் எத்தகைய பாதிப்பும் ஏற்படப்போவதில்லை.

தற்போதைய நிலையில் இறப்பர், தேயிலைக்கான வருமானத்தைப் பார்க்கும் போது தொழிலாளர்களுக்

கான ஒரு நாள் அடிப்படை வேதனத்தை 500 ரூபாவாகவும் ஏனைய கொடுப்பனவுகள் அனைத்தையும் சேர்த்து (10530) மொத்தம் ஒரு நாள் சம்பளமாக 635 ரூபாவை வழங்க முடியும். காரணம் ஒரு தொழிலாளியிடமிருந்து கம்பனி எல்லை வருமானமாக 885 ரூபாவினை (4x380=1520-635=885) பெறுகின்றது. இப்போது வழங்கப்படுகின்ற சம்பள முறைப்படி பார்த்தால் 1005 ரூபா ஒரு தொழிலாளியிடமிருந்து கம்பனி இலாபமடைகின்றது (4x380=1520-515=1005). அடிப்படைச் சம்பளம் 500 ரூபாவாக மாற்றப்பட்டு ஏனைய கொடுப்பனவுகள் அனைத்தும் சேர்த்து 635 ரூபாவுடன் EPF, ETFக்கான கொடுப்பனவுகளைச் சேர்த்தாலும் ஒரு தொழிலாளியிடமிருந்து கம்பனிக்குச் சராசரியாக 650 ரூபா வருமானம் உண்டு. இன்று ஒரு கிலோகிராம் தேயிலைக்கான சராசரி உற்பத்திச் செலவு 420 ரூபாவாகும். இதனுள் வேதனம், உரம், இரசாயனப் பொருட்கள், போக்குவரத்து, பெற்றோல், டீசல், விறகு, மின்சாரம், எழுதுகருவிகள், தொலைபேசி போன்றவற்றுக்கான அனைத்துச் செலவுகளும் அடங்கும். ஆகவே சராசரியாக 200 பெண் தொழிலாளர்கள் வேலை செய்யும் ஒரு தோட்டத்தில் ஒரு நாளைக்கான எல்லை வருமானம் 304000 ஆகும் (200 x4 kg தேயிலை =800X 380=304000).

இறப்பர் தோட்டத் தொழிலாளர்களுக்கும் இதே சம்பளத்தினை வழங்க முடியும். இன்று இறப்பர் தோட்டத் தொழிலாளி ஒருவர் சராசரியாக 20-22 லீற்றர் பால் எடுக்கின்றார். அதிலிருந்து 6-7 கிலோகிராம் பால் உற்பத்தி செய்யப்படுகின்றது. இன்று 1 லீற்றர் பாலின் விலை சராசரியாக 365 ரூபாவாகும். ஆகவே ஒரு தொழிலாளி 2190-2555 ரூபா வரை இலாபத்தினைத் தேடிக் கொடுக்கின்றார். ஆனால் அவருக்கு நாள் சம்பளத்துடன் ஏனைய கொடுப்பனவுகளையும் சேர்த்தால் மொத்தம் 650 வரையில் கிடைக்கும். ஆயினும் கம்பனி எல்லை வருமானமாக ஒரு

**அட்டவணை 10- மாதச் சம்பளமும் கழிப்பனவுகளும்**

| | |
|---|---|
| 27 நாட்கள் x 380- | 10260/= |
| மேலதிக தேயிலை பறித்தமை (65 kg-) | 1105 |
| வரவு கொடுப்பனவு (105 x 27-) | 2835 |
| நியம கொடுப்பனவு (30 x 27-)- | 810 |
| மொத்த ஊதியம் | 15010 |
| கழிப்பனவுகள் | |
| EP-F- | 1136 |
| பண்டிகை முற்பணம் | 450 |
| மாத முற்பணம் | 3000 |
| தொழிற்சங்க சந்தா | 137 |
| மரண சங்கம் | 500 |
| சமய நடவடிக்கை | 500 |
| தேயிலை | 6.00 |
| உணவு | 1060 |
| சம்பளச் சீட்டு | 7.00 |
| வேறு | 6.00 |
| மொத்த கழிப்பனவு | 6802 |
| மிகுதிச் சம்பளம் | 8208 |
| மூலம்: கட்டுரையாசிரியரால் சேகரிக்கப்பட்ட தகவல்கள், 2013 | |

இறப்பர் தோட்ட தொழிலாளியிடமிருந்து 1700 அல்லது 1800 ரூபாவைப் பெறுகின்றது. இறப்பர் மே மாதம் தொடக்கம் டிசம்பர் மாதம் வரையில் அதிகளவான உற்பத்தியைத் தருகின்றது. இக் காலங்களில் ஒரு தொழிலாளி 25-35 லீற்றர் பால் எடுக்கின்றார். அதிலிருந்து 10 கிலோகிராம் இறப்பர் உற்பத்தி செய்ய முடியும். இக் காலப் பகுதியில் ஒரு தொழிலாளி சராசரியாக 3000 ரூபா வருமானத்தினை தோட்டத்திற்குப் பெற்றுக் கொடுக்கின்றார். இன்று இறப்பர் தோட்டங்களில் பால் உற்பத்தியை அதிகரிக்க ஒரு வகை மருந்து (Attaral) பயன்படுத்தப்படுகின்றது. இம் மருந்தைப் பயன்படுத்தினால் விளைச்சல் அதிகமாக உள்ள காலங்களில் ஒரு தொழிலாளியால் 60-70 லீற்றர் பால் எடுக்க முடியும். இதன் மூலம் 20-28 கிலோகிராம் இறப்பர் உற்பத்தி செய்ய முடியும். அதன் பெறுமதி 10,220 ரூபாவைத் தாண்டுகின்றது. ஆயினும் தொழிலாளர்களுக்கு 515 ரூபாவும் மேலதிக 1 கிலோகிராம் பாலுக்கு 35 ரூபாவும் மாத்திரமே வழங்கப்படுகின்றது. விளைச்சல் காலங்களில் 9 கிலோகிராம் ஒரு நாளுக்கான நியமமாகும். அதன்படி பார்த்தால் மொத்தம் தொழிலாளர்களுக்கு ஒரு நாளைக்கு 1180 ரூபா மாத்திரமே கிடைக்கின்றது. ஆயினும் கம்பனிகளுக்கு ஒரு தொழிலாளியிடமிருந்து 9040 ரூபா இலாபம் கிடைக்கின்றது. இந்த வருமானம் மே மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை ஒரு தொழிலாளியிடமிருந்து கம்பனிக்கு கிடைக்கின்றது. இன்று இறப்பர் தோட்டங்களில் சாதாரண காலங்களில் 6 கிலோகிராமும், உற்பத்தி அதிகமான காலங்களில் 9 கிலோகிராம் இறப்பரும் ஒரு நாளுக்கான நியமமாகக் காணப்படுகின்றது. சாதாரண காலங்களில் மாத்திரம் ஒரு தொழிலாளியிடமிருந்து 1590 ரூபா எல்லை வருமானத்தைப் கம்பனி பெறுகின்றது. இதன் மூலம் தேயிலைத் துறையினைவிட இறப்பர் துறை அதிக இலாபத்தினைத் தருவதனை அறிய முடிகின்றது. ஆகவே 635ரூபா சம்பளம் என்ற கோரிக்கையினை இம்முறை முன்னெடுப்பது சிறந்தது. அதனை வழங்கும் இயலுமை, இலாபம் கம்பனிகளுக்கு உண்டு. மறுபுறமாக கௌரவமான வாழ்க்கையினை தொழிலாளர்கள் கொண்டு நடத்த 635ரூபா நாட்சம்பளம் ஒப்பீட்டளவில் சமாளிக்கக்கூடியதாகும். 500 அடிப்படை சம்பளமாக மாற்றப்பட்டால் EPF க்கு 60 ரூபாவினையும் ETF க்கு 15ரூபாவினையும் கம்பனிகள் செலவிடவேண்டியிருக்கும். ஆகவே மொத்தம் 575 ரூபாவினை ஒரு தொழிலாளிக்கு கம்பனி செலவிடும். இதனுடன் ஏனைய கொடுப்பனவுகளையும் சேர்த்தால் (10,530) 711 ரூபா ஒரு தொழிலாளிக்கான செலவு. இது எல்லாச் சந்தர்ப்பங்களிலும் இடம்பெறுவதில்லை. 90% மானோ

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

ருக்கு 575 ரூபாவினையே செலவிட நேரிடும். கம்பனி ஒரு தொழிலாளிக்கு 711 ரூபாவினைச் செலவிட்டால் கம்பனிக்கு எல்லை வருமானமாக ஒரு தொழிலாளியிடமிருந்து 809 ரூபா கிடைக்கின்றது. மறுபுறமாக 575 ரூபாவினை ஒரு தொழிலாளிக்கு செலவிட்டால் கம்பனிக்கு 929 ரூபா ஒரு தொழிலாளியிடமிருந்து எல்லை வருமானமாகக் கிடைக்கின்றது. அதேபோல் இறப்பர் தோட்டத் தொழிலாளி ஒருவருக்கு கம்பனி 711 ரூபாவினைச் செலவழித்தாலும் கூட கம்பனிக்கு சாதாரண காலங்களில் 1479 எல்லை வருமானமும் பால் விளைச்சல் அதிகமாக உள்ள காலங்களில் 2574 ரூபா எல்லை வருமானத்தினையும் ஒரு தொழிலாளியிடமிருந்து கம்பனி பெறுகின்றது. இதனடிப்படையில் பார்க்கும் போது இறப்பர் தோட்டத் தொழிலாளர்களுக்கு 500 அடிப்படைச் சம்பளமாக வழங்குவதில் எந்தவித பாதிப்போ, நஸ்டமோ ஏற்படப்போவதில்லை.

இக்கட்டுரையில் பெருந்தோட்டத்துறை இலாபத்தில் செல்வதனை நிரூபிப்பதற்காகவே அதிகமான புள்ளி விபரங்கள் காட்டப்பட்டுள்ளன. ஆகவே சிவில் அமைப்புகளும் தொழிற்சங்கங்களும் மலையக அரசியல் கட்சிகளும் இவற்றை நன்கு அறிந்து செயற்பட வேண்டும். ஊடகங்களுக்கு நேர்காணலுக்குச் செல்லும் தொழிற்சங்கத் தலைவர்கள், அரசியல்வாதிகள் பெருந்தோட்டத்துறையின் உற்பத்தி இலாபம், உற்பத்திச் செலவு மற்றும் இன்றைய நிலை தொடர்பான போதிய தெளிவில்லாத நிலையிலேயே காணப்படுகின்றனர். சரியான புள்ளி விபரங்களுடன், தரவுகளுடன் வாதிடுவதன் மூலமே தொழிலாளர் வேதனத்தை அதிகரிக்க முடியும். அறிவு பூர்வமாகப்பேசுதல், சிந்தித்தல், செயற்படுதல் இம் முறை அவசியமாகும். தொழிலாளர்கள் சார்பாகப் பேசுபவர்கள் சரியான ஆதாரத்துடன் வாதிடத் தவறுவதால் முதலாளிமார் சம்மேளனம் தோட்டக் கம்பனிகளின் செயற்பாட்டையும் தற்போதைய வேதனக் கட்டமைப்பையும், சேம நலன்களையும் நியாயப்படுத்தி சம்பள அதிகரிப்பை நிறுத்திவிடுவர். தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள ஒரு சில சேம நலன்களையும் சம்பளத்தில் உள்ளடக்குகின்றார்கள். இவை தவறான கணிப்பாகும். மலையக சிவில் அமைப்புகள் மக்களை கூட்டு ஒப்பந்தம் தொடர்பாக இயன்றளவு தெளிவுபடுத்த வேண்டும். தொழிலாளர்களுக்கு உற்பத்தி வருமானம், உற்பத்திச் செலவு தொடர்பாக விளக்க வேண்டும். இதன் மூலம் சம்பள அதிகரிப்பிற்கு ஒரு கூட்டிணைந்த அணுகுமுறையினைக் கையாள முடியும். அன்றில் சில தொழிற்சங்கங்களின் தவறான கருத்துகளையும், சலுகைகளையும் கண்டு தொழிலாளர்கள் ஏமாந்துவிடுவர். இம்முறை கூட்டு ஒப்பந்தத்திற்கு முன் கூட்டியே தயாராக வேண்டும். அதற்கு அவசியமான செயற்பாடுகளை எல்லா மட்டங்களிலும் மேற்கொள்ள வேண்டும். மலையக அரசியல் தலைமைகள் தோட்டத் தொழிலாளர்களின் சம்பளப் பேச்சு வார்த்தைகளில் அரசாங் கத்தினை தலையிடுமாறு அழுத்தம் கொடுக்க வேண்டும். இந்த நாட்டின் பிரஜைகளாகவும் தேசிய பொருளாதாரத்தின் முக்கியப் பங்காளிகளாக இருக்கும் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு கௌரவமான வேதனத்தைப் பெற்றுக் கொடுப்பதில் அரசாங்கத்துக்கு கடப்பாடு உண்டு. காரணம் அரசாங்கத்தினை அமைப்பதில் மாற்றுவதில் இம் மக்கள் பங்காளிகளாக உள்ளனர். பேச்சுவார்த்தையில் அரசாங்கப் பிரதிநிதிகளும் ஒரு தரப்பாக பங்கேற்க வேண்டும். அன்றில் தொழிலாளர்களுக்கான மாதச்சம்பள முறை ஒன்றினை அறிமுகப்படுத்த முடியாமல் போகும். மாதச்சம்பள முறையே இன்றைய தேவையாக உள்ளது. இவ்விலக்கினை அடைய சகல தரப்பினரையும் கொண்ட கூட்டிணைந்த செயற்பாடு அவசியமாகும். கடந்த காலங்களில் கூட்டு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட போது பல தவறுகள் இழைக்கப்பட்டுள்ளன. அவற்றைப் பற்றி தொடர்ந்து விமர்சிப்பதில் பயனில்லை. அதிலிருந்து பாடங்களைக் கற்று இவ்வாண்டுக்கான கூட்டு ஒப்பந்தத்திற்கு தயாராக வேண்டும்.

முதலாளிமார் சம்மேளனத்துடன் பேசுவோர் சரியான தரவுகளுடன் தர்க்க ரீதியாக விவாதிக்க வேண்டும். இதற்கு அறிவுசார் அரசியல் தலைமைத்துவம் அவசியமாகும். மலையக அரசியலில் காணப்படுகின்ற மிகப்பெரிய குறைபாடு இதுவேயாகும். பெருந்தோட்ட மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு கொள்கை ரீதியான மாற்றங்களைக் கொண்டு வரவும், அது தொடர்பாக தேசிய மற்றும் சர்வதேச ரீதியாகவும் நியாய பிரசாரம் செய்யக்கூடிய இயலுமை கொண்ட அறிவுசார் அரசியல் தலைமைத்துவத்தை நோக்கி இச் சமூகம் செல்ல வேண்டிய தேவை மிக வேகமாகவே அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. எல்லா ஊடகங்களிலும் கூட்டு ஒப்பந்தம் குறித்துப் பேச வேண்டும், எழுத வேண்டும். இதன் மூலம் சம்பள அதிகரிப்பினை நியாயப்படுத்தியும் அதற்கு ஆதரவாகவும் ஒரு சூழ்நிலையைக் கட்டியெழுப்ப முடியும். இவ்வாறான செயற்பாடுகளின் மூலம் ஏனைய சமூகத்தவர்களின் ஆதரவினையும் வென்றெடுக்க முடியும். நீடித்த பிரயத்தனம், அர்ப்பணிப்பு, கூட்டு செயற்பாடுகள் மற்றும் புலமைசார் பேச்சுவார்த்தை ஆகியவற்றின் மூலம் தொழிலாளர் வேதனத்தை அதிகரிக்க முடியும். ■


பாக்குநீரிணைக்கு குறுக்கே



# மீண்டும் சூடுபிடிக்கும் மீனவர் பிரச்சினை

இனப்பிரச்சினையின் அகல-நீளங்களுக்கிடையே மீனவர் பிரச்சினை பக்க வாத்தியமாக மாறிவிட்டது. இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வை இலங்கை அரசும் அரசியல் தலைமைகளும் முடிவு செய்தாலும் மீனவர் பிரச்சினையின் தனி ஆவர்த்தனம் தொடரும்

எப்பொழுதெல்லாம் 'இலங்கை இனப்பிரச்சினை' கடல் கடந்து, இந்தியாவில் எதிரொலிக்கிறதோ, அப்போதெல்லாம் இரு நாடுகளுக்கிடையேயான 'மீனவர் பிரச்சினை' உடன்பிறப்பாக உயிர்த்தெழுவது வாடிக்கையாகிவிட்டது. அதற்காக, மீனவர் பிரச்சினை, இனப்பிரச்சினையோடு மட்டும் இணைந்தது என்று பொருள் அல்ல. இனப்பிரச்சினை



என்.சத்தியமூர்த்தி

இந்தியாவில் புதிய வியூகம் எடுக்காத இடைப்பட்ட காலகட்டங்களிலும் மீனவர் பிரச்சினை புதிய அவதாரங்களை எடுத்து வந்துள்ளது என்பதே உண்மை.

இந்திய அரசியல்வாதிகளும், தமிழ் நாடு அரசியல் தலைமைகளும் எடுக்கும் நிலைப்பாடுகளுக்கு அப்பால் சென்று, 'இனப்பிரச்சினை', இலங்கை என்ற தனி நாட்டின் தனிப்பட்ட பிரச்சினை. இதில், தமிழ் நாட்டின் கவலை, இரத்த உறவுகள் சம்பந்தப்பட்டது. தமிழ் நாட்டின் 'தொப்புள் கொடி உறவு'களுக்கும் அப்பால் சென்று, இனப்பிரச்சினை குறித்த இந்திய அரசின் கவலைகள் எல்லாம், 'அரசியல் தீர்வு' மற்றும் இருநாட்டு அரசியல் உறவு சம்பந்தப்பட்டது.

ஆனால், மீனவர் பிரச்சினை அவ்வாறல்ல. அதில், இரு நாட்டு அரசுகளும் இரு நாட்டு மக்களும் நேரடியாக சம்மந்தப்பட்டுள்ளனர். தென்னிந்திய மாநிலமான தமிழ் நாட்டில் கூட, 'மீனவர் பிரச்சினை' நேரடியான பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளது. ஆனால், 'இனப்பிரச்சினையின்' அகல-நீளங்களுக்கிடையே, மீனவர் பிரச்சினை, பக்கவாத்தியமாக மாறிவிட்டது. ஆனால், இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வை இலங்கையிலுள்ள அரசு மற்றும் அரசியல் தலைமைகள் முடிவு செய்தாலும், மீனவர் பிரச்சினையின் தனி-ஆவர்த்தனம் தொடரும். ஒரு கால கட்டத்திற்கு அப்பால், அது புதிய உருவத்தையும் வடிவத்தையும் பெறும்.

எப்போது இந்தியா, இலங்கை என்ற இரு நாடுகளும் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய ஆட்சியில் இருந்து சுதந்திரம் பெற்று தனி நாடுகளானதோ,

அப்போதே, யாரும் கேட்காமலே, மீனவர் பிரச்சினைக்கான அடித்தளம் இடப்பட்டுவிட்டது. அது தொடர்ந்த காலகட்டத்தில், 'ரோலர்' எனப்படும் விசைப் படகுகளின் தாக்கம் இருநாடுகளுக்கு இடையேயான கடல் பகுதி மீன்பிடிப்பில் ஒரு புதிய அத்தியாயத்திற்கு விதை விதைத்தது. அதுவே இன்று விருட்சமாக வளர்ந்து, அதன் அடிவேர்கள் இருநாட்டு நல்லுறவையே ஆட்டிப்பார்க்கும் நிலைமை தோன்றியுள்ளது.

மீனவர் பிரச்சினையின் அடிப்படையில் இரு விடயங்கள் உள்ளன. ஒன்று, இரு நாடுகளிடையேயான கடல் எல்லைக்கு மதிப்பு அளிக்காமல் இந்திய மீனவர்கள் இலங்கைக் கடல் பகுதியில் தொடர்ந்து தொழில் செய்து வருகிறார்கள் என்ற இலங்கை அரசின் கவலை. இது, நாட்டின் இறையாண்மை மற்றும் பாதுகாப்பு சம்பந்தப்பட்டது. இரண்டாவது, இரு நாட்டு மீனவர்களுக்கும் உண்டான வாழ்வாதார உரிமை மற்றும் அதனால் உருவாகியுள்ள களநிலை. இது மனிதத்துவம் மற்றும் மனித நேயம் சம்பந்தப்பட்டது. ஆனால், இந்தியா-இலங்கை இரு நாட்டு மீனவர் பிரச்சினையில் இலங்கையின் உள்நாட்டு சட்டதிட்டங்களை செயல்படுத்துவது குறித்த விடயமும் கூட. ஆனால், இரு பிரச்சினைகளிலுமே அரசியல் கலந்து விட்டது வருந்தத்தக்க விடயமும் கூட.

### தமிழக மீனவர்கள் மீது தாக்குதல்

இரு நாடுகளும் சுதந்திரம் அடைந்த காலகட்டத்திலேயே கடல் எல்லைகள் சட்டரீதியாக தனியாகி விட்டன. ஆனால், காலம்காலமாக இரு நாட்டு கடல்பகுதிகளிலும் மற்ற நாட்டின் மீனவர்கள் தொழில் செய்வது தொடர்ந்து வந்தே இருந்தது. எழுபதுகளில் ஐக்கிய நாட்டு சபையின் சர்வதேச கடல் சட்டங்களின் அடிப்படையில் பிரச்சினை எதுவும் இன்றி, இரு நாடுகளும் பேச்சுவார்த்தை மூலம் தங்களது கடல் எல்லைகளை வரையறை செய்து கொண்டன. அதன்படி, இந்தியாவின் ஒரு பகுதியாகக் கருதப்பட்டு வந்த கச்சதீவு, இலங்கையின் எல்லைக்குள் வந்தது. இந்தியாவின் தெற்கு கடல் பகுதியில், வாட்ஜ் ஜலசந்தியை, இந்தியாவின் ஆளுமைக்குள் உள்ள ஒரு பகுதியாக இலங்கை அரசு ஏற்றுக் கொண்டது.

இன்று, தமிழ் நாட்டில் கச்சதீவை முன்வைத்து நடந்து வரும் அரசு, அரசியல் மற்றும் சட்டப் போராட்டங்களுக்கு அடிப்படையே இந்தத் தீர்வு தான். கச்சதீவை இந்தியா அநியாயமாக இலங்கைக்கு தாரைவார்த்து விட்டது என்று கூறுவோர் அதனுடன் வாட்ஜ் தீவின் உரிமையும் இணைக்கப்பட்டு உள்ளது என்பதை ஏனோ மறந்து விடுகிறார்கள். பலருக்கும் வாட்ஜ் ஜலசந்தி என்ற ஒரு பகுதி இருப்பதே அன்றும் தெரியாது, இன்றும் தெரியாது. எனவே தான், கச்சதீவு ஒருதலைப்பட்சமாக கைமாறியது என்ற எண்ணம் தமிழ் நாட்டில் உருவானது. அதன் அடிப்படையில் இன்றளவும் போராட்டங்கள் தொடர்கின்றன.

என்றாலும், கச்சதீவு கைமாறிய போது, அந்தக் கடல் பகுதியில் தொழில் செய்து வந்த தமிழக மீனவர்கள் தங்களது மீன் வலைகளை அந்த தீவில் உலர்த்திக் கொள்ளலாம் என்றும், அங்கு வருடாந்தம் நடைபெறும் புனித அந்தோனியார் கிறிஸ்தவ கோவில் திருவிழாவில் இந்தியாவைச் சேர்ந்த பக்தர்கள் பங்கெடுக்கலாம் என்றும் இலங்கை ஏற்றுக் கொண்டது. இலங்கையில் இனப்போர் கடல் பகுதியையும் ஆக்கிரமித்த இருபது ஆண்டுகளுக்கும் மேலான காலகட்டத்தில் அந்தோனியார் திருவிழா நடைபெறும் சூழல் இருக்கவில்லை. தற்போது, இனப்போர் முடிந்த கையுடன் இலங்கை அரசு அந்த விழாவை மீண்டும் தொடக்கி அதற்கு இந்திய மீனவர் குடும்பங்களையும் பங்கெடுக்க அனுமதி அளித்துள்ளது.

ஆனால், கச்சதீவில் இந்திய மீனவர்கள் தங்களது வலைகளை உலர்த்திக் கொள்ளலாம் என்ற ஷரத்தின் மீது இன்றளவும் மாறுபட்ட கருத்துகள் நிலவுகின்றன. இந்திய அரசு என்றில்லை என்றாலும், தமிழ் நாட்டைச் சேர்ந்த அறிவுஜீவிகள் சிலர், கச்சதீவில் மீன்வலை உலர்த்திக் கொள்ளலாம் என்ற உரிமம் கொடுத்தாலே அதன் காரணமாக அந்த கடல் பகுதியில் மீன்பிடி உரிமையும் இந்திய மீனவர்களுக்கு உள்ளது என்ற விதத்தில் கருத்துத் தெரிவித்து வருகின்றனர். ஆனால், உலரவைக்கப்பட வேண்டிய கயிறு மற்றும் நூல் ஆகியவற்றால் தயாரிக்கப்பட்டு வந்த வலைகளுக்கே இது பொருந்தும் என்றும் தற்போது பயன்பாட்டில் உள்ள நைலோன் வலைகளுக்கு இது பொருந்தாது என்றும் இலங்கைத் தரப்பில் எதிர்வாதம் வைக்கப்பட்டு வருகிறது.

இது தவிர, கச்சதீவில் வலைகளை உலர்த்துவதற்கு தீவை ஒட்டியுள்ள இலங்கைக் கடல் பகுதியில் மட்டுமே மீன்பிடிக்க வேண்டும் என்றில்லை என்ற விதத்திலும் விவாதம் தொடர்ந்து வருகிறது. அதாவது, நடுக்கடலில் கயிறாலான தங்களது வலைகளை தமிழக மீனவர்கள் உலர்த்துவதற்குத் தோதாக, நல்லெண்ண அடிப்படையில் மட்டுமே இலங்கை அரசு இதனை ஏற்றுக்கொண்டுள்ளது எனவும் அதனையே மீன்பிடி உரிமமாக மாற்றிவிட முடியாது என்றும் வாதங்கள் முன்வைக்கப்பட்டு வந்துள்ளன. அவ்வாறு இல்லையென்றால், தமிழக மீனவர்கள் அநாவசியமாக ஒவ்வொரு முறையும் இந்திய கடற்கரைப் பகுதிகளுக்கு திரும்ப வேண்டிய கட்டாயம் ஏற்படும் என்றும் கூறப்பட்டது. எது எப்படியோ, பழைய வலைகள் மற்றும் படகுகளை மாற்றி விசைப்படகுகளும் நைலோன் வலைகளும் தோன்றிய பின்னர் இது போன்ற விவாதங்கள் தேவையற்றது என்ற கருத்தும் அவ்வப்போது முன்வைக்கப்பட்டு வந்துள்ளது.

இரு நாட்டு மீனவர் பிரச்சினை முக்கியத்துவம் பெற்றதற்கு முக்கிய காரணங்கள் வேறு பல. கச்சதீவு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்ட காலகட்டத்தில் தான், இலங்கையில் இனப்

பிரச்சினை இனக்கலவரமாக வெடித்து, விடுதலைப் புலிகள் இயக்கம் சார்ந்த தீவிரவாதம் மற்றும் இனப் போராக உருவெடுத்தது. கடந்த 1983ஆம் ஆண்டு இனக்கலவரத்தை ஒட்டி தங்களது உயிருக்கு உத்தரவாதம் தேடி இந்தியாவை புகலிடமாக ஏற்றுக்கொண்ட பல்லாயிரக் கணக்கான தமிழ் மக்கள் இரு நாட்டு மீனவர்களையும் அவர்களது படகுகளையும் நம்பியே கடல்கடந்து, ஆபத்தான பயணத்தை மேற்கொண்டனர்.

பின்னர், இனப்போர் தொடங்கியது முதல் போராளிக் குழுக்களுக்கு தேவையான மருந்துப் பொருட்கள், மக்களுக்குத்தேவையான அத்தியாவசிய உணவுப் பொருட்கள் போன்றவற்றை இரு நாட்டு தமிழ் மீனவர்களே, ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக தங்களுக்கு பழக்கமாகிப் போய்விட்ட படகு வணிபம் மூலம் இலங்கையில் கொண்டு இறக்கினர். இதில் போர்த் தளவாடங்களும் கூட அடங்கும். இந்தச் சந்தேகத்திலேயே இலங்கைக் கடற்படையினர், தமிழ் நாட்டு மீனவர்களை சந்தேகக் கண்களுடன் காணத் தொடங்கினர். விடுதலைப் புலிகள் இயக்கம் கடற்புலிகள் என்ற தனிக் குழுவை அமைத்து, இலங்கை அரசின் கடற்படையினரைச் சீண்டிப் பார்க்கத் தொடங்கியதும், இலங்கை அரசு இரு நாடுகளுக்கும் இடையேயான கடற்பரப்பில் மீன்பிடித் தொழிலுக்கு தடை விதித்தது.

உண்மை என்னவோ, களநிலையில் இந்தத் தடை உத்தரவு பொதுவாக இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் வசித்து வந்த தமிழ் பேசும் மக்களையே பாதித்தது. குறிப்பாக ராஜீவ் காந்தி படுகொலைக்குப் பின்னர் இந்தியாவில் விடுதலைப் புலிகள் இயக்கம் குறித்த எண்ணவோட்டம் மாறிய பின்னர், தமிழ் நாட்டு மீனவர்கள் அதிக அளவில் இலங்கைக் கடற்படையினரின் பிரச்சினை இன்றி, இருநாட்டு கடல் பகுதிகளில் தொழில் செய்ய முடிந்தது. தற்போது இனப்போர் முடிவடைந்து சுமார் நான்கு ஆண்டுகள் கடந்து விட்ட நிலையில், இலங்கையில் உள்ள தமிழ் மீனவர்கள் அதிக அளவில் தங்கள் நாட்டிற்கு உட்பட்ட கடல் பகுதியில் தொழில் செய்யத் தொடங்கிய பின்னர் பிரச்சினை புதியதொரு பரிணாமத்தை எட்டியுள்ளது.

## மறுக்கடிக்கப்பட்ட விடயம்

இதற்கிடையில் மறுக்கடிக்கப்பட்ட மற்றொரு விடயமும் உண்டு. அறுபதுகளில் தொடங்கி, இந்தியாவில்



மீன்பிடித் தொழில் உலகளவிலான புதிய உத்திகளைக் கையாளத் தொடங்கியது. இன்று அது தற்போதைய தொழில்நுட்பத்தை நடைமுறைப் படுத்தவில்லை என்றாலும், அன்றைய நாட்களில், அரிதாகிப் போன அந்நிய செலாவணியை மனதில் கொண்டு, விசைப்படகு மீன்பிடித் தலை அரசு ஆதரவுடன் செயல்படுத்தத் தொடங்கியது. பிற்காலத்தில், அடுத்த கட்டமாக புதிய வகை மீன்வலைகளையும் இந்திய மீனவர்கள் பயன்படுத்தத் தொடங்கினர். இவை அனைத்தும் மீன்பிடிப்பு மற்றும் மீன் ஏற்றுமதி அதன் மூலம் கிடைக்கும் அந்நியச் செலாவணி மற்றும் உள் நாட்டு மீன்பிடி உற்பத்தியாளர்களின் இலாபம் ஆகியவற்றை மட்டுமே கருத்தில் கொண்டு இயங்கி வந்தது.

இதன் காரணமாகவே, இடைப்பட்ட காலத்தில் இரு நாடுகளுக்கிடையேயான கடற்பகுதியில் இந்தியக் கடலில் இருந்த அரிய உணவு வகைக்கான மீன்கள் இருபது- முப்பது ஆண்டுகளிலேயே இல்லாமல் போனது துரதிர்ஷ்டமே. என்றாலும், மீன்பிடித் தொழிலில் கிடைத்த அரிய வருமானமும், அதனால் தோன்றிய போட்டியும், பரம்பரை மீனவர்களுக்கும் அப்பால் சென்று புதிய மீன்பிடித் தொழில் இளைஞர்களை உருவாக்கியது. இலங்கைக் கடல் பகுதியில், இனப்போர் காரணமாக அந்த நாட்டு மீனவர்களுக்கு விதிக்கப்பட்டிருந்த தடை, அவர்களது இந்திய 'தொப்புள் கொடி உறவு'களுக்குச் சாதகமாக அமைந்தது. இனப்போர் முடிந்து இலங்கைத் தமிழ் மீனவர்கள் தொழிலுக்கு திரும்பத் தொடங்கிய காலகட்டம் தொட்டு இந்தப் பிரச்சினை மீண்டும் முளைத்தெழுந்துள்ளது.

இதற்கும் காரணம் உண்டு. இன்றளவும் இலங்கை போன்ற நாடுகளில் மீன்பிடித் தொழிலை அரசு நெறிமுறைப்படுத்தி அதனைத் செயல்படுத்தியும் வருகிறது. அந்த விதத்தில், இலங்கையின் கடல் பகுதிகளில் அதியுயர் சக்தி கொண்ட விசைப்படகுகளோ, அல்லது சிறுசிறு மீன் குஞ்சுகளைக் கூட விட்டு வைக்காமல் பிடித்து விடும் 'சுருக்கு மடி' வலைகை

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

ளையோ தொழில் செய்வோர் பயன்படுத்த முடியாது. வெகுவாக இலங்கை மீனவர்களும் அந்த சட்டங்களுக்கு உட்பட்டே தொழில் செய்து வருகின்றனர். ஆனால், அவர்களது கடல் பிரதேசத்தில் எல்லை தாண்டி வந்து தொழில் செய்து வரும் தமிழ் நாட்டு மீனவர்கள் அந்த சட்டங்களை மதிப்பதில்லை.

அது மட்டுமல்ல, தமிழ் நாட்டு எல்லைப் பகுதிகளில் இருந்து இலங்கைக் கடற்பகுதிகளில் தொழில் செய்ய வரும் மீனவர்களின் விசைப் படகுகளின் எண்ணிக்கையும் கட்டிலடங்காமல் போய்விட்டது என்று கூற வேண்டும். இதன் காரணமாக அதி விரைவில் இலங்கைக் கடற்பரப்பில் உள்ள மீன்களின் எண்ணிக்கையும் சுனாமி வேகத்தில் அழிந்து வருகிறது என்ற கவலை இலங்கை அரசு மற்றும் மீனவர்களுக்கும் தோன்றி உள்ளது. இது போதாது என்று தமிழ் நாட்டு மீனவர்களின் விசைப் படகுகள் தாங்கள் செல்லும் வேகத்தில் கடற்பரப்பில் வீசப்பட்டுள்ள இலங்கைத் தமிழ் மீனவர்களின் வலைகளையும் அறு த்து எறிந்து விடுகிறது. இது வேண்டுமென்றே செய்யப்படுவதன்று. ஆனால், வேண்டிய அளவிற்கு இந்திய மீனவர்கள் கவனம் செலுத்தாததால் தோன்றும் பிரச்சினையாக மாறிவிட்டது.

## அடுத்தது என்ன?

இன்றைய சூழ்நிலையில் இரு நாட்டு அரசுகளும் இரு நாட்டு மீனவர்களும் பேசி நல்லதொரு முடிவிற்கு வரவேண்டும் என்ற எண்ணம் திரும்பத், திரும்பக் கூறப்பட்டு வருகின்றது. காரணம், கடந்த முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி தொழில் செய்தமைக்காக தமிழ் நாட்டு மீனவர்கள் ஐநூறுக்கும் அதிகமானோர் இலங்கைக் கடற்படையினரால் அநியாயமாக கொல்லப்பட்டுள்ளதாக தமிழ் நாட்டின் அரசியல் கட்சிகள் குற்றம்சாட்டி வந்துள்ளன. இந்த எண்ணிக்கை ஏற்புடையதல்ல என்று கூறப்பட்டு வருகிறது.

இலங்கை அரசோ, தங்களது கடல் படையினர் இது போன்ற செயல்களில் ஈடுபட்டதே இல்லை என்ற நிலைப்பாட்டையே எடுத்து வந்துள்ளது. அண்மைக் காலத்தில் கூட இலங்கை பாதுகாப்புத்துறைச் செயலர் கோதாபய ராஜபக்ஷ, இது போன்ற செயல்களில் விடுதலைப் புலிகள் இயக்கத்தினரே ஈடுபட்டு வந்ததாகக் கூறி, அதற்கான அறியப்பட்டுள்ள சான்றுகளையும் மீண்டும் முன்னெடுத்து வைத்துள்ளார். இது தவிர, இலங்கைக் கடற்படையினரால் அத்துமீறி தொழில் செய்ததாக கைது செய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்ட தமிழ் நாட்டு மீனவர்களின் எண்ணிக்கை பல ஆயிரங்களை எட்டும். அதில் ஒரு சிலரே குறிப்பிட்ட காரணங்களுக்காக கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர் என்றும் இலங்கை அரசு அவ்வப்போது கூறி வந்துள்ளது.

தற்போதுள்ள நிலைமையில், இரு நாட்டு மீனவர் பிரதிநிதிகளும் கூடிப் பேசி, தமிழ் நாட்டு மீனவர்கள் இலங்கைக் கடற்பகுதியில் வருடத்தில் எழுபத்திரண்டு நாட்கள் தொழில் செய்து கொள்ளலாம் என்பது போன்ற ஒப்பந்தத்திற்கு வடிவம் கொடுத்துள்ளனர். அது நடந்து சுமார் மூன்று ஆண்டுகள் ஆகிவிட்ட போதிலும் அது குறித்த அடுத்த கட்ட நடவடிக்கைக்கு தமிழ் நாடு அரசு முயற்சி எடுக்கவில்லை என்பதே உண்மை. கடந்த 2012-ஆம் ஆண்டு இரு நாடுகளுக்குமிடையேயான மீன்தொழில் குறித்த அரசு தரப்பு கூட்டுக்குழு இது குறித்து அடுத்த கட்ட நடவடிக்கைக்கு முக்கியத்துவம் கொடுத்து முடிவு எடுத்த போதும், அதற்கு செயல்வடிவம் கொடுக்க தமிழ் நாட்டு அரசும் மீனவர்களும் எந்த முயற்சியும் எடுக்கவில்லை என்பதே உண்மை.

அதேசமயம், கடந்த 2008-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் இனப் போர் உச்சக்கட்டத்தில் இருந்த போதே, இரு நாட்டு அரசுகளும் முடிவெடுத்து, இலங்கைக் கடல் பகுதியில் தமிழ் நாட்டு மீனவர்கள் தொழில் செய்து கொள்ள அனுமதி வழக்கப்பட்டது. ஆனால், ஒன்றில்லாமல் மற்றொன்று இல்லை என்பதே உண்மை. இந்திய மீனவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்ட அதேசமயம், அவர்களது படகின் விசைத் திறன், எண்ணிக்கை, மீன்வலை வகையறா ஆகிய விடயங்களில் இரு நாட்டு மீனவப் பிரதிநிதிகளும் சேர்ந்து பேசி முடிவு எடுப்பார்கள் என்ற எதிர்பார்ப்பு பொய்த்துப் போய்விட்டன என்ற எண்ணம் இலங்கை அரசிற்கும் வடக்கு மற்றும் கிழக்கு வாழ் தமிழ் மீனவர்களுக்கும் தோன்றியுள்ளது.

இதன் காரணமாகவும் மீண்டும் இரு நாடுகளிலும் துளிர்விடும் இனக் கவலைகள் காரணமாகவும் இலங்கைக் கடற்படையினர் தமிழ் நாட்டு மீனவர்களை மீண்டும் குறிவைத்துள்ளனர் என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது. என்றாலும், இனப்பிரச்சினைக்கு இலங்கைக்குள்ளேயே பேச்சுவார்த்தை மூலம் அரசியல் முடிவு ஏற்பட்டாலும் அதுவே மீனவர் பிரச்சினையையும் முடிவிற்குக் கொண்டுவந்துவிடும் என்று எதிர்பார்ப்பது தவறு. இன்னும் சொல்லப் போனால் இரு நாட்டு உறவுகளில் இனப்பிரச்சினையை விட மீனவர் பிரச்சினைக்கே அதிக முக்கியத்துவம். ஆனால், இந்தியாவின் மத்திய அரசு மற்றும் இலங்கை அரசு தரப்பு தவிர வேறு யாருமே அது குறித்து கவலைப்படுவதாகத் தெரியவில்லை! ■



*(25ஆம் பக்கத்தொடர்ச்சி...)*

முக்கிய பிரமுகர்கள் என்று கூறக்கூடிய சிங் களவர் எவரும் பிரசன்னமாயிருக்கவில்லை. சரி பரவாயில்லை, இது ஆரம்ப நாட்கள் தானே. ஒரு தொடக்கத்தைச் செய்ய வேண்டியிருக்கிறது. இலங்கைக்குத் திரும்பி வரவேண்டியவர்கள் அரசாங்கமும் பேரினவாதிகளும் கொடுக்கக்கூடிய தொல்லைகள் பற்றிக் கவலைப்படுகிறார்கள். ராஜபக்ஷ அரசாங்கத்தின் அதிகாரத் துஷ்பிரயோகங்களையும் எதிராளிகளை நடத்துகின்ற முறைகளையும் நோக்கும் போது இதைப் புரிந்துகொள்வதில் எவருக்குமே சிரமமிருக்கமுடியாது. இன்னொரு முக்கிய விடயம், உலகத் தமிழர் பேரவை போதுமான அளவுக்கு மகாநாட்டுக்கான முன்னேற்பாடுகளை மேற்கொள்ளவில்லை. இந்தப் பேரவை குறித்தும் அதன் செயற்திட்டங்கள் குறித்தும் இலங்கையில் பெரிதாகத் தெரிந்திருக்கவில்லை. நடத்துபவர்களைப் பற்றி வெளிப்படைத்தன்மை இல்லாமல் மிகவும் சிக்கலான ஒரு பிரச்சினை தொடர்பான ஒரு மகாநாட்டில் ஒரு சிங்களவரினால் எவ்வாறு பங்கேற்க முடியும்? பெரும் எண்ணிக்கையில் சிங்களவர்கள் கலந்து கொள்வதாக இருந்தால், மகாநாட்டின் நிகழ்ச்சித்திட்டம் ஏற்கனவே விநியோகிக்கப்பட்டு, முன்கூட்டியே விவாதிக்கப்பட்டிருக்க வேண்டும்.

உலகத் தமிழர் பேரவை விடுதலைப் புலிகளின் முன்னைய அனுதாபிகளையும் ஆதரவாளர்களையும் உள்ளடக்கியிருக்கிறது என்ற குற்றச்சாட்டோ அல்லது விமர்சனமோ என்னை எந்த வகையிலும் குழப்பத்திற்குள்ளாக்கவில்லை. எந்தவொரு தமிழ் அமைப்புமே முன்னாள் புலிகள் இயக்க ஆட்களைத் தாராளமாகவே இன்று கொண்டிருக்கவே செய்யும். மூன்று தசாப்தங்களாக புலம்பெயர் தமிழர்கள் மத்தியிலும் உள்நாட்டுத் தமிழர்கள் மத்தியிலும் விடுதலைப் புலிகள் கொண்டிருந்த பரந்தளவிலான செல்வாக்கையும் வல்லமையையும் அடிப்படையாகக் கொண்டு நோக்குகையில், வேறு எவ்வாறு இருக்க முடியும்? ராஜபக்ஷ ஆட்சியில் கூட விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகள் பட்டாளம் ஒன்று இருக்கவே செய்கிறது. கருணா, பிள்ளையான், கே.பி. மற்றும் துணைப்படைகள் இன்றுவரை ஆயுதபாணிகளாகவே இருக்கிறார்கள். டக்ளஸ் விடுதலைப் புலிகளைச் சாராதவராக இருந்தாலும் கூட, ஆயுதபாணித் தமிழர்களின் பாரம்பரியத்துக்குச் சொந்தமானவரே. இன்றும் சரி எதிர்காலத்திலும் சரி தமிழர்கள் பிரசன்னமாயிருக்கக்கூடிய ஒவ்வொரு அமைப்பும் முன்னாள் விடுதலைப் புலிகள் உறுப்பினர்களை, ஆதரவாளர்களைக் கொண்டிருக்கவே செய்யும். இதைப் பற்றித் தெளிவாக இருக்க வேண்டிய தருணம் இது. தமிழ் அரசியல் நடவடிக்கைகளை ஓரங்கட்டுவதற்கு அரசாங்கமும் இராணுவமும் பேரினவாதிகள் புலிப் பூச்சாண்டியைப் பயன்படுத்துவதை ஒரு முடிவுக்குக் கொண்டுவரவேண்டிய நேரமும் வந்துவிட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட சகல தமிழ் அரசியல் அமைப்புகள் மற்றும் அரசியல்சாரா அமைப்புகள் போன்று உலகத் தமிழர் பேரவையும் நிச்சயமாக விடுதலைப் புலிகளின் முன்னாள் அனுதாபிகளையும் ஆதரவாளர்களையும் கொண்டிருக்கும் என்று நான் நம்புகிறேன். அந்த அமைப்பின் தற்போதைய செயற்திட்டம் என்ன? எதிர்காலச் செயற்திட்டம் என்ன என்பதே முக்கியமானதாகும்.

இந்தக் கட்டுரையில் விபரிக்கப்படுகின்ற அரசியல் இயக்கவிசையைப் பற்றிய விளக்கப்பாட்டை உலகத் தமிழர் பேரவை கொண்டிருக்கிறது என்பதும் நியாயமான அரசியல் தீர்வொன்றை அது ஏற்றுக்கொள்ளும் என்பதும், இலங்கையில் தமிழர்களின் தலைமைச் சக்தியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அது ஏற்றுக் கொள்ளும் என்பதுமே எனது மதிப்பீடாகும். பேரவை ஒரு செயற்திட்டத்தின் வழியில் சிந்திக்கின்ற போதிலும் இன்னமும் பக்குவப்பட வேண்டியிருக்கிறது. அத்துடன், ஜனநாயக சிந்தனை கொண்ட, இடதுசாரிச் சிந்தனை கொண்ட சிங்கள மற்றும் முஸ்லிம் அமைப்புகளுடன் முற்போக்கான கூட்டணிகளை ஏற்படுத்திக்கொள்வதில் பேரவை ஆர்வமுடையதாயிருக்கும் என்பதும் எனது அபிப்பிராயம். இந்த இறுதி விடயத்தைப் பொறுத்தவரை பேரவையின் நடைமுறைகள் கருநிலையிலேயே இருக்கின்றன. ஆனால், வளர்ச்சிகாணும்.

உலகத் தமிழர் பேரவையின் தலைமைத்துவம் அதன் ஆதரவுத்தளத்தினால் தனக்கு ஆபத்து, அச்சுறுத்தல் வந்துவிடுமென்று அடிக்கடி பயப்படுகின்றது. வெறுமனே அறிவுரை கூறிக் கொண்டிருப்பதை விடுத்து செயற்பாடுகளில் இறங்கினால், ஆதரவுத்தளம் பக்குவமடைய உதவியாயிருக்கும். உலகத் தமிழர் பேரவை புலம்பெயர் தமிழர்கள் மத்தியில் இருக்கிற முன்னோக்கிச் சிந்திக்கின்ற ஒரு தமிழ் அரசியல் இயக்கம் என்பது எனது கருத்து. இக்கருத்து பேரினவாத வட்டாரங்களில் இருந்து கூச்சல்களையும் ராஜபக்ஷ அரசிடமிருந்து தவிர்க்க முடியாத வகையில் அச்சுறுத்தல்களையும் கிளப்பும். ஆனால், அவற்றையெல்லாம் அலட்சியம் செய்து உலகத் தமிழர் பேரவையுடன் தொடர்புகளை ஏற்படுத்துவதில் இலங்கையில் உள்ள சகல சமூகங்கள் மத்தியிலும் இருக்கக்கூடிய செயற்பாட்டாளர்கள் அக்கறை காட்டினால் நிச்சயமாக அது ஆக்கபூர்வமானதாக இருக்கும். ■


## காலத்தின் தேவைகளுக்கு ஏற்ற வழியில் திருச்சபையின் பாரம்பரியப்பண்புகளை வியாக்கியானம் செய்ய வேண்டிய பொறுப்பில்

# பாப்பரசர் பிரான்சிஸ்

முதன்முதலாக ஐரோப்பியர் அல்லாத ஒருவரை வத்திக்கானில் கார்டினல்கள் குழு புதிய பாப்பரசராக தெரிவு செய்ததையடுத்து ரோமன் கத்தோலிக்கத் திருச்சபை வரலாறு படைத்திருக்கிறது. ஆர்ஜன்டினாவைச் சேர்ந்தவரான புதிய பாப்பரசர் ஜோர்ஜ் மறியோ பெர்கொக்லியோ முதலாவது பிரான்சிஸ் என்று அழைக்கப்படுகிறார். உலகின் மிகப்பெரிய மதத்தைப் பின்பற்றுகிற சுமார் 120 கோடி மக்களுக்கும் மதகுருமாருக்கும் தலைமை தாங்கி வழி நடத்தப் போகும் முதலாவது ''யேசு'' சபை உறுப்பினர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

மக்களின் வாழ்விலும் வரலாற்றிலும் பல நூற்றாண்டுகளாக முக்கியமான வழிகளில் செல்வாக்குச் செலுத்தி அவற்றுக்கு உருக்கொடுத்த 2000 வருடங்கள் பழைமை வாய்ந்த மதத்தின் கதையில் புதியதொரு அத்தியாயத்தின் ஆரம்பமாகவும் இது அமைகிறது. உலகின் பெரும்பாலான பகுதிகளில் திருச்சபையின் வகிபாகம் குறைக்கப்பட்டுவிட்டது. ஆனால், பாப்பரசரினால் வெளிப்படுத்தப்படுகின்ற திருச்சபையின் சிந்தனைகளும் ஆணைகளும் அரசியலிலும் சமுதாயத்திலும் மக்களின் மனப் போக்கிலும் நடத்தையிலும் இன்னமும் செல்வாக்குச் செலுத்துகின்றன.

பாப்பரசருக்கு ஒரு திருவுருவ அந்தஸ்து இருக்கின்றதற்கு மத்தியிலும் உலகின் பல பகுதிகளில் கத்தோலிக்கத் திருச்சபை ஒரு நெருக்கடிக்குள்ளாகவே சென்று கொண்டிருக்கிறது. பல இடங்களில் குறிப்பாக, அதன் ஐரோப்பிய கோட்டையில் திருச்சபை ஆதிக்கத்தை இழந்துசுருங்கி விட்டது. மாறிவருகின்ற ஒரு உலகில் பாப்பரசர் ஆட்சி முறையினால் எதிர்நோக்கப்படுகின்ற நெருக்கடிகளின் ஒப்புதலாகவே பாப்பரசர் பெனடிக்ற்றின் பதவி விலகல் நோக்கப்படுகிறது. தென்னமெரிக்கா வேறு எந்தக் கண்டத்தையும் விட கூடுதல் எண்ணிக்கையில் கத்தோலிக்கர்களைக் கொண்டிருக்கிறது. ஆனால், அங்கு கூட பெந்தகொஸ்தலிசம் போன்ற புதிய இயக்கங்களுக்கு கத்தோலிக்கத் திருச்சபை அதன் உறுப்பினர்களை இழந்து கொண்டிருக்கிறது. அதனால், ஆர்ஜன்டினாவைச் சேர்ந்த ஒருவரை பாப்பரசராகத்தெரிவு செய்தமை காலப்பொருத்தமானதும் உகந்ததுமான செயலாகும். பாப்பரசர் எனப்படுபவர் வெறுமனே றோமின் பேராயர் அல்ல என்ற நேர்மை வாய்ந்த செய்தியை இது அடிக்கோடிட்டுக் காட்டுவதாக அமைகிறது. வத்திக்கானின் கடந்தகால இடைஞ்சற்பாடுகளில் இருந்து விடுபட்டுச் செயற்படக் கூடியதாக இருந்தால் புதிய பாப்பரசரினால் திருச்சபைக்குள் ஒரு புதுவாழ்வைப் பாய்ச்ச முடியும்.



பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

பாலியல் ஊழல்கள், மணத்துறவு மற்றும் பெண்களை மதகுரவராக நியமனம் செய்வது தொடர்பான விவாதங்கள், மதகுருமார் பற்றாக்குறை, புதிய விவிலியக் குழுக்களிடமிருந்து வருகின்ற சவால்கள், நிதியுடன் சம்பந்தப்பட்ட குற்றச்சாட்டுகள், தனிப்பட்ட தவறான நடத்தைகள் பற்றிய குற்றச்சாட்டுகள், அதிகார அரசியல் மதவிவகாரங்களை நிழலடிப்புச் செய்கின்றது என்ற உணர்வு போன்ற பிரச்சினைகள் சகலதும் திருச்சபையை பின்தொடர்ந்து பலவீனப் படுத்தியிருக்கின்றன. சென்.பீற்றரின் இல்லத்தை ஒழுங்கமைத்து அதை கூடுதலான அளவுக்கு பொருத்தமானதாகவும் மக்களுக்கு மெய்ப்பாடுடையதாகவும் நிறுத்தி வைக்கவேண்டிய ஒரு சவாலை புதிய பாப்பரசர் எதிர்நோக்க வேண்டியிருக்கும். எந்தவொரு பாப்பரசருமே திருச்சபையின் பாரம்பரியப் பண்பு விழுமியங்களில் இருந்து விலகிச் செல்ல முடியாது. ஆனால், காலத்தினதும் மக்களினதும் தேவைகளுக்கு ஏற்றமையக் கூடிய ஒருவழியில் அப்பண்புகளை வியாக்கியானம் செய்வதற்கான ஒரு வாய்ப்பு இருக்கவே செய்கிறது. செயல்விரைவுடன் முன்னோக்கிய திசையில் சிந்திப்பதன் மூலமாக நிறுவனங்கள் தங்களுக்கு இளமைத் துடிப்பைப் பாய்ச்சுகின்றன. காலாவதியானவற்றையும் அவசியமற்றவையையும் நிராகரித்து புதிய சிந்தனைகளை ஏற்றுக்கொள்கிற துணிச்சலான ஒரு நோக்கு இருக்குமானால், மாற்றங்கள் எப்போதுமே தொடர்ச்சியுடன் பிணைக்கப்பட முடியும்.

### முக்கிய சவால்கள்

இருபத்தோராம் நூற்றாண்டுக்கு பொருத்தமானதாக இருப்பதற்கு போராடிக் கொண்டிருக்கும் றோமன் கத்தோலிக்கத் திருச்சபையின் தலைமைத்துவத்தை ஏற்றிருக்கும் பாப்பரசர் பிரான்சிஸ் பெருவாரியான சவால்களை எதிர்நோக்க வேண்டியிருக்கிறது. நேர்மறையானதும் எதிர்மறையானதுமான ஒரு கலப்பான மரபை விட்டுச் சென்றிருக்கிறார் பாப்பரசர் 16 ஆவது பெனடிக்ற்.

அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் கத்தோலிக்கத்துவத்தின் (வீழ்ச்சி -ஆபிரிக்காவில் கத்தோலிக்கத்துவத்தின்) வளர்ச்சி அதிர்ச்சி தருவதாக அமைந்திருக்கிறது. 1978ஆம் ஆண்டு 5 கோடி 50 இலட்சமாக இருந்த ஆபிரிக்கக் கத்தோலிக்க சனத்தொகை 2007 ஆம் ஆண்டில் 14 கோடியே 60 இலட்சமாக உயர்வடைந்தது. ஆனால் அமெரிக்காவில் நிலைமை முற்றிலும் வேறுபட்டதாக இருக்கிறது. அமெரிக்காவில் றோமன் கத்தோலிக்கத் திருச்சபையின் "உறுதியான" உறுப்பினர்கள் என்று தங்களைக் கருதுகிறவர்களின் எண்ணிக்கை 2012ஆம் ஆண்டு இருந்த அளவுக்கு குறைவானதாக முன்னர் ஒருபோதுமே இருந்ததில்லை. ஒரு கிழமையில் குறைந்தபட்சம் ஒரு தடவையாவது தேவாலய ஆராதனைக்கு செல்வதாகக் கூறிய கத்தோலிக்கர்களின் சதவீதம் 1974 ஆம் ஆண்டு 47 சதவீதமாக இருந்தது. 2012 ஆம் ஆண்டு இது 24 சதவீதமாகக் குறைந்துவிட்டது. மேற்கு ஐரோப்பாவிலும் இதே நிலைமைதான். வாராந்த ஆராதனைகளில் கலந்துகொள்பவர்களின் வீதம் மிகவும் கீழ்மட்டத்தில் இருப்பதாக லொஸ் ஏஞ்சலிஸ் ரைம்ஸ் வெளியிட்ட செய்தியொன்றின் மூலம் அறிய முடிகிறது.

பாலியல் ஊழல் விவகாரங்கள் திருச்சபையின் தார்மீக அதிகாரத்தை கடுமையாக மலினப்படுத்தியிருக்கின்றன. இறுதியாகப் பதவிவகித்த பாப்பரசரைக் கூட அவை கறைபடுத்திவிட்டன. 1981ஆம் ஆண்டு பெனடிக்ற் கார்டினல் ரற்சிங்கராக இருந்தார். அப்போது பாலியல் துஷ்பிரயோகங்கள் தொடர்பான முறைப்பாடுகளை விசாரிக்கும் வத்திக்கானின் பிரிவுக்கு அவரே பொறுப்பாக இருந்தார். பிறகு அவர் பாப்பரசராக இருந்த காலகட்டத்திலேயே திருச்சபை கூடுதல் எண்ணிக்கையான பாலியல் ஊழல் விவகாரங்கள் தொடர்பான முறைப்பாடுகளுக்கு முகங்கொடுக்க வேண்டியிருந்தது. ■

## அவரைப்பற்றி

*1.* இங்கிலாந்தின் எலிசபெத் மகாராணி முதலாவது எலிசபெத் என்று அதாவது எலிசபெத் I என்று முதலில் குறிப்பிடப்படவில்லை. 500 வருடங்களுக்குப் பிறகு தற்போதைய மகாராணி முடிசூடிக் கொண்டதையடுத்தே முன்னைய எலிசபெத்தின் பெயருடன் I என்பது பின் சேர்க்கப்பட்டது. அதைப்போன்றே புதிதாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் பாப்பரசரும் எதிர்காலத்தில் இன்னொரு பாப்பரசர் பிரான்சிஸ் என்று பெயரைத் தெரிவு செய்து கொள்ளும்வரை முதலாவது பிரான்சிஸ் என்று, அதாவது பிரான்சிஸ் என்ற பெயருடன் II பின் சேர்க்கை செய்ய முடியாமற் போகும். பிரான்சிஸ் II என்று ஒருவர் எதிர்காலத்தில் வந்த பிறகுதான் இவரை பிரான்சிஸ் I என்று குறிப்பிடமுடியும் என்று வத்திக்கான் பேச்சாளர் வணபிதா. ஃபெடெலிகோ லொம்பார்டி தெரிவித்தார். (1978ஆம் ஆண்டில் 33 நாட்கள் மாத்திரமே பதவியில்



# அறிந்து கொள்ள வேண்டிய 6 விடயங்கள்


இருந்த முதலாவது அருளப்பர் சின்னப்பர் (ஜோன்போல்) மாத்திரமே ஒருபோதுமே பயன்படுத்தாத அந்தப் பெயரைத் தனக்குத் தெரிவு செய்து I யும் பிற்சேர்க்கை செய்யத் தீர்மானித்தார். வேறு எந்த பாப்பரசருமே தன்னை "முதலாவது" என்று அழைக்கவில்லை.

**2.யேசு சபையைச் சேர்ந்தவர் பிரான்சிஸ் பெயரைத் தெரிவு செய்தது முக்கியமானது**

புதிய பாப்பரசர் தான் சார்ந்த யேசு சபையின் முதல் உறுப்பினர்களில் ஒருவரான சென். பிரான்சிஸ் சேவியரை கௌரவித்து தனக்கு பிரான்சிஸ் என்ற பெயரைத் தெரிவு செய்யவில்லை, மாறாக பிரான்சிஸ்கன் ஒழுங்கின் ஸ்தாபகரான 13ஆம் நூற்றாண்டு மறைஞானியான (இத்தாலியின் அசிசி நகரைச் சேர்ந்த) சென். பிரான்சிஸைக் கௌரவிக்கு முகமாகவே அப்பெயரைத் தெரிவு செய்தார். பிரான்சிஸ்கன்களுக்கும் 'யேசு' சபையினருக்கும் நீண்டகால முரண்பாடு நிலவுவதை அடிப்படையாகக் கொண்டு நோக்குகையில் இது முக்கியமான ஒன்றாகும். தனது சமூகத்தின் பாரம்பரிய போட்டியாளர்களின் ஒழுங்கின் ஸ்தாபகரின் பெயரைத் தெரிவுசெய்ததன் மூலம் பாப்பரசர் திருச்சபை பிரிவுகள் மத்தியில் ஐக்கியத்தை ஏற்படுத்துவதில் தனக்கு இருக்கின்ற ஆர்வத்தை வெளிக்காட்டியிருக்கிறார்.

**3. அவருக்கு ஒரு சுவாசப்பை**

பாப்பரசரின் ஒரு சுவாசப்பை அவரது பதின் வயதுகளில், கடுமையான சுவாசத் தொற்று நோய்க்குப் பிறகு அகற்றப்பட்டது. ஒரு சுவாசப்பையுடனேயே வாழ்ந்துவருகிறார். 16ஆவது பெனடிக்ற் நவீன பாப்பரசர் ஆட்சிமுறையின் நெருக்குவாரங்களைத் தாங்கிக் கொள்ளக்கூடிய அளவுக்கு தனது உடல்நிலை ஒத்துவருவதாக இல்லை என்று உணர்ந்ததையடுத்தே பதவி விலகினார். நீண்ட பயணங்கள், இடையறாத நிகழ்வுகளில் பங்கேற்பு ஆகியவற்றால் அவர் சோர்வடையத் தொடங்கினார். பிரா ன்சிஸ் நல்லாரோக்கியத்துடன் இருப்பது போலத் தோன்றுகிறது. ஆனால், அவரின் வயதும் ஒரு சுவாசப் பையின் இயக்கத்தின் விளைவான மட்டுப்பாடுகளும் அவரின் பதவி வேண்டி நிற்கும் சுறுசுறுப்புடன் செயற்பட அனுமதிக்குமா என்ற கேள்வியைக் கிளப்புகின்றன.



**4. இரசாயனவியல், தத்துவவியல், மற்றும் இறையியலில் பட்டங்களைப் பெற்றவர்**


யேசு சபையைச் சேர்ந்தவர்கள் கல்விச் சிறப்புகளுக்குப் பெயரெடுத்தவர்கள். பாப்பரசர் பிரான்சிஸும் விலக்கில்லை. மதப்பணியில் சேருவதற்கு முன்னதாக அவர் இரசாயனத்தில் முதுமாணிப் பட்டம் பெற்றார். யேசு சபை உறுப்பினரான பிறகு தத்துவவியலிலும் இறையியலிலும் பட்டங்களைப் பெற்றார். ஒரு ஆயராக நியமிக்கப்படுவதற்கு முன்னதாக கல்லூரி மட்டத்தில் இவ்விரு பாடங்களையும் இலக்கியத்தையும் உளவியலையும் படிப்பித்தார்.

**5. இரவு விடுதி காவற் பணியாளர்**

திருமறைக் கல்வியைக் கற்பதற்கான செலவுகளைச் சமாளிப்பதற்காக பாப்பரசர் புவனஸ் அயர்ஸ் நகரில் உள்ள இரவு விடுதியொன்றில் காவற் பணியாளராக ஒரு தடவை பணியாற்றினார்.

**6. அவரின் காதலி**

21 வயதுவரை அவர் யேசு சபையில் சேரவில்லை. அநேகமாக 33 வயதாகும் வரை ஒரு மதகுருவாக அவர் திருநிலைப்படுத்தப்படவில்லை. அதனால், ஒரு சாதாரண ஆர்ஜன்டீன இரசாயனவியல் மாணவனின் வாழ்க்கையை அவர் வாழ்ந்ததில் ஒன்றும் ஆச்சரியமில்லை. தான் கூடி நடனமாடுகிற பெண்களில் ஒருத்தியை அவர் காதலித்தார். ■




# மன்மோகன் சிங்கிற்கு தலையிடி தரும் இலங்கையும் இத்தாலியும்

இந்தியாவின் வெளியுறவுகளுடன் சம்பந்தப்பட்டவையாக இருக்கின்ற போதிலும், தென்னிந்தியாவின் இரு விவகாரங்கள் காரணமாக பிரதமர் கலாநிதி மன்மோகன் சிங்கும் காங்கிரஸ் தலைவி சோனியா காந்தியும் கடந்த சில வாரங்களாக நிம்மதியாக நித்திரைக்குச் செல்ல முடியாமல் இருக்கிறார்கள். ஒன்று இலங்கை விவகாரம், மற்றையது இத்தாலியுடனான சர்ச்சை.

இலங்கை விவகாரத்தைப் பொறுத்தவரை, இலங்கைக்கு எதிராக ஜெனீவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்கா கொண்டு வந்த இரண்டாவது தீர்மானம் தொடர்பில் கொழும்புக்கு முற்றுமுழுதாக எதிரான நிலைப்பாட்டை எடுக்க வேண்டுமென்று தமிழகத்தில் இருக்கக்கூடிய அரசியல் சக்திகளினால் பெரும் நெருக்குதல்கள் செய்யப்பட்ட வண்ணமிருந்தன.

அமெரிக்காவின் தீர்மானத்துக்கு இரு திருத்தங்களைக் கொண்டுவந்து இலங்கையில் போர்க்குற்றங்களும் இனப்படுகொலைகளும் இடம்பெற்றதாக குறிப்பிடப்படவேண்டுமென்றும் சுயாதீனமான சர்வதேச விசாரணைக்கு ஏற்பாடு செய்யப்படவேண்டுமென்றும் முன்னாள் தமிழக முதலமைச்சர் தலைமையிலான திராவிட முன்னேற்றக்கழகம் வலியுறுத்தி நின்றது. தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவும் மனித உரிமைகள் பேரவையில் இந்தியா சரித்திர முக்கியத்துவம் வாய்ந்ததும் துணிச்சலானதுமான நிலைப்பாடொன்றை எடுக்க வேண்டுமென்று மன்மோகன் சிங்கிற்கு கடிதம் எழுதினார்.




தமிழகத்தில் மாணவர்களின் போராட்டங்கள் உக்கிரமடைந்த நிலையில் தனது கோரிக்கைகளை மத்திய அரசாங்கம் செவிமடுக்கத் தயாராயிருக்கவில்லை என்பதைக் காரணம் காட்டி மத்திய அமைச்சரவையில் இருந்தும் காங்கிரஸ் தலைமையிலான ஆளும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணியில் இருந்தும் தி.மு.க.விலகிக் கொண்டது.

தி.மு.க.விலகிக் கொண்டாலும் ஐக்

**எம்.பி.வித்தியாதரன்**



கிய முற்போக்கு கூட்டணி அரசாங்கத்துக்கு ஆபத்து ஏதுமில்லை என்று அதன் தலைவர்கள் கூறிக்கொண்டிருக்கிறார்கள். வரவு-செலவுத் திட்ட கூட்டத்தொடர் பாராளுமன்றத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் நிலையில், தி.மு.க. மத்திய அமைச்சரவையில் இருந்து விலகியிருப்பது முக்கியமாகக் கவனிக்கப்படவேண்டியதாகும். இலங்கை விவகாரத்தில் புதுடில்லி நடந்துகொண்டவிதம் தொடர்பில் அதிர்வலைகள் மீண்டும் கிளம்பக்கூடிய சூழ்நிலைகளே காணப்படுகின்றன.

இதேவேளை, இலங்கை நெருக்கடியைப் போலன்றி இத்தாலியுடன் இந்தியாவுக்கு ஏற்பட்டிருக்கும் சர்ச்சை சொந்த உருவாக்கமாகும். கேரளாவைச் சேர்ந்த வலன்ரைன், தமிழகத்தைச் சேர்ந்த அசோக் பிங்கி என்ற இரு மீனவர்களைச் சுட்டுக் கொலை செய்தமைக்காக எம்.வி. என்றிக்கா லெக்ஸி என்ற எண்ணெய்க் கப்பலில் இருந்த இரு இத்தாலியக் கடற்படை வீரர்களை கேரளா கடந்தவருடம் பெப்ரவரியில் கைது செய்ததையடுத்தே இச் சர்ச்சை தொடங்கியது. இவ்விரு கடற்படை வீரர்களும் கேரளாவில் நீதி விசாரணையை எதிர்நோக்குகிறார்கள். இந்த வழக்கை விசாரிப்பதற்கான நியாயாதிக்கம் கேரளாவுக்குக் கிடையாது என்று கூறும் இத்தாலி, சம்பவம் சர்வதேச கடல் எல்லையில் இடம்பெற்றது என்று வாதிடுகிறது. ஆனால் கேரளாவோ இந்தியாவுக்கு நியாயாதிக்கம் உள்ள கடல் எல்லைக்குள்ளேயே இரு மீனவர்களும் சுட்டுக் கொல்லப்பட்டதாகக் கூறுகிறது.

அண்மையில் இத்தாலியில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் அந்த இரு கடற்படைவீரர்களும் வாக்களிப்பதற்காக இத்தாலி செல்வதற்கு உச்ச நீதிமன்றம் அனுமதித்ததையடுத்தே தற்போதைய பிரச்சினை உருவானது. தேர்தலில் வாக்களித்துவிட்டு இருவரும் மீண்டும் வழக்கை எதிர்கொள்வதற்காக இந்தியாவுக்கு திரும்பி வருவார்கள் என்பதற்கு புதுடில்லியில் உள்ள இத்தாலியத் தூதுவர் உத்தரவாதத்தை அளித்ததையடுத்தே நீதிமன்றம் அவர்களை இத்தாலிக்குச் செல்ல அனுமதிக்க இணங்கியது.

இத்தாலியில் தபால்மூலவாக்களிப்பு ஏற்பாடுகள் நடைமுறையில் இருக்கின்ற போதிலும், அத்தகைய ஏற்பாடுகள் அங்கு இல்லை என்று கூறும் சத்தியக் கடதாசியையும் இத்தாலியத் தூதுவர் சமர்ப்பித்திருந்தார். உச்ச நீதிமன்றம் இவ்விரு கடற்படை வீரர்களையும் இத்தாலிக்கு போவதற்கு அனுமதிக்க முன்னதாக கேரள மேல் நீதிமன்றம் நத்தார் பண்டிகைக்காக அவர்கள் தங்கள் நாடு செல்வதற்கு அனுமதித்திருந்தது என்பதும் கவனிக்கத்தக்கது. இதற்கு இத்தாலியத் தூதுவர் சத்தியக்கடதாசியொன்றைக் கொடுத்ததுடன், 6 கோடி ரூபா பிணையும் நின்றார்.

நத்தாருக்குப் பிறகு இத்தாலியர் இருவரும் இந்தியாவுக்குத் திரும்பி வரவில்லை. ஆனால், இரண்டாவது விவகாரத்தில் இத்தாலிய அரசாங்கம் அவ்விருவரையும் திருப்பியனுப்ப மறுத்துவிட்டது. தற்போது இது மிகவும் சிக்கலான சட்ட, இராஜதந்திர மற்றும் அரசியல் சர்ச்சையாக மாறியிருக்கிறது. போபோர்ஸ் ஊழல் விவகாரம் நாட்டை உலுக்கிய பிரதமர் ராஜீவ் காந்தியின் காலத்தில் இருந்தே இத்தாலி என்றால் இந்தியாவில் அது உணர்ச்சிபூர்வமான நாடாக நோக்கப்படுகிறது. அந்த நாட்டைச் சேர்ந்தவரான சோனியா காந்தியை விமர்சனம் செய்வதற்குக் கிடைக்கக் கூடிய எந்த வாய்ப்பையும் அரசியல் கட்சிகள் தவற விடுவதில்லை.

இத்தாலிய கடற்படைவீரர்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினையை எதிர்க்கட்


இந்தியாவுக்கான இத்தாலிய தூதுவர் டனீல் மன்சினி


இத்தாலி திருப்பி அனுப்ப மறுக்கும் இரு கடற்படை வீரர்கள் சல்வடோர் கிரோன், மசிமிலியானோ லட்டோர்

சிகள் பாராளுமன்றத்தில் திரும்பத் திரும்பக் கிளப்பின. ஊடகங்களும் இந்தச் சர்ச்சையை நன்கு பயன்படுத் திக் கொள்கின்றன. இத்தாலிய அர சாங்கத்தையும் அதன் தூதுவரையும் ஊடகங்கள் கடுமையாக கண்டனம் செய்கின்றன. விவகாரம் சூடுபிடித் ததும், வழமையாக மென்மையாகப் பேசும் மன்மோகன்சிங் பாராளுமன் றத்தில் கடுமையான தொனியில் பேசினார். இத்தாலி நடந்துகொள்கிற முறையினால் பாரதூரமான விளைவு கள் ஏற்படுமென்று அவர் எச்சரித் தார். றோமுக்கு கிளம்பவிருந்த அதன் தூதுவரை இத்தாலிக்கு அனுப் புவதில்லை என்று அரசாங்கம் தீர்மா னித்தது. இத்தாலியுடனான உறவு களை தரம் குறைப்பது குறித்து அரசாங்கம் ஆராய்ந்து கொண்டிருக் கிறது. அதேவேளை, இந்தியாவை விட்டு வெளியேறக்கூடாது என்று இத்தாலியத் தூதுவருக்கு உத்தரவிட் டிருக்கும் உச்ச நீதிமன்றம், அவர் இந் தியாவில் இருப்பதை உறுதி செய்து கொள்ளுமாறு அரசாங்கத்தைக் கேட்டிருக்கிறது.

கடற்படைவீரர்களை இத்தாலி திருப்பியனுப்பாவிட்டால், இந்தியா வுக்கு முன்னால் உள்ள தெரிவுகள் எவை என்பதே இப்போது விவாதத் துக்குரிய விடயம். இத் தெரிவுகள் குறித்து சட்ட நிபுணர்கள் மத்தியிலும் இராஜதந்திரிகள் மத்தியிலும் முரண் பட்ட அபிப்பிராயங்கள் நிலவுகின் றன. ஆனால், இத்தாலியும் அதன் இந்தியாவுக்கான தூதுவரும் தவறு இழைத்துவிட்டதை சகலருமே ஒப் புக்கொள்கிறார்கள். தூதுவருக்கு இருக்கின்ற இராஜதந்திர விலக் குரிமை பற்றி சிலர் பேசுகிறார்கள். ஆனால், ஏற்கனவே தூதுவர் நீதிமன் றத்துக்கு உத்தரவாதத்தை அளித்து கீழ்ப்படிந்துவிட்டதால், இந்த விவகா ரத்தில் அவரது இராஜதந்திர விலக் குரிமை செல்லுபடியாகாது என்று ஏனையவர்கள் வாதிட்டனர். இறுதி யில் உச்ச நீதிமன்றம் இத்தாலியத் தூதுவருக்கு விலக்குரிமை இதுவிட யத்தில் இல்லை என்று தீர்ப்புக் கூறி விட்டது.


"ஷொப்பர் கேட்" என்று அழைக் கப்படுகின்ற ஹெலிகொப்டர் கொள் வனவு ஊழல் விவகாரத்தில் சம்பந் தப்பட்ட இத்தாலியக் கம்பனி யொன்று பற்றிய விபரங்களை வழங் குவதற்கு இத்தாலிய நீதிமன்ற மொன்று மறுப்புத் தெரிவித்த சில வாரங்களில் இந்த கடற்படைவீரர்கள் தொடர்பான சர்ச்சை மூண்டிருப்பது கவனிக்கத்தக்கது. இந்திய மக்களும் ஆத்திரமடைந்திருக்கிறார்கள். தேர்த லில் இச்சர்ச்சை பெரும் தாக்கத்தை ஏற்படுத்துமென்பதால் அரசாங்கம் இதை எளிதாக எடுத்துவிடவும் முடியாது.

## இரு பாராளுமன்றங்களுக்கு இடையே தகராறு

சில மாதங்களுக்கு முன்பு காஷ்மீர் எல்லையில் இந்தியப்படைவீரர் ஒரு வரின் தலையைத் துண்டித்த பாகிஸ் தான் இராணுவத்தினர் இன்னொரு இந்திய வீரரின் சடலத்தை உருச் சிதைத்த சம்பவத்துக்குப் பிறகு இந்தி யாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடை யேயான உறவுகள் கடுமையான அளவுக்கு வெறுப்பானவையாக இருக்கின்றன. இதையடுத்து, இந்தி யாவில் பாரதூரமான பயங்கரவாதச் செயல்களில் ஈடுபட்டதாக குற்றஞ் சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக கடு மையான நடவடிக்கைகளை எடுக்க இந்திய அரசாங்கம் நிர்ப்பந்திக்கப் பட்டது. மும்பை பயங்கரவாதத் தாக் குதலின் போது பிடிபட்ட பாகிஸ்தா னியப் பயங்கரவாதி கசாப் முதலில் தூக்கிலிடப்பட்டான். அடுத்து 2002 பாராளுமன்றத்தின் மீதான தாக்குத லில் சம்பந்தப்பட்டதாக குற்றஞ்சாட் டப்பட்ட அப்சல் குரு கடந்த பெப் ரவரி 9 ஆம் திகதி டில்லி திகார் சிறையில் தூக்கிலிடப்பட்டான். கசாப் தூக்கிலிடப்பட்டதை பகிரங்கமாகக் கண்டனம் செய்வதற்கு முன்வராத பாகிஸ்தான், அப்சல் குரு தூக்கிலி டப்பட்டதைக் கண்டனம் செய்யும் தீர்மானமொன்றை பாராளுமன்றத் தில் நிறைவேற்றியதன் மூலமாக காஷ்மீரில் குழம்பிய குட்டையில் மீன் பிடிக்கத் தீர்மானித்தது.

பாகிஸ்தான் பாராளுமன்றத்தின் பதவிக்காலம் பூர்த்தியாவதற்கு இரு தினங்கள் இருந்த வேளையிலேயே இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அப்சல் குரு தூக்கிலிடப்பட்டதைக் கண்டனம் செய்த தீர்மானம் திகார் சிறை வளாகத்திற்குள்ளேயே அடக் கம் செய்யப்பட்ட அவனது சட லத்தை குடும்பத்தினரிடம் கைய ளிக்கவேண்டுமென்றும் கோரிக்கை விடுத்தது. காஷ்மீரிலும் கூட மக்கள், குருவின் சடலம் கையளிக்கப்பட வேண்டுமென்று கோரிநிற்கிறார்கள். காஷ்மீர் தொடர்பான பாகிஸ்தான் பாராளுமன்றக் கமிட்டியில் தலைமை வகிக்கும் ஜம்மியத் உலெமா-ஈ-இஸ் லாம் கட்சியின் தலைவர் மௌலானா ஃபஸ்லுர் ரெஹ்மானே தீர்மானத்தை முன்மொழிந்தார். பாராளுமன்றக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த போது வெளியில் நடத்தப்பட்ட அந் தக் கமிட்டியின் கூட்டத்தையடுத்தே தீர்மானம் சபைக்கு கொண்டுவரப் பட்டது. பாகிஸ்தானின் கட்டுப்பாட் டில் உள்ள காஷ்மீரின் பிரதமரும் கூட்டத்தில் பங்கேற்றிருந்தார். அப் சல் குரு தூக்கிலிடப்பட்டதனால் ஜம்மு-காஷ்மீரில் தோன்றியிருக்கும் நிலைவரம் குறித்து கவலை வெளி யிட்ட தீர்மானத்தில் ஊரடங்கு நீக்கப் பட்டு சகல அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டுமென்றும் இந்தியாவிடம் வலியுறுத்தப்பட்டது. காஷ்மீர் தகராறுக்கு தீர்வொன்றைக் காண்பதற்கான முயற்சிகளில் சர்வ தேச சமூகம் வெறுமனே மௌனம் சாதிக்கும் ஒரு பார்வையாளராகத் தொடர்ந்தும் இருக்கக்கூடாது என் றும் தீர்மானத்தில் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

காஷ்மீர் நெருக்கடி தொடர்பில் ஐக் கிய நாடுகள் பாதுகாப்புச் சபை நிறைவேற்றிய தீர்மானத்தை நடை முறைப்படுத்துவதற்கு நடவடிக்கை கள் எடுக்கப்படவேண்டுமென்றும் பாகிஸ்தான் பாராளுமன்றம் கேட்டுக் கொண்டது. ஜம்மு-காஷ்மீரில் கொலைகளை முடிவுக்குக் கொண்டு வர வேண்டுமென்றும் காஷ்மீர் பள்ளத்தாக்கில் உள்ள நகரங்களில்



அஜ்மீரில் பாகிஸ்தான் பிரதமர்

இருந்து இந்திய இராணுவம் விலக்கிக்கொள்ளப்பட வேண்டுமென்றும் பாதுகாப்புச் சபையின் தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்டது என்பது கவனிக்கத்தக்கது.

சில தினங்கள் கழித்து பாகிஸ்தான் பாராளுமன்றத்தில் தீர்மானத்தை இந்தியாவின் உள்விவகாரங்களில் தலையீடு செய்யும் செயல் என்று இந்திய பாராளுமன்றம் ஏகமனதாக நிராகரித்தது. காஷ்மீர் பிராந்தியம் இந்தியாவின் தவிர்க்க முடியாத பகுதியாக தொடர்ந்தும் இருக்கும் என்றும் இந்திய பாராளுமன்றத் தீர்மானத்தில் மீளவலியுறுத்தியது. பாராளுமன்றத்தின் இரு சபைகளுமே பாகிஸ்தான் தீர்மானத்தை நிராகரித்தன. பயங்கரவாதத்துக்கு அனுசரணையாகச் செயற்படுவதாக பாகிஸ்தானை இந்திய எம்.பி.க்கள் குற்றஞ்சாட்டினர். பயங்கரவாதத்தினால் பயன்படுத்தப்படுவதற்கு தனது பிராந்தியத்தை ஒருபோதும் அனுமதிக்கப்போவதில்லை என்று பாகிஸ்தான் அரசாங்கம் அளித்திருந்த உறுதிமொழியை நினைவுபடுத்திய இந்தியப் பாராளுமன்றத் தீர்மானம் அந்த உறுதிமொழியை நிறைவேற்றுவதன் மூலமாக மாத்திரமே சமாதான ரீதியான உறவுகளைப் பேணுவதற்கு வாய்ப்பை ஏற்படுத்த முடியும் என்று இஸ்லாமாபாத்திற்கு சுட்டிக்காட்டியது.

பாகிஸ்தான் பாராளுமன்றத்தின் தீர்மானத்துக்கு சில தினங்கள் கழித்து ஸ்ரீநகரில் உள்ள மத்திய றிசர்வ் பொலிஸ் படையின் முகாம் மீது பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் இரு ஜவான்கள் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர். இச்சம்பவத்தில் இரு பாகிஸ்தானிய தீவிரவாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர். அவர்களிடமிருந்து மீட்கப்பட்ட ஆவணங்கள் அவர்கள் பாகிஸ்தானில் இருந்து வந்த லஷ்கர்-ஈ-தொய்பா இயக்கத்தைச் சேர்ந்த தீவிரவாதிகள் என்பதை நிரூபித்தன. தீவிரவாதிகளில் இன்னொருவர் கைது செய்யப்பட்டார். தாங்கள் பாகிஸ்தானைச் சேர்ந்தவர்கள் என்றும் கடந்த ஜனவரியில் எல்லையைக் கடந்து வந்ததாகவும் ஒப்புக்கொண்டனர். சில உள்ளூர் வாசிகளின் உதவியுடனேயே தாக்குதல் திட்டமிடப்பட்டது.

இத்தகைய பின்புலத்திலே பாகிஸ்தானின் பிரதமர் ராஜா பெர்வேஸ் அஷ்ரப் தனிப்பட்ட விஜயமொன்றை மேற்கொண்டு இந்தியாவுக்கு வந்தார். அவர் நேரடியாக ஜெய்ப்பூருக்குச் சென்றார். இந்திய வெளியுறவு அமைச்சர் சல்மான் குர்ஷித் மதிய போசன விருந்தளித்தார். எதிர்பார்க்கப்பட்டதைப் போன்றே இருதரப்புக்கும் இடையே உத்தியோகபூர்வமான பேச்சுவார்த்தை எதுவுமே நடைபெறவில்லை. அஜ்மீரில் உள்ள சூபி மத வணக்கத்தலத்துக்கு பிரதமர் அஷ்ரப் சென்ற போது வெளியே ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. வணக்கத்தலத்தின் பிரதம மதகுரு பாகிஸ்தான் பிரதமர் பிரார்த்தனை செய்வதற்கு உதவ மறுத்துவிட்டார். பாகிஸ்தான் பாதுகாப்புக் குழுவினருடன் ஆலோசனை நடத்தி கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. குறைந்தது 2000 பொலிஸார் வணக்கத்தலப்பகுதிக்கு உள்ளேயும் வெளியேயும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டார்கள். பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்பார்வை செய்ய 10 மாஜிஸ்திரேட்டுகள் நியமிக்கப்பட்டிருந்தார்கள்.



# மூன்றாவது வருடத்தில் பிரவேசிக்கும் சிரியப் புரட்சி

## அசாத்தின் கரங்களை பலப்படுத்தியிருப்பதுடன், கிளர்ச்சியாளர்களை தீவிரவாதத்தை நோக்கித் தள்ளியுமிருக்கும் சர்வதேச முயற்சிகள்

சிரியப் புரட்சி அதன் மூன்றாவது வருடத்தில் பிரவேசித்துக் கொண்டிருக்கிறது. சுமார் 70 ஆயிரம் பேர் கொல்லப்பட்டுவிட்டதாக கணிப்பிடப்படுகிறது. இலட்சக்கணக்கானவர்கள் காயமடைந்து விட்டார்கள். பத்து இலட்சத்துக்கும் அதிகமானவர்கள் அகதிகளாயிருக்கிறார்கள். ஒரு சந்ததி வன்முறைகளுக்குத் தன்னை இழந்துவிட்டது. ஆனால், படுமோசமான நிலைவரம் இனிமேல்தான் வரப்போகிறது. அசாத் ஆட்சி விரைவில் வீழ்ச்சி காணாவிட்டால், மோதல்கள் வளைகுடாவில் பாஸ்ரா ஆற்றங்கரைகளில் இருந்து மத்திய தரைக் கடலில் பெய்ரூத் கரையோரம் வரை, பிராந்தியம் முழுவதுக்குமே பரவும்.

சிரியக் கிளர்ச்சியாளர்களுக்கு ஆயுதங்களை வழங்குவதற்கான உத்தேசத்தை வெளிக்காட்டியிருக்கும் பிரிட்டனும் பிரான்ஸும் ஐரோப்பிய ஆயுதத்தடை விதிப்பையும் அகற்றுவதற்கு விரும்புகின்றன. ஆனால், இது அசாத் ஆட்சியைத் தூக்கியெறிவதற்கான தெளிவானதொரு தந்திரோபாயத்தின் அங்கமாக இல்லாத பட்சத்தில் போதுமானதல்ல என்று சிரிய எதிரணியில் உள்ள பலர் நம்புகிறார்கள்.

அமெரிக்கா தலைமையிலான மேற்குலக அணுகுமுறை இதுவரையில் கிளர்ச்சியாளர்களுக்கும் அரசாங்கத்துக்கும் இடையே ஒரு இக்கட்டு நிலையை ஏற்படுத்துவதை மாத்திரமே சாதித்திருக்கிறது. அரசாங்கம் அண்மையில் ஸ்குட் ஏவுகணைகளைப் பயன்படுத்தி மேற்கொண்ட தாக்குதல்களும் ரஷ்யாவிடமிருந்தும் ஈரானிடமிருந்தும் தொடர்ச்சியாகக் கிடைக்கப்பெறுகின்ற ஆயுத விநியோகங்களும் கிளர்ச்சியாளர்களுக்கும் அரசாங்கத்துக்கும் இடையேயான சமநிலையை அரசாங்கத்துக்கு அனுகூலமான முறையில் மாற்றியிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. இந்தப் பின்னணியில் நோக்குகையில் பிரிட்டனினதும் பிரான்ஸினதும் பிந்திய நகர்வு வெறுமனே மோதலை மீள் சமநிலைப்படுத்துவதற்கான ஒரு முயற்சியாகவே கருதவேண்டியிருக்கிறது. சமாதான இணக்கத் தீர்வொன்றைக் காண்பதற்கு இரு தரப்பினரையும் நிர்ப்பந்திப்பதற்கு முட்டுக்கட்டு நிலையை பயன்படுத்தும் நோக்கிலான மேற்குலகின் பரந்த தந்திரோபாயத்தின் அங்கமாகவும் இதைப் பார்க்க வேண்டியிருக்கிறது. இது வன்முறையை முடிவுக்குக் கொண்டு வரப்போவ

மத்திய கிழக்கு நெருக்கடி






தில்லை. விரைவில் இணக்கத் தீர்வொன்றையும் கொண்டு வரப்போவதில்லை. உண்மையில், சிரியப் புரட்சியின் மூன்றாவது வருடம் நெருக்கடியில் இப்போது ஒரு நிலைமாற்றத்தைக் காணப்போவது பெரும்பாலும் நிச்சயமானதாகும். இது பிராந்தியத்தின் ஸ்திரத்தன்மைக்கு மிகப்பெரிய சவாலைத் தோற்றுவிக்கக்கூடிய எல்லைகளைக் கடந்த ஒரு மோதலாக மாறப்போகிறது. தற்போதைய எல்லைகள் முதலாவது உலகமகா யுத்தத்திற்கு பிறகு வரையப்பட்டவை.

நெருக்கடி முதலில் லெபனானுக்குள் செல்லக்கூடும். சிரியாவுடன் எல்லையைக் கொண்ட லெபனானின் உள்நாட்டு அரசியல் தரப்புகள் ஏற்கனவே நெருக்கடியில் சம்பந்தப்பட்டிருக்கின்றன. அசாத் ஆட்சிக்கு ஹெஸ்புல்லா இயக்கம் அரசியல் ரீதியாகவும் வேறு வழிகளிலும் ஆதரவளித்தபோது, ஏனைய லெபனான்



வடா கான்ஃபார்

கட்சிகள் புரட்சிவாதிகளுக்கு ஆதரவை வழங்கின. இருவருட கால இழுபறிகளுக்குப் பிறகு இந்த நிகழ்வுப் போக்குகள் லெபனானில் பதற்றமும் துருவமயமாதலும் அதிகரிக்கவே வழிவகுத்தன.

சிரிய நெருக்கடி ஈராக்கிற்குள்ளும் விரிவடைவதே மிகவும் படுமோசமான விளைவுகளைக் கொண்டுவருவதாக இருக்கும். இதற்கான அறிகுறிகளை நாம் காணத் தொடங்கிவிட்டோம். அசாத் ஆட்சியை ஆதரிக்கும் நூரி அல்-மாலிக்கியின் ஷியா ஆட்சிக்கும் சுன்னிகளின் ஆதிக்கத்திலுள்ள மாகாணங்கள் மற்றும் ஈராக்கிய குர்திஷ் பிராந்தியத்துக்கும் இடையிலான அரசியல் மோதல்களும் இந்த அறிகுறிகளில் அடங்கும். எல்லாவற்றுக்கும் மேலாக, சுன்னி பகுதிகளில் மூன்றுமாதங்களாக தொடருகின்ற ஆர்ப்பாட்டங்கள் முடிவுக்குவரக்கூடிய அறிகுறியைக் காண முடியவில்லை. அவர்களின் கோரிக்கைகளுக்கு மாலிக்கி பதிலளிப்பதாகவும் இல்லை. ஒரு திரிசங்கு நிலை. இது இன்னொரு சுற்று படுமோசமான வன்முறைக்கு வழிவகுத்திருக்கிறது. இந்த வன்முறைக்கு சிரிய நெருக்கடி இயல்பான ஒரு நீட்சியாகும்.


பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

அமெரிக்க ஆக்கிரமிப்புக்குப் பிறகு மூண்ட உள்நாட்டுப் போர் ஏற்படுத்திய காயங்கள் இன்னமும் குணமாகாமல் இருக்கும் ஈராக், மதப்பிரிவுணர்வு மோதல்களை முன்னென்றுமில்லாத மட்டங்களுக்குக் கொண்டு செல்லும். ஈராக் தொடர்பான சண்டை அதன் எண்ணெய் வளங்களுக்கானது மாத்திரமல்ல, மத்திய கிழக்கின் உண்மையான ஆன்மாவுக்குமானது என்பதால் அது மோதலுக்குள் ஈரான், துருக்கி, மற்றும் வளைகுடா அரபுநாடுகளையும் இழுக்கும். அங்கு நடைபெறக் கூடியவையே பிராந்திய அதிகாரச் சமநிலையைத் தீர்மானிக்கும் என்பதுடன், உலக வரை படத்தையும் மீளவரையும்.

இத்தகைய நிகழ்வுப் போக்கு தவிர்க்கப்படக் கூடியதா? அடுத்து வரும் மாதங்களில் பிராந்திய மற்றும் சர்வதேச சக்திகள் எவ்வாறு செயற்படுகின்றன என்பதிலேயே அது தங்கியிருக்கிறது. அசாத் ஆட்சியை கிளர்ச்சியாளர்கள் தூக்கியெறிவதை அனுமதிக்கக்கூடியதாக அமெரிக்கா அதன் முன்னுரிமைக்குரிய விவகாரங்களை மீளத்திசை திருப்ப வேண்டும். நேரடி இராணுவத் தலையீடு வரவேற்கப்படக் கூடியதல்ல என்றபோதிலும், புரட்சிவாதிகளுக்கு ஆயுதங்கள் விநியோகிக்கப்படுவதை மேற்குலகம் தடைசெய்யக்கூடாது.

அத்தகைய தடையை பல்வேறு வழிகளில் அமெரிக்கா நியாயப்படுத்தி வந்திருக்கிறது, அசாத்திற்கு பிறகு குழப்பநிலை ஏற்படுமென்ற அச்சம், இஸ்லாமியவாதிகள் அதிகாரத்திற்கு வந்துவிடக்கூடிய சாத்தியம், இஸ்ரேல் சிரியாவின் ஒரு அயல் நாடு; ஜிஹாதிகளின் கைகளுக்கு ஆயுதங்கள் போய்விடுமென்ற அச்சம் என்பவையே அமெரிக்கா முன்வைத்து வந்த காரணங்கள். ஆனால், அத்தகைய காரணங்களின் விளைவான தயக்கம் அமெரிக்காவின் நோக்கங்களுக்கு பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தியிருக்கின்றது. பயங்கரவாதம் பற்றிய அச்சம் காரணமாக, அல்-கயெடாவின் அல்லது வேறு எந்தவொரு ஜிஹாதிகள் குழுவின் செல்வாக்கில் இருந்து புரட்சி முற்றுமுழுதாக அகற்றப்பட்டிருந்த ஒரு நேரத்தில் சிரிய ஆட்சியை கவிழ்ப்பதற்கு அமெரிக்கா தவறிவிட்டது. அமெரிக்கா எத்தகையதொரு நிலை வந்துவிடக் கூடாது என்று மிகவும் கூடுதலாகப் பயந்து கொண்டிருந்ததோ, அந்த நிலைக்கே புரட்சியைக் கொண்டுவந்துவிட்டது அமெரிக்காவின் தயக்கம்.

பாதுகாப்பு தொடர்பான சிரிய ஆட்சியின் உணர்வு குடிமக்களுக்கு எதிரான வன்முறைகள் தீவிரமடைய வழிவகுத்தது. இதற்கான பிரதிபலிப்பாக, (மிதவாதப் போக்குடைய சுதந்திர சிரிய இராணுவத்துக்கு ஆயுதங்களை விநியோகிப்பதற்கு சர்வதேச சமூகம் தயக்கம் காட்டிய நிலையில்) ஜிஹாத் சக்திகள் அதிகரித்துவிட்டன. பயங்கரவாதக் குழுக்களின் பட்டியலில் அமெரிக்கா அண்மையில் சேர்த்துக்கொண்ட அல்-நுஸ்ரா முன்னணி போன்ற குழுக்கள் தோன்றுகிற ஒரு நிலைக்கு நாம் இப்போது முகங்கொடுக்க வேண்டியிருக்கிறது. இது ஒரு பெருந்தவறு. ஏனென்றால், ஆட்சியைத் தூக்கியெறிவதற்கு முன்னுரிமை கொடுப்பதிலிருந்து சர்வதேச சமூகத்தினதும் பிராந்திய வல்லாதிக்க நாடுகளினதும் கவனத்தை அது திசைதிருப்பிவிட்டது. ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு முன்னுரிமை கொடுப்பதற்கு பதிலாக ஜிஹாதிகளை எதிர்த்துப் போரிடுவதில் கவனம் குவிக்கப்பட்டுவிட்டது. அதேவேளை, பயங்கரவாத இயக்கம் என்று அமெரிக்கா வகைப்படுத்தியதால் அல்-நுஸ்ரா முன்னணி பயனடைந்திருப்பதையே காணக்கூடியதாக இருக்கிறது. அந்த முன்னணி பலம் பொருந்தியதாக வளர்ந்து விட்டது.

சிரிய நெருக்கடியைக் கையாளுவதற்கு தெளிவானதொரு தந்திரோபாயம் இல்லாதமையினால் பிராந்தியத்தின் நாடுகளுக்கு முரண்நிலையான செய்திகளே கொடுக்கப்பட்டிருக்கின்றன. சில நாடுகள் இஸ்லாமிய ஆபத்துக்குப் பயந்து சிறிய மதச்சார்பற்ற குழுக்களுக்கு ஆயுதங்களை வழங்கியிருக்கின்றன. மிகவும் ஆற்றல் வாய்ந்த குழுக்களாக களரியில் இருப்பவை பிரதான போக்கு இஸ்லாமிய இயக்கங்களே. எந்தக் குழுக்களுக்கு ஆயுதங்கள் வழங்கப்படவேண்டும், எந்தக் குழுக்களைக் கட்டுப்படுத்த வேண்டும் என்பது பற்றி முரண்நிலையான அபிப்பிராயங்கள் கிளம்பியிருக்கின்றன.

இதுவரையில் சர்வதேச சமூகத்தின் முயற்சிகள் அசாத்தின் கரங்களைப் பலப்படுத்தியதுடன், குழப்பத்தை விதைத்திருக்கின்றன. மேலும் சொல்வதானால், சர்வதேச சமூகத்தின் முயற்சிகள் புரட்சிவாதிகளைத் தீவிரவாதத்தை நோக்கித் தள்ளியிருக்கின்றன! ■

---



*(31ஆம் பக்கத்தொடர்ச்சி...)*

நீதியுடன் கலப்பது, இந்த இரண்டிலும் அவர்கள் எந்த முரண்பாட்டையும் காணவில்லை.

இதுதான் உண்மையில் ஷாவேஸின் மரபு. வெனிசூலாவின் வரலாற்றிலேயே முதற்தடவையாக வறியவர்கள் மீது அவர் கவனத்தைக் குவித்தார். சிறியதொரு நாட்டை உலக வரைபடத்தில் முக்கியமானதாக்கினார். அமெரிக்காவின் வல்லமையுடன் சவால்விட்டு எதிர்த்து நின்றார். தங்கள் பிராந்தியம் இனிமேலும் அமெரிக்காவின் கோடிப்புறமாக இருக்காது என்பதை உறுதிசெய்வதற்காக அவர் பாடுபட்டுழைத்தார். இந்தத் தராதரங்களின் அடிப்படையில் நோக்குகையில் ஷாவேஸ் ஒரு உன்னதமான வெற்றிகரமான தலைவர்.

லத்தீன் அமெரிக்கா இனிமேலும் உலக அரசியலில் ஒரு பின்புத்தியல்ல! ■

***ரைம்ஸ் ஒஃப் இந்தியா***

## நான் செய்ய நினைப்பது எல்லாம் நீ செய்ய வேண்டும்



வைத்தியக் கலாநிதி
எம்.கே. முருகானந்தன்




# உயிரியல் கணனி சாத்தியமாகும்

ஒன்றுடன் ஒன்று நேரடியாகத் தொடர்பில்லா ஒரு மூளையின் உணர்வை மற்றொரு மூளையால் புரிந்து கொண்டு அதற்கேற்ப செயற்பட முடியுமா? அதுவும் பல மைல்கள் தொலைவில் பிரிந்து கிடக்கும் மூளைகள்.

'எங்கெங்கோ உள்ள மனிதர்கள் ஒரே உணர்வுடன், ஒரே நேரத்தில் அடக்குமுறை அரசைக் கவிழ்க்க கெய்ரோ தஹ்ரிர் சதுக்கத்தில் ஒன்று கூடினார்களே' என்கிறீர்களா?..

அவர்கள் ஒருவருடன் மற்றவர் நேரடித் தொடர்பில்லாத மனிதர்கள் என்ற போதும் மின்னியல் இணையத் தொடர்பு சாதனங்களின் குறுந் தகவல்களால் இணைந்தவர்கள்.

ஸ்கைப், பேஸ்புக், ருவிட்டர் போன்ற சமூக இணையத்தளங்கள் ஊடான இணைவு. அவை செய்திப் பரிமாற்றங்கள்.

உணர்வுகளின் பரிமாற்றம், செய்திகளது அல்ல.

கணனியை நீங்கள் பார்க்காமல், அது எவ்வாறு செயற்படுகிறது என்பதே தெரியாமல், கீபோட்டைத் தட்டாமல், அல்லது மொபைலின் டச் ஸ்கிறீன் தொடாமல் உங்கள் உணர்வுகளையும் எண்ணங்களையும் உலகின் மறுபகுதியில் உள்ள ஒருவருடன் பகிர்ந்து கொள்வது சாத்தியமா?


டெலிபதி, மந்திர வித்தைகள், கண்கட்டு வித்தைகள் அல்ல. விஞ்ஞான பூர்வமாக முடியுமா? முடிந்தாலும் மற்றவர்களுக்கு நிரூபித்துக் காட்டக் கூடியதா?

முடியும். அத்தகைய உயிரியல் கணனி சாத்தியமாவதற்கான காலம் வெகு தொலைவில் இல்லை என Duke University in Durham, North Carolina சார்ந்த ஆய்வாளர்கள் சொல்கிறார்கள்.

பிரேஸிலில் உள்ள ஒரு எலியினது மூளையில் ஒரு மின்னியல் கணிப்பொறியை வைத்திருக்கிறார்கள். அந்த எலிக்கு ஒரு பயிற்சி கொடுக்கப்பட்டிருக்கிறது. மேலேயுள்ள லைட் எரியும்போது அது தன்னுடைய கூட்டினுள் இருக்கும் ஒரு Lever யை அழுத்த வேண்டும். அவ்வாறு அழுத்தினால் அதற்கு ஒரு வெகுமதி கிடைக்கும். அதாவது குடிப்பதற்கு நீர் கிடைக்கும்.

அவ்வாறு செய்யும்போது அதனுடைய மூளையின் செயலூக்கத்திற்கான கோர்டெஸ் பகுதியில் ஏற்படும் மாற்றங்களை மின் சமிக்ஞைகளாக மாற்றி பல்லாயிரம் மைல் தொலைவில் உள்ள மற்றொரு எலியின் மூளைக்குள் பதிக்கப்பட்டிருக்கும் அதே மாதிரியான மின்னியல் கணிப்பொறிக்கு அனுப்புகின்றன.

அந்த எலியும் இதே மாதிரியான கூட்டில் லைட், lever போன்றவற்றுடன் இருக்கிறது. லைட் எரிந்தால் lever அழுத்த வேண்டும், வெகுமதி



கிடைக்கும் என்பதற்கான பயிற்சியும் கொடுக்கப்பட்டிருக்கிறது.

ஆனால் அதனுடைய கூட்டினுள் லைட் எரியவில்லை. ஆனால் இங்குள்ள எலி லைட் எரிந்தவுடன் lever யை அழுத்தும் போது அதன் மூளையில் ஏற்படும் மாற்றங்களின் சமிக்ஞை அங்குள்ள எலிக்குக் கிடைத்ததும் அதுவும் செயற்பட ஆரம்பித்தது. லீவரை அழுத்தியது.

Brain to brain interfaces எனப்படும் இந்த மின்னியல் சாதனம் ஊடாக ஒரு எலியின் எண்ணம் வெகு தொலைவில் உள்ள மற்றொரு எலிக்குக் கடத்தப்பட்டமையானது மிகவும் நுணுக்கமான அறிவியல் பாய்ச்சல் எனக் கொள்ளலாம். இங்கு பரிமாற்றப்பட்டவை எண்ணங்களும் உணர்வுகளுமாகும். SMS, e-mail தகவல்கள் அல்ல என்பது குறிப்பிடத்தக்கது.

வாய் மொழியில்லை, உடல் மொழி இல்லை, கண்களால் சாடை காட்டுதல் கூடத் தேவைப்பட இல்லை, ஒன்றின் அருகில் மற்றொன்று உடல் ரீதியாக இருக்கவும் இல்லை. உண்மையில் ஒரு எலிக்கு இவ்வாறான மற்றொரு எலி இருப்பதாகவும் தெரியாது. இருந்தபோதும் இந்த எலியின் எண்ணங்கள் மற்றத்திற்கு கடத்தப்பட்டது மட்டுமல்ல, கிடைத்த மின்னியல் தகவலுக்கு ஏற்ப உடல் ரீதியாகச் செயற்படவும் செய்தது. ஆனால் 100 சதவிகிதம் அல்ல, 70 சதவிகிதம் மட்டுமே.

மற்றொரு விதத்தில் சிந்தித்துப் பாருங்கள். நீங்கள் தனிமையில் வெளிநாடு ஒன்றில் இருக்கிறீர்கள். மனைவி சொந்த ஊரில் இருக்கிறார். உங்களுக்கு திடீரென மனைவியின் நினைவு வருகிறது. அவள் மீதான காதல் உணர்வுகள் கிளர்ந்தெழுகின்றன. அந்தக் காதலுக்குள் காமமும் கலந்திருக்கிறது. என்ன செய்வதென்று புரியவில்லை. அருகிலிருந்த தலையணையை எடுத்து முத்தமாரி பொழிகிறீர்கள்.

அவ்வாறான brain-to-brain interfaces ஒன்று உங்கள் இருவருக்கும் இருந்தால் எவ்வளவு சந்தோசம். உங்கள் மனைவியும் உங்கள் நினைவுகள் கிளர்ந்தெழ அங்குள்ள தலையணையைப் பதம் பார்ப்பாள்.

ஒரு வழிப்பாதை அல்ல,

ஆனால் இந்த எண்ணப் பரிமாற்றமானது ஒருதலைக் காதல் போல ஒரு வழிப்பாதை அல்ல என்பதை அதே செயற்பாட்டில் செய்யப்பட்ட சிறிய மாற்றம் ஒன்றின் மூலம் புரிந்து கொள்ளலாம்.

இந்த எலியின் செய்தியைப் புரிந்து மற்ற எலி லீவரை அழுத்தவில்லை எனின் அந்த எலிக்கு குடிப்பதற்கு பானம் வெகுமானமாகக் கிடைக்காது. அதே நேரத்தில் இதற்கும் கிடைக்காது.

அவ்வாறு பானம் கிடைக்கவில்லை எனில் இந்த எலியானது மற்ற எலிக்கு உதவுமுகமாகத் தனது செயற்பாட்டு முறையை சற்று இலகுவாக்கி லீவரை அழுத்தி லைட்டை எரியப்பண்ணுகிறது. மற்ற எலியும் மின்னியல் சமிக்ஞை கிடைத்ததும், முந்திய எலியைப் பின்பற்றிச் செய்து பானத்தைப் பெறும்.

அதேபோல அவள் உணர்வுகள் உங்களுக்குள் புக உங்கள் உணர்வுகள் அவளுக்குள் புக செம கொண்டாட்டம்தான்.

இரண்டு எலிகளுக்கு இடையே செய்யப்பட்ட இந்த உணர்வுப் பரிமாற்றத்தை விஸ்தரிக்க முடியுமா என்பது பற்றி விஞ்ஞானிகள் ஆய்வு செய்கிறார்கள். இரண்டிற்குப் பதிலாக பல மிருகங்களின் எண்ணங்களை இத்தகைய முறையில் பரிமாற வைத்து மேலும் சிக்கலான வேலைகளைச் செய்விக்க முயல்கிறார்கள்.

'நான் பேச நினைப்பதெல்லாம் நீ பேச வேண்டும்..' என்ற கண்ணதாசனின் அருமையான பாடல் நினைவிற்கு வருகிறது. அது உண்மையான காதல் பற்றியது. ஒருவர் உணர்வை மற்றவர் புரிந்து கொள்வது ஒருமித்த உணர்வுள்ள காதலர்களிடையே சாத்தியம்தான்.

'சொல்லென்றும் மொழியென்றும் பொருளென்றும் இல்லை..' என்று அதில் மற்றொரு வரி வருகிறது. எவ்வளவு தூரதிருஷ்டியுள்ள வார்த்தைகள். உலகின் இரு அந்தங்களின் உள்ள இரு எலிகளால் சொல்லின்றி மொழி இன்றி சைகையின்றி உணர்வுகளைப் பகிர்ந்து கொண்டுள்ளன.

ஆனால் இவை காதலால் ஒருமித்த சிந்தனை கொண்ட மனங்கள் அல்ல. விஞ்ஞான தொழில் நுட்பத்தால் இணைக்கப்பட்ட மனங்களாகும்.

மூளைகளின் நெற்இன்ரநெற் போல மூளைகளின் நெற் ஒன்றை உருவாக்கும் சாத்தியம் இருப்பதாகக் கருதுகிறார்கள். இப்பொழுது நாம் எழுத்துகளாலும் சித்திரங்களாலும் ஒலிகளாலும் தகவல்களைப் பரிமாறுகிறோம். இவர்கள் சிந்திப்பது அதற்கு மேலானது. மனதில் எழும் உணர்வுகளையும் சிந்தனைகளையும் ஒரு மூளையிலிருந்து மற்ற மூளைக்கு பரிமாறுவதாகும். அதற்கும் அப்பால் பல மூளைகளின் ஒன்றிணைந்த சிந்தனைப் பரிமாற்றமாக்க முடியும் என நம்புகிறார்கள்.

இது எலிகளது மூளைகள் பற்றியது. ஆனால் எங்கள் கற்பனைகளை சிறகடித்துப் பறக்கவிட்டு அதில் எதிர்கால விஞ்ஞானச் சாத்தியங்களையும் இணைத்து நோக்கினால் கற்பனைக்கும் எட்டாதவை கைகூடலாம்.

எண்ணங்களை கணனிக்கு இதைச் செய்வதற்கு முன்னர் இதே ஆய்வாளர்கள் மற்றொரு ஆய்வைச் செய்திருந்தார்கள். அது மனிதனின் எண்ணங்களை மற்றொரு மனிதனுக்கு அனுப்புவதற்குப் பதிலாக மற்றொரு கணனிக்கு அல்லது இயந்திரத்திற்கு அனுப்பி அதை இயங்க வைப்பதாகும். அது நாளாந்தப் பயன்பாடுள்ள பொறிமுறையாகும்.

பக்க வாதத்தினால் செயற்பட முடியாத ஒருவர் ரோபோக் கரங்களுக்கு தனது எண்ணங்களைப் பரிமாறுவதன் மூலம் தனக்குத் தேவையான பணிகளைச் செய்விப்பதாகும். கை கால்களை அசைக்க முடியாமலும் பேச முடியாமலும் கிடக்கும் அவர், தனது தலையணையைச் செளகர்யமாகப் போட்டுப் படுக்க விரும்புகிறார் எனில் அவரால் முடியாது. மற்றவர்களைக் கூப்பிட பேச்சும் அற்றுப் போய்விட்டது. அவரது மனதின் விருப்பமானது ஒரு ரோபோக் கரத்திற்கு இலத்திரனியல் தகவலாக மாற்றப்பட்டு அனுப்பப்படுவதன் மூலம் அதை இயங்க வைத்தார்கள்.

## மூளைகளின் நெற்றின் பயன்பாடு

அவ்வாறான மூளைகளின் நெற்றால் (network of animal brains) என்ன நன்மை கிடைக்கும். தனித்த ஒரு மூளையினால் சிந்தித்துச் செயலாற்ற முடியாததை உலகின் பல்வேறு திசைகளிலும் உள்ள மூளைகளின் ஒன்றிணைவினால் தீர்க்கக் கூடிய சாத்தியம் உண்டு. மனித குலத்தின் முன்னேற்றத்திற்கான பல்வேறு விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் சுளுவாகச் சாத்தியமாகலாம்.

அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு என்பார்கள். வெறும் செடி கொடி போன்றது அல்ல மனித மூளை. நுணுக்கமான சிந்தனை ஆற்றல் பெற்றது. அவை ஒன்றிணையும் போது மனித குலத்தின் கற்பனைக்கும் அப்பாலான சாத்தியங்கள் நிகழலாம்.

ஆனால் இதில் ஒரு பிரச்சினை ஏற்படக்கூடும் என்பதை மறுப்பதற்கில்லை. அது ஒருவேளை அதீத கற்பனையாகவும் இருக்கலாம்.

இவ்வாறு பல மூளைகளை இணைப்பதற்கு ஒரு தலைவன் தேவையே. அவன் எத்தகையவனாக இருக்கப் போகிறான். மனித மனங்களை ஒருவன் தனது இஸ்டப்படி ஒன்றிணைத்து இயக்குவதற்கான வாய்ப்புக் கிடைத்தால் அவனை நல்ல பணிகளிலும் ஈடுபடுத்த முடியும். கெட்டவற்றையும் செய்விக்க முடியும். ஒரு சர்வாதிகாரியின் கையில் இப்படியான ஒரு வாய்ப்புக் கிடைத்தால் என்னவாகும். அந்த நாடு மாத்திரமல்ல மனித குலமே மீள முடியாத சிக்கலில் மாட்டிக் கொள்ளலாம்.

Star Trek திரைப்படம் ஞாபகத்திற்கு வருகிறதா? இணையத்தினூடாக இணைக்கப்பட்ட மேம்பட்ட உயிரினங்கள், தங்களது இணைந்த செயற்பாட்டின் ஊடாக ஏனைய உயிரினங்களுக்கு அச்சுறுத்தலாக இருக்கின்றன. அவற்றை அழிக்காமல் தங்களுடன் இணைத்துக் கொள்கின்றன. ஹிட்லர் போல யூதர்களை அழிக்கவில்லை, தமது இனத்துக்குரிய பண்புகளை அவர்களில் விதைத்து அவர்களையும் தம்மைப்போல ஆக்கின.

இன்றைய பேரினவாதிகள், மற்றும் அடிப்படைவாதிகள் கையில் இத்தகைய அறிவியல் செயன்முறைகள் சிக்கினால் ஏனைய இனங்களது அடையாளங்கள் அழிந்து போகலாம்.

ஆனால் எலிகளின் எண்ணங்கள் எவ்வாறு குறியீடுகளாக மூளையில் மாற்றமடைகின்றன. அது எவ்வாறு மற்றொரு எலியின் மூளைக்குக் கடத்தப்படுகின்றன போன்ற விடயங்கள் இன்னமும் விஞ்ஞானிகளுக்குத் தெளிவாகவில்லை.

எனவே அவர்கள் கடக்க வேண்டிய தடங்கல்கள் பல. விரைவில் மனிதனுக்குள் இது சாத்தியமாகாது என்பது நிம்மதி அளிக்கின்றது. ■

‘ஆசையும் என் நேசமும் இரத்தபாசத்தினால் ஏங்குவதைப் பாராயடா?’



# ராஜசுலோச்சனா

## (1935 - 2013)

தமிழ்த்திரைப்படச் சூழலில் கறுப்பு வெள்ளைக்காலத்து அரசிளங் குமாரி ராஜசுலோச்சனா இவர் எம்.ஜி.ஆர்., சிவாஜி இருவருக்குமே ஜோடியாக நடித்துவந்தவர். தொடர்ந்து பல்வேறு படங்களில் நடித்து புகழ்பெற்றவர். தனது 77 ஆவது வயதில் (05.03.2013) சென்னையில் காலமானார். இவர் சில வருடங்களாக திரைப்படவாழ்வில் இருந்து ஒதுங்கி அமெரிக்காவில் தனது பிள்ளைகள், பேரப்பிள்ளைகளுடன் வாழ்ந்து வந்தார். அமெரிக்காவில் குளிர்காலம் ஆரம்பிக்கிற போது சென்னைக்கு வந்து விடுவார். பின்னர் வெயில் அடிக்கிற போது அமெரிக்கா சென்று விடுவார். அவ்வாறு சென்னைக்கு வந்த விதத்தில் தான் நோய்வாய்ப்பட்டு இறந்துள்ளார். இவரது திருமணம் காதல் திருமணமாகும். தெலுங்கு திரைப்படத்தில் பெரும் இயக்குநராக வலம் வந்தவர் சி.புல்லையா. இவரது மகன் ராவ். இவரும் திரைப்பட இயக்குநர். ராவைத் தான் ராஜசுலோச்சனா காதலித்து திருமணம் செய்து கொண்டார். 7 வருடங்களுக்கு முன்னர் ராவ் இறந்துவிட்டார்.

இவரது பூர்வீகம் ஆந்திராவில் உள்ள சித்தூர் 1935 இல் பிறந்தவர். தாத்தா காலத்திலேயே இவரது குடும்பம் சென்னைக்கு குடிபெயர்ந்து திருவெல்லிக்கேணியில் வாழ்ந்துவந்துள்ளனர். அங்கிருந்த சரஸ்வதிகான சபாவில் முறையாக நாட்டியம் கற்றவர். அப்போது பிரபல்யமாக இருந்த குச்சுப்புடி நடனத்தையும் முறையாகக் கற்றவர். அக்காலத்தில் சினிமாவில் பெண்கள் நடிப்பது அபூர்வம். அதைவிட பெண்களுக்கு துணிச்சலும் இருக்கவில்லை. ஒருவித பயம் எங்கும் இருந்தது. இதையும் மீறி நாட்டியம் தெரிந்த ஒரு சில பெண்கள் தான் சினிமாத்துறைக்கு நுழையக்கூடிய வாய்ப்புகள் உருவானது.

ஏ.வி.எம் பட நிறுவனத்தினர் கன்னடத்தில் ‘சத்திய சோதனை’ என்கிற படத்தை எடுக்கத் திட்டமிட்டிருந்தார்கள். இப்படத்தில் கதாநாயகியாக நடிக்க லலிதா என்பவரை ஒப்பந்தம் செய்யத் தீர்மானித்திருந்தார்கள். அப்போது தாம்பரம் லலிதா சிறந்த நாட்டியத் தாரகியாக விளங்கிவந்தார். இவர் பல்வேறு நாட்டிய நிகழ்ச்சிகளை நடத்திவந்தவர். அப்போது இந்த லலிதாவுடன் இணைந்து ராஜசுலோச்சனாவும் ஒரு சில நாட்டிய நிகழ்ச்சிகளையும் நடத்தி வந்தார். அவ்வாறான நாட்டிய நிகழ்ச்சியொன்றுக்கு லலிதாவை திரைப்படத்தில் நடிக்க ஒப்பந்தம் செய்ய இயக்குனர் சின்ஹா வந்திருந்தார். அப்போது அந்த நிகழ்ச்சியில் தான் நாட்டியமாடிய ராஜசுலோச்சனாவை







கலையுலகம்



இயக்குனர் கண்டுபிடித்தார். இவரை கதாநாயகியாக ஒப்பந்தம் செய்ய முடிவு செய்துவிட்டார். ஏ.வி.எம். செட்டியாரையும் ராஜசுலோச்சனா பெற்றோரையும் இயக்குநர் சந்தித்து சம்மதம் வாங்கி கதாநாயகியாக திரைப்படத்தில் அறிமுகமாக்கிவிட்டார். பின்னர் நடிகர் ராஜசுலோச்சனா சினிமாத்துறையில் படிப்படியாக உள்வாங்கப்பட்டார்.

தனது 17 ஆவது வயதில் நடிக்க ஆரம்பித்தார். எம்.ஜி.ஆர், சிவாஜி, ஜெமினி என்று அந்தக் காலத்து கதாநாயகர்களுடன் நடித்தார். 1950, 1960 களில் அஞ்சலி தேவி, பத்மினி, ராஜசுலோச்சனா என்ற தலைமுறைகள் உருவாகிவிட்டனர். ராஜசுலோச்சனா தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், இந்தி முதலான மொழிப்படங்களில் நடித்தார். கிட்டத்தட்ட 850 படங்களுக்கு மேல் நடித்துள்ளார்.

இவர் நடித்த தமிழ்ப் படங்களில் வேலைக்காரன் (1953) ரோகினி (1953) ஆசை அண்ணா அருமைத் தம்பி (1955)குலேபகாவலி (1955) ரங்கோன் ராதா (1956) அலாவுதீனும் அற்புத விளக்கும் (1957) வணங்காமுடி (1957) சாரங்கதாரா (1958) தாய் மகளுக்கு கட்டிய தாலி (1959) சங்கிலித்தேவர் (1960) நல்லவன் பாலா (1961) சேரம் செங்குட்டுவன் (1960) இப்படி பல்வேறு படங்களில் நடித்து புகழ்பெற்றார்.

திரையுலகில் இவரது நடனத்துக்கென்று ரசிகர் கூட்டம் இருந்தது. ‘அமுதும் தேனும் எதற்கு’, ஆசையும் என் நேசமும் இரத்தபாசத்தில் ஏங்குவதைப் பாராயடா? போன்ற பாடல்களுக்கு இவர் ஆடிய நடனம் புகழ்பெற்றது. அரசிளம்குமரி, குலேபகாவலி முதலான படங்களில் இவரது நடிப்பு மறக்கக்கூடியதல்ல. இவரது உடல் மொழி தனியாக அடையாளப்படுத்தும். நாட்டியத்தை முறையாகக் கற்றமையினால் பாத்திரங்களுக்கு ஏற்ற உடல் மொழி இவரிடமிருந்து பல்வேறு வகையில் வெளிப்பட்டது. அக்காலத்தில் நடி



கர்கள், நடிகைகள் தாமே தமிழில் பேசி நடிக்க வேண்டி இருந்தது. இதனால் வசன உச்சரிப்பும் நடிப்பும் முகபாவனையும் இணைந்து சமவிகிதத்தில் தொழிற்பட வேண்டி இருந்தது. ராஜசுலோச்சனாவின் நாட்டிய பாவனை நடிப்பு பின்புலத்தின் இயல்பாக புதுப்பரிமாணமாக வெளிப்பட்டது. அரச பாத்திரங்கள் மட்டுமல்ல குடும்ப பாத்திரங்களும் இவரது திறமையை நன்கு வெளிப்படுத்தின.

ஜெயசங்கர் நடித்த ‘துணிவே துணை’ என்ற படத்தில் இவர் வில்லியாக நடித்தார். ‘படித்தால் மட்டும் போதுமா?’ என்ற படத்தில் சிவாஜியை வெறுக்கும் திமிர்த் தனமான பாத்திரத்தை ஏற்று நடித்தார். இதைவிட எம்.ஜி.ஆர். நடித்த ‘இதயக்கனி’ படத்தில் வில்லிவேடம் ஏற்றார். உண்மையில் ஆண் வில்லன்களான பி.எஸ்.வீரப்பா, எம்.என்.நம்பியார், ஆர்.எஸ்.மனோகர், அசோகன், ராம்தாஸ், கண்ணன் முதலானவர்களுக்கு ஈடாக இவர் வில்லிப் பாத்திரம் ஏற்று நடிக்கும் துணிச்சல் கொண்டவராக விளங்கினார். ஆர்ப்பாட்டம், கத்தல் என்று இல்லாமல் இயல்பாக முகபாவனை நடத்தைக் கோலங்கள் மூலம் வில்லித்தனத்தை வெளிப்படுத்தும் ஆற்றல் இவரிடம் இருந்தது. திரையுலகில் பெண் வில்லிகள் உருவாவதற்கான களம் அடையாளம் காணப்படுவதற்கும் இவரே காரணமாகியுள்ளார் எனக் கூறலாம். இன்று தொலைக்காட்சி நாடகத் தொடர்களில் பெரும்பாலும் பெண் வில்லிகளின் ஆக்கிரமிப்பு அதிகம் என்றே கூறலாம். இவர்கள் யாவருக்கும் முன்னோடியாக திரையுலகில் மாறுபட்ட கதாப்பாத்திரத்தை வெளிப்படுத்தி அதற்கான வெளியில் இறங்கிய பெருமை ராஜசுலோச்சனாவிற்கு உண்டு. இவர் வெளிப்படுத்தும் வில்லிப்பாத்திரம் உணர்ச்சி, மோதுகை, உடல் மொழியில் ஏற்படும் இறுக்கம், சரிவு யாவும் சமநிலையாக வெளிப்படுத்துவதில் தனிக்கவனம் செலுத்தினார். ‘நல்லவன் வாழ்வான்’ படத்தில் இவர் பாடிய ‘குற்றாள அருவியிலே குளித்தது போல் இருக்குதா’ என்ற பாட



லும் கைதி கண்ணாயிரம் படத்தில் கொஞ்சி கொஞ்சிப் பேசி மதிமயக்கும் வஞ்சகனின் உள்ளம் வலை விரிக்கும் போன்ற பாடல்கள் இவருக்கு பெரும் புகழைப் பெற்றுக்கொடுத்தது.

ஒரு நல்ல இயக்குநர் தனது திரைக்கதைக்கு கதாப்பாத்திரத்தை அதன் போக்கில் உலவ விடுவார். கதைக்குள் இருக்கிற அவரது வாழ்க்கைப் பிரச்சினை சார்ந்து அவர்களுக்கு வேறு நிர்ப்பந்தங்களை இயக்குநர் விதிப்பதில்லை. இதனால் தான் ராஜசுலோச்சனா போன்ற நடிகைகள் தமது ஆளுகையை வெவ்வேறு

பரிமாணங்களை வெளிப்படுத்த முடி ந்துள்ளது. இங்கு புதுப் புது தொழில்நுட்பம் தான் சினிமா என னும் அளவிற்கு நிலைமைகள் வளர் த்துவருகின்றன. ஆனால் திரைமொ ழியின் சாத்தியப்பாட்டின் எல்லைக ளைப் புரிந்து ஒவ்வொருவரது ஆளுமைகள் வெளிப்படுவதற்கான சாதகமாக திரைப்படச் சூழல் உரு வாக்கப்பட்டிருப்பதையும் நாம் மறுக்க முடியாது. இதனால் தான் ராஜசுலோச்சனா ஒரு நடிகையாக வெற்றிகரமாக உலாவர முடிந்தது. இவர் கடைசியாக நடித்து வெளி வந்த படம் சிம்பு நடித்த 'எங்க வீட்டு வேலன்' இதற்குப் பின்னர் திரையுலகில் இருந்து ஒதுங்கி அமெ ரிக்காவில் வாழ்ந்து நாட்டியப்பள்ளி வைத்து பிள்ளைகளுக்கு நாட்டியம் கற்றுக்கொடுத்து வந்தார். அந்தள விற்கு உடலை கட்டுக்கோப்புடன் வைத்து விட்டு வந்தார். வெளியில் இவர் செல்லும் போது உதட்டுச் சாயத்தில் இருந்து பட்டுப்புடவை வரை பார்த்துப் பார்த்து அணிந்து செல்பவர் காலில் சலங்கை கட்டிய காலத்தில் இருந்து சாப்பாட்டில் கவ னமாக இருந்தார். இதனாலேயே தனது உடம்பு ஆரோக்கியமாகவி ருந்ததென்று ஒரு பேட்டியில் குறிப் பிட்டிருந்தார். இரண்டு முறை மரணத்தைத் தொட்டு திரும்பி வந்தி ருக்கிறேன். அது எப்பவேனுமென் றாலும் திரும்ப வரலாம். அதுவ ரைக்கும் சந்தோசமாக இருப்பின் முடிந்தவரைக்கும் மற்றவர்களுக் கும் உதவியாக இருப்பேன் என்றும் கூறியிருந்தார். இன்று அரசிளங்கு மரி மறைந்துவிட்டார். ஆனால் தமிழ்த்திரையுலகில் ஆசையும் என் நேசமும் இரத்த பாசத்தினால் ஏங்கு வதைப் பாராயடா? என்று கேட்டுக் கொண்டிருப்பார். ■

- மயூரா

---

*(64ஆம் பக்கத்தொடர்ச்சி...)*

இடரீதியாக, மொழிரீதியாக உள்ள வேறுபாடுகள் இவற்றுக்குக் காரண மாகின்றன.

இவை ஒருபுறமிருக்க, முறைசாரா மற்றும் மறைநிலைக் கல்விச் செயற் பாடுகளில் முன்னேற்றங்கள் சரி யாக மதிப்பிடப்படுவதில்லை. பிள் ளைகளின் ஒழுக்க விழுமியங்களை மேம் படுத்துவதில் பெரும்பொ றுப்பை ஏற்கின்ற இவ்விடயங்கள் பாடசாலை களின் கவனத்திற்கு உட் படாத நிலையிலேயே பாடசாலைக ளில் விலகல் நடத்தைகள் உருவா கின்றன. கல்வியின் நோக்கம், அறிவும் திறனும் உடன்பாடான மனப்பாங்குகளையும் கொண்ட மற் றும் அவற்றை நடைமுறையில் கடைப்பிடிக்கின்ற தனியாள் மற்றும் சமூகத்தை உருவாக்குதலாகும் என் பது எல்லோரும் நன்கறிந்த விடய மாயினும் நடைமுறையில் இவை இல்லாமலிருப்பது கல்வியின் தராத ரத்தில் பெரும் வீழ்ச்சியென்றே குறிப்பிடுதல் வேண்டும்.

கல்விச் செயல்முறைகளின் தராத ரத்தை மேம்படுத்தும் நோக்கில் புதிய சீர்திருத்தங்களை அறிமுகப்ப டுத்தும் பொழுது அவற்றினைப் பாடசாலையில் நடைமுறைப்படுத் தும் ஆளணியினருக்குப் போதிய விழிப்புணர்வினை ஏற்படுத்துதல் இன்றியமையாதது. முக்கியமாக ஆசிரியர்களுக்குப் பொருத்தமான பயிற்சிகள் வழங்குவதுடன், அதி பர்களின் தலைமைத்துவப் பொறுப் புகள் வினைத்திறனுடையவையா கவும் சுதந்திரமாகவும் இடம்பெறுவ தற்கான ஒழு ங்குகள் உறுதிப்படுத் தப்படுதல் வேண்டும். பெற்றோரும் தமது வகிபாகத்தினை உணர்ந்து செயற்படுதல் முக்கியமானது. பாட சாலையின் செயற்பாடுகள் சமூக பொருளாதார மற்றும் அரசியல் தலையீடுகளால் சிக்கலடைகின்றன. இவற்றின் உதவியின்றிப் பாடசா லைகள் செயற்படமுடியாதெனக் காரணங் கற்பித்தாலும் தலையீடுக ளைக் குறைக்க வேண்டுமென இலங்கையின் கல்விச் செயற்பாடுக ளுக்கு உதவுகின்ற நிறுவனங்கள் விதந்துரைப்பவற்றைக் கவனத் தில் கொள்ளுதல் இன்றியமையாதது. ■


# நகைச்சுவை

## இராச வாழ்க்கை நடத்தியவர் இறுதியில் மாடிவீட்டு ஏழையாக மாண்டுபோன கதை. இதுவரை அறியப்படாத பெருவாரியான தகவல் களை உள்ளடக்கிய வாழ்க்கை வரலாறு நூல் வெளிவருகிறது

எம்.ஜி.இராமச்சந்திரனும் சிவாஜி கணேசனும் இருபெரும் கதாநா யகர்களாக தமிழ்த்திரையுலகில் ஆதிக் கம் செலுத்திய கால கட்டத்தில் அவர் கள் இருவரும் பெற்ற ஊதியத்துக்கு சமமான ஊதியத்தைக் கேட்டுப் பெற்ற ஒரு நகைச்சுவை நடிகர் இருந்தார். சில சந்தர்ப்பங்களில் எம்.ஜி.ஆரும் சிவாஜி கணேசனும் பெற்றதையும் விட கூடுதலான ஊதியத்தையும் கூட அவர் பெற்றிருக்கிறார். 1947ஆம் ஆண்டில் அவர் நடித்த முதல் பட மான தானா அமராவதியில் பாடல் களைப் பாடிய பெருமையைப் பெற்ற வர். ஆனால், இறுதியில் 1974 ஆம் ஆண்டில் ஒரு பிச்சைக்காரராக இறந்த அவரின் வாழ்வு அவர் இயக்கிய "மாடிவீட்டு ஏழை" என்ற படத்தின் பெயருக்குப் பொருத்தமானதாகவே அமைந்து விட்டது.

"நகைச்சுவைச் சக்கரவர்த்தி; ஜே.பி.சந்திரபாபு" என்ற தலைப்பில் காலஞ்சென்ற நகைச்சுவை நடிகர் சந்திரபாபுவின் வாழ்க்கை வரலாறு விரைவில் வெளியாகவிருக்கிறது. சந்திரபாபுவின் வீழ்ச்சிக்கு எம்.ஜி. ஆருக்கும் அவருக்கும் இடையே ஏற் பட்ட தகராறே வழிவகுத்தது. அந்தத் தகராறு பற்றிய விபரங்கள் உட்பட இதுவரை அறியப்படாத பெருவாரி யான தகவல்களை உள்ளடக்கிய இந் தச் சரிதையை சொர்ணராஜன் ரி.விக் டோரியா என்பவர் எழுதியிருக்கிறார்.

# சக்கரவர்த்தி; ஜே.பி.சந்திரபாபு


மனைவியுடன் சந்திரபாபு

இந்த நூல் பற்றிய செய்தியொன்றை அண்மையில் சென்னை இந்து பத்திரிகையில் கே.கோலப்பன் என்ற செய்தியாளர் எழுதியிருந்தார். அந்தச் செய்தியில் அவர் தெரிவித்திருக்கக் கூடிய சொற்ப விபரங்கள் சந்திரபாபு பற்றிய அந்த நூலை நிச்சயம் வாங்கி வாசிக்க வேண்டுமென்ற பெரும் ஆர்வத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

சந்திரபாபு வெறுமனே ஒரு நகைச்சுவை நடிகர் மாத்திரமல்ல, சிறந்த நடனக்காரர், பாடகர்.

இராச வாழ்க்கை நடத்திய சந்திரபாபு சென்னை கிறின்வேய்ஸ் ரோட்டில் 20 கிரவுண் நிலத்தை வாங்கி ஒரு வீட்டைக் கட்டினார். முதலாவது மாடிக்கு நேரடியாகவே காரை ஓட்டிச் செல்லக்கூடியதாக அந்த வீட்டை அவர் வடிவமைத்தார். ஆனால், ''மாடிவீட்டு ஏழை'' அவரின் எதிர்பார்ப்புகள், நம்பிக்கைகள் எல்லாவற்றையுமே சிதறடித்தது. பெரும் நெருக்கடிக்குள் அவர் மாட்டுப்பட்டார். நீதிமன்றம் அந்தச் சொத்தைப் பறிமுதல் செய்தது என்று நூலாசிரியர் சொர்ணராஜன் கூறியிருக்கிறார்.

மாடி வீட்டு ஏழை படப்பிடிப்பு ஆரம்பமாகி, சில காட்சிகளில் எம்.ஜி.ஆர். நடித்தார். ஆனால், படத்தைப் பூர்த்தி செய்ய முடியவில்லை. தட்டுங்கள் திறக்கப்படும் திரைப்படத்தின் இடைவேளையின் போது மாடிவீட்டு ஏழை விரைவில் வெளியாகும் என்று அறிவிப்பு காண்பிக்கப்பட்டது. ஆனால், ஒருபோதுமே அத்திரைப்படம் வெளிவரவில்லை.

சந்திரபாபு 76 படங்களில் நடித்துள்ளார். திரையுலகில் அவரது உயர்ச்சி அவருக்கு இருந்த பலதிறப் புலமை காரணமாக எட்டப்பட்டது. ஆடுவதிலும் பாடுவதிலும் சந்திரபாபுவிடம் அமெரிக்க நகைச்சுவை நடிகரான டானி காயேயின் ஆற்றல்கள் இருந்தன. அவரிடம் இன்னொரு அமெரிக்க நடிகரான ஜெரி லூயியின் முகபாவங்கள் இருந்தன. மேலும் சந்திரபாபுவின் உடல் மொழி இங்கிலாந்தில் பிறந்த அமெரிக்க நடிகரான பொப் ஹோப் பின் உடல் மொழியை ஒத்ததாக இருந்தது என்று வர்ணிக்கிறார் சொர்ண ராஜன்.

தென்னிந்தியாவின் தூத்துக்குடியில் ஜே.பி.ரொட்ரிகஸ் என்ற சுதந்திரப் போராட்ட வீரருக்கு மகனாகப் பிறந்த சந்திரபாபுவின் நிஜப் பெயர் ஜோசப் பனிமயதாசன் ரொட்ரிகஸ். சந்திரபாபு என்ற பெயர் அவருக்கு எவ்வாறு வந்தது என்பது இன்னமும் புரியாத புதிராகவே இருக்கிறது. என்றாலும், அவரை மக்கள் பாபு என்றே அழைத்தனர்.

சுதந்திரப் போராளியான கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரம் பிள்ளையின் நண்பரான தந்தையார் சென்னை மண்ணடியில் ''சுதந்திர வீரன்'' என்ற சஞ்சிகையொன்றை வெளியிட்டுக் கொண்டிருந்தார். பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிராக போராட்டங்களில் இறங்கியமைக்காக தந்தையாரை வெள்ளையர் ஆட்சி இலங்கைக்கு அஞ்ஞாதவாசத்துக்கு அனுப்பிவைத்தது. தன்னை முதலில் ''ஜே.கே'' என்று அழைத்தவர் சந்திரபாபுவே என்று எழுத்தாளர் ஜெயகாந்தன் கூறுகிறார்.

சந்திரபாபுவைப் பற்றி ஐயத்துக்கு இடமானதும் ஏற்கப்படமுடியாததுமான சில கதைகள் உண்டு. தனது திருமண தினத்தன்று முதலிரவு மண மகள் தனக்கும் வேறு ஒருவருக்கும் இடையில் இருந்த காதலைப் பற்றிக் கூறவே, உடனடியாக சந்திரபாபு அவளை காதலனுடன் இணைந்து கொள்ள அனுமதித்தார் என்பது அத்தகைய கதைகளில் ஒன்று. ஆனால், இந்தக் கதைக்கு ஆதாரம் இல்லை. அவர்கள் இருவரும் 6 மாதங்கள் ஒன்றாக வாழ்ந்தார்கள். பெங்களூரில் தேனிலவைக் கழித்தார்கள். ஆனால், மனைவி தனது காதலனுடன் வாழ்ந்தால் சந்தோசமாக இருப்பாள் என்பதை உணர்ந்து கொண்ட போது பிரிந்து போவதற்கு சந்திரபாபு இணங்கிக் கொண்டார் என்று செ ார்ணராஜன் கூறுகிறார்.

சந்திரபாபு மிகுந்த பெருந்தன்மை கொண்ட மனிதர். தன்னலம் மறந்தால் பெரும் பேரின்பம் என்ற பாடலின் வரிகள் அவரின் குணாதிசயத்தை உருவகப்படுத்தி நிற்கின்றன.

சிவாஜி கணேசனின் செலவிலேயே சந்திரபாபுவின் மரணச் சடங்கு நடைபெற்றது. மரணச் சடங்கின்போது சந்திரபாபுவின் தந்தையார் ரொட்ரிகஸுக்கு ஆறுதல் கூற முயற்சித்த குடும்ப நண்பரான காமராஜர் தானே நிலை குலைந்து அழுதுவிட்டார் என்று சொர்ணராஜன் கூறியிருக்கிறார். சந்திரபாபுவின் பூதவுடல் சென்னை குயிபிள் தீவில் உள்ள சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது. ■

## கடைசிப் பக்கம்

# இலங்கையில் கல்வியின் தராதரம்

கல்வி முறைமையொன்றின் தராதரமானது இரண்டு அடிப்படைகளில் நோக்கப்படுகின்றது. 1) அளவுசார் தராதரம். 2) பண்புசார் தராதரம். இலங்கையைப் பொறுத்தவரையில் அளவுசார் தராதரத்துக்கான குறிகாட்டிகள் உயர்நிலையில் உள்ளன. சான்றாக, இலங்கையிலுள்ள பாடசாலைகளின் தொகை (9716), மாணவர் தொகை (3.9மில்லியன்), ஆசிரியர் தொகை (2,15,000) எழுத்தறிவு (91.7%), ஆரம்பக் கல்வி வட்டத்தைப் பூர்த்திசெய்வோர் (98%), இடைநிலைக் கல்வி வட்டத்தைப் பூர்த்தி செய்வோர் (85%), ஆசிரியர் மாணவர் விகிதம் (1 : 20) என்பன உயர் மட்டத்திலுள்ளன. ஆயினும், பண்புசார் தரவிருத்தி தொடர்பாகப் பல விமர்சனங்களை எதிர்கொள்கின்றமை பெரும் சவாலுக்குரிய விடயமாகும்.



பேராசிரியர்
மா.கருணாநிதி

தரமான கல்வியைப் பெறுதல் ஒவ்வொரு பிள்ளைக்குமுரிய உரிமையாகும். இலங்கையின் கல்விக் கொள்கையில் இனம், மதம், மொழி, பிரதேசம், சமூகம் மற்றும் பொருளாதாரம் என்ற அடிப்படைகளில் வேறுபாடுகளின்றி கற்கும் ஆற்றலுள்ள பிள்ளைகள் அனைவரும் கல்வி பெறும் உரிமையுடையவர்கள் என்பது தெளிவாக எடுத்துக்காட்டப்பட்டிருப்பினும் வேறுபாடுகளைக் குறைப்பதற்கு எடுக்கப்படும் முயற்சிகளில் இன்னும் முன்னேற்றங்கள் தேவை.


தரமான கல்வி என்னும் விடயமானது, பிள்ளைகளின் அடிப்படைத் தேவைகள், ஆரோக்கியம், போசா க்கு, விருப்பத்துடன் கல்வியில் பங்கேற்றல், பாதுகாப்பான கற்கும் சூழல், ஆகிய விடயங்களில் முதன்மையான கவனம் செலுத்துகிறது. மேலும் போதிய வளங்களையும் வசதிகளையும் அனுபவித்தல், பால்நிலை சார்ந்த கவனங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. இவற்றோடு கலைத்திட்ட உள்ளடக்கம், பிள்ளைகளின் அடிப்படைத் திறன்களை விருத்திசெய்வதற்கான சாதனங்கள் கிடைத்தல், வாழ்க்கைக்கு அத்தியாவசியமான எண்ணறிவு மற்றும் எழுத்தறிவுத் திறன்கள், தேசிய ஒற்றுமை, கற்றல் - கற்பித்தல் முறைகளில் முன்னே ற்றம், கற்றல் - கற்பித்தலுக்கான சூழலுடன் கூடிய வகுப்பறை, கற்றலை வசதிப்படுத்தும் கணிப்பீட்டு முறைகள் மற்றும் பாடசாலைகளுக்கு இடையில் நிலவும் வேறுபாடுகளைத் தவிர்த்தல் முதலிய விடயங்களில் முன்னேற்றம் ஆகியவற்றையும் வலியுறுத்திவருகின்றது.

இலங்கையின் கல்விமுறைமை யைப் பொறுத்தவரையில் மேற்கூறிய விடயங்களையிட்டுப் பல நடவடிக்கைகள் எடுக்கப்படுவதனால் முன்னேற்றங்கள் ஏற்பட்டுவந்தாலும் அநேகமான விடயங்களில் மாற்றங்கள் அவசியமாகின்றன. அண்மைக் காலங்களில் மாணவர்களின் பொதுப் பரீட்சை முடிவுகளில் முன்னேற்றங்கள் நிலவுவது தராதரம் குறித்த ஒரு சாதகமான செல்நெறியாகும். எனினும், பொதுப்பரீட்சை முடிவுகள் மட்டும் தராதர மேம்பாட்டினை முழுமையாகப் பிரதிபலிப்பதில்லை. பொதுப் பரீட்சை முடிவுகளைப் பொறுத்தவரையில் பாடசாலைகள் ஒரு பக்கப் பார்வையையே செலுத்துகின்றன. பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களில் எத்தனை சதவீதத்தினர் உரிய தேர்ச்சிகளின்றி சகல பாடங்களிலும் சித்தியடையாமல் உள்ளனர் போன்ற தகவல்கள் வெளிவருவதில்லை. பாடசாலைகளின் பெறுபேறுகள் தொடர்பில் முழுமையான உரிமையைக் கோருவதற்கும் இடமற்றநிலை காணப்படுதல் கல்வியில் பாடசாலையல்லாத நிறுவனங்கள் செல்வாக்கு மேலோங்குவதற்கு இடமளிக்கிறது.

பாடசாலையில் சேராத பிள்ளைகள், சேர்ந்த பின்னர் இடையில் விலகும் பிள்ளைகள், பல வருடங்கள் கற்றபின்னரும் ஒழுங்காக எழுத- வாசிக்கத் தெரியாத பிள்ளைகள், கணிசமான அளவில் உள்ளனர். பாடசாலைகளில் பல ஆண்டுகள் பயின்ற பின்னரும் அக் கல்வியினால் எவ்வித பயனுமில்லை, வாழ்க்கைச் சவால்களை எதிர்கொள்ளக் கூடியதாக இல்லை, தொழில் எதிர்பார்ப்புகளுக்குரிய ஆற்றல்கள் விருத்திசெய்யப்படவில்லை என்றவாறு பல எதிர்மறையான கருத்துகள் இளைஞர்களிடமிருந்து வெளிவருதல் கல்வி முறைமையின் தராதரம் பற்றிய விடயத்தில் கவனத்தைத் தூண்டுகிறது. பாடசாலைகளில்

*(62ஆம் பக்கம் பார்க்க...)*


இளைஞர்களின் மனங்கவர் பத்திரிகை
இப்பொழுது புது மெருகுடன்
Metro
மெட்ரோ News
It's Hot
www.metronews.lk





All Models of Computer printer Ribbons

Electronic Typewriter Ribbons

Inkjet Cartridges, Inkjet Refills

Laser Printer Toners,

Digital Duplicating Inks, Black & Colour





Digital Stencil Master Rolls

Photocopy Papers, Roneo Papers

Toner for any copies

Computer Accessories & Papers





Fax Papers, Fax Ink Film Rolls & Cartridges

Paper, Board Packing Materials

All types of Office Stationery







# Rainbow Stationers (Pvt) Ltd.

**IMPORTERS, DEALERS IN PAPER & STATIONERY**

No. 18, Maliban Street, Colombo 11, Sri Lanka.

Voice : 2433906 (Hunting) 2433907, 2433908 Fax : +94 11 2433904

e-mail: rainbowst@sltnet.lk Website : www.rainbowsts.com

***Join the Largest Stationery House***



Printed and published by Express Newspapers (Ceylon)(Pvt)Ltd,at No.185,Grandpass road,Colombo -14, Sri Lanka.